
# பொருளியல் நோக்கு

1984
ஜனவரி - மார்ச்




இலங்கையின் பொருளாதாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார குறிகாட்டிகள்


"நாம் கணிசமான அளவு சாதனைகளை எட்டியிருந்த போதிலும், பிரமாண்டமான பொருளாதாரப் பிரச்சினைகள் இன்னமும் இருந்து வருகின்றன. இத்தகைய நிதி, பொருளாதார கஷ்டங்களை மறைப்பதற்கோ, இவற்றை வெற்றி காண வேண்டுமானால் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருக்கும் கடினமானதும், துன்பமானதுமான தீர்மானங்களை சொல்லாமல் இருக்கவோ நான் ஒரு போதும் முயன்றதில்லை."


நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் அரசாங்க அதிபர்களுக்கு மத்தியில் உரை நிகழ்த்தும் போது 1984 ல் நாட்டின் பொருளாதாரம் குறித்து மேற்கண்டவாறு வெளிப்படையாகவே சொன்னார். நாட்டின் பொருளாதாரம் குறித்த எமது விசேஷ அறிக்கை இந்நிலைமையை தெளிவு படுத்துகிறது.





செலாவணி விகிதங்கள்
சதவீத மாற்றம்


அரசாங்கம் 1978 ல் நடுத்தர கால மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி இலக்காக 5.2 சத விகிதத்தை குறித்திருந்தது. அடுத்து வந்த நான்காண்டு காலத்திலேயே இவ்விலக்கு தாண்டப்பட்டது. ஆனால், 1983 ல் பதிவு செய்யப்பட்ட விகிதம் இக்கால கட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மிகக்குறைந்த வளர்ச்சி விகிதாசாரமாக இருந்தது. இப்பக்கத்திலுள்ள பொருளாதார குறிகாட்டிகள் இதற்கான காரணங்களை தெளிவுபடுத்துகின்றன. ஜூலைக்கலவரங்கள், சீரற்ற காலநிலை போன்ற சில எதிர்பாராத காரணிகள் சாதாரண பொருளாதார நடவடிக்கைகளை தடைப்படுத்தின. 1983 ல் உள்ளூர் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்து வந்தன; கொடுகடனில் ஏற்பட்ட கணிசமான அளவு விஸ்தரிப்புடன் சேர்ந்து, 1983 ன் இறுதியில் சிறந்த தேயிலை விலைகள் காரணமாக உருவாக்கப்பட்ட திரவத்தன்மையும் பொருளாதாரத்தின் மீது வீக்கத்தாக்கங்களை ஏற்படுத்தின. சென்மதி நிலுவை மீதான அழுக்கங்கள் காரணமாக ஏனைய பிரதான சர்வதேச நாணயங்களுடனான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. விவசாயத்துறையில் - குறிப்பாக நெல் உற்பத்தியில் - ஏற்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாகவே பொருளாதாரத்தில் 1983 ல் பதிவு செய்யப்பட்ட 4.9 சத விகித வளர்ச்சி சாதிக்கப்பட்டது. அதே வேளையில் தேயிலை உற்பத்தியும், ஏற்றுமதி வருமானங்களும் சாதனை மட்டங்களை எய்தி சென்மதி நிலுவைக்கஷ்டங்களை தணிக்க உதவியதுடன், வெளிநாட்டுக்கடன்கள் மூலவள இடைவெளியை அடைப்பதில் தொடர்ந்து பங்காற்றின.








மொத்த விலைச்சுட்டெண்
1974 = 100
மாதாந்தம்




பண்ட ஏற்றுமதியும்
இறக்குமதியும்
மாதாந்தம்

வெளிநாட்டுக்கடன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1272

மலர் 9 இதழ் 10—12 ஜனவரி மார்ச் 1984

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சிலகாரணங்களினால் பிரசுரம் தாமதமடைந்து வந்துள்ளது. அதனால் இம் முறை மூன்று இதழ்களை (ஜனவரி— மார்ச் 1984) ஒருங்கிணைத்து வெளியிடுகிறோம். இதன் பின்னர் மாதாந்த அடிப்படையில் வெளியீடு தொடரும். எவ்வாறிருப்பினும், எமது சந்தாதாரர்களுக்கு வருட சந்தாவுக்கு 12 தனித்தனி இதழ்கள் அனுப்பி வைக்கப்படும். வெளியீடு தாமதமாகி வந்ததனால் 1984 மார்ச்சின் பின்னர் கிடைத்த சில புள்ளி விவரங்களையும் நாம் (சில இடங்களில்) பயன்படுத்தியுள்ளோம்.

## நிரல்

நிகழ்ச்சிக் குறிப்பேடு 2 ஜனவரி / மார்ச் 1984

## விஷேச அறிக்கை

3 1983ல் இலங்கைப் பொருளாதாரம்

## சிறப்புக் கட்டுரைகள்

றொனி டி மெல் 18 அரசாங்க முதலீடு தொடர்பான முன்னுரிமைகளும் தனியார் துறையின் எதிர்பார்ப்புக்களும்

என். என். சச்சிதானந்த் 24 சலுகையளிக்கப்பட்ட ஏற்றுமதி வலயங்கள் — இந்திய அனுபவம்

பி. கி. எச். ரணசிங்கா 28 கொழும்பு நகரில் போக்குவரத்து நெருக்கடியும் தனியார் வாகனங்களும்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின்சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

## அடுத்த இதழில்

- இலங்கையில் கனிப்பொருள் வளங்களும் அவற்றின் அபிவிருத்தியும்
- அபிவிருத்தியில் வங்கிகளின் பங்கு
- இலங்கையில் கல்வி—சில குறிப்புக்கள்
- 1984க் கான முன்னுரிமைகள்—உலக வங்கியின் கண்ணோட்டம்

அட்டைப் படம்
வடிவமைப்பு : பாலித்த கன்னங்கரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

**ஜனவரி**

1. உலகச் சந்தையில் தேயிலை பெற்றுவருகின்ற சிறந்த விலைகளிலிருந்து பயன்பெறும் வகையில் தேயிலை உத்தரவாத விலையையும், தேயிலை வரி விகிதாசாரத்தையும் உயர்த்தியிருப்பதாக அரசாங்கம் அறிவித்தது. ஒரு கி. கிராம் தேயிலையின் உத்தரவாத விலை ரூபா 26இலிருந்து ரூபா 28 ஆகவும், வரி விதிக்கப்படும் ஆரம்ப விற்பனைக்குரிய பொது வரி விகிதாசாரம் 35 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாகவும் மீதிப் பகுதியின் வரி 40 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூபா 65 கோடி மேலதிக வருமானம் பெறலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

9. அவுஸ்திரேலியாவின் 1983-84 உணவு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 5,500 மெட்ரிக் தொன் கோதுமையை உதவியாக அளிப்பதற்குரிய ஒப்பந்தத்தில் அவுஸ்திரேலியாவும் இலங்கையும் கைச்சாத்திட்டன. இந்த நன்கொடை 915,000 அவுஸ்திரேலிய டொலர்கள் (ஏறக்குறைய ரூபா 2.1 கோடி) என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனை விற்பதன் மூலம் திரட்டப்படுகின்ற ரூபா நிதி, குறிப்பாக அடையாளம் காணப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

11. இலங்கை 39 பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைகளை திருத்தியமைத்துள்ளது. இவற்றுள் 34 பொருட்கள் மீதான தீர்வை குறைக்கப்பட்டுள்ளது. மிகுதி ஐந்து பொருட்கள் மீதான தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஹைட்ரோலிக் பிரேக் எண்ணெய், வெட்டு இயந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள், தள்ளு வண்டிகள், மீன்பிடி இழுவைப் படகுகளும் கப்பல்களும். தீர்வை குறைக்கப்பட்ட பொருட்களும் தீர்வை விகிதாசாரமும் பின்வருமாறு: வெப்பமூட்டப்பட்ட நீர்களும் மதுசாரம் அல்லாத குடிவகைகளும் 100 சதவீதத்திலிருந்து 60 சதவீதம், சொட் 500 சதவீதத்திலிருந்து 250 சதவீதம், வாசனைப் பூச்சுக்கள், வாசனை போன்றன 85 சதவீதத்திலிருந்து 60 சதவீதம், சலவை நீலம் 85 சதவீதத்திலிருந்து 60 சதவீதம், வாசனையூட்டப்பட்ட திரவங்களும் லொவெண்டர் நீரும் 500 சதவீதத்திலிருந்து 150 சதவீதம்; ஓ டி கொலோன் 300 சதவீதத்திலிருந்து 150 சதவீதம், பற்பசைகளும் சாம்பூவும் 100 சதவீதத்திலிருந்து 60 சதவீதம், கழுவு பொருட் தயாரிப்புகள் 100 சதவீதத்திலிருந்து 60 சதவீதம், பாத அணி, தளபாட மினுக்கிகள் போன்ற பொருட்களும் தயாரிப்புப் பொருட்களும் 100 சதவீதத்திலிருந்து 60 சதவீதம்.

16. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் செயற்படத் தொடங்கியது. வீடுகள், மாடி வீடுகள், ஏனைய பொருத்தமான வசிப்பிடங்கள் என்பவற்றை நிர்மாணிப்பதற்கோ அல்லது கொள்வனவு செய்வதற்கோ அங்கத்தவர்களுக்கு முற்பணங்களை அளிக்கும் நோக்கத்துடன் அதன் அங்கத்தவர்களிடமே நிதி திரட்டும் வகையில் 1984ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு கட்டடச் சங்கமே இக் கூட்டுத்தாபனமாகும். தேசிய வீடமைப்பு அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், பொது வசதிகள் சபை என்பவற்றின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட இக் கூட்டுத்தாபனம் தனியார் துறைப் பங்கெடுப்புடன் நிருவகிக்கப்படும்.

23. அரிசி, கோதுமை மா, பாண் என்பவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாக உணவு ஆணையாளர் அறிவித்தார். அரிசி ஒரு கி. கிராம் 15-35 சதம் வரையிலும், கோதுமை மா ஒரு கி. கி. 65 சதத்தினாலும் பாண் 450 கிராம் 35 சதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**பெப்ரவரி**

3. வைப்புச் சான்றிதழ்களின் விநியோகத்தை நிறுத்துமாறு மத்திய வங்கி, வணிக வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கியது. இது நாணயச் சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தியதால் மத்திய வங்கி இத் தீர்மானத்தை எடுத்தது. கறுப்புப் பணத்தை வெளிக்கொணரும் நோக்கத்துடனேயே இது ஆரம்பிக்கப்பட்டது. வைப்புச் சான்றிதழ்களின் விநியோகம் நிறுத்தப்பட்டபோது ரூபா 90 கோடி நிலுவையாக இருந்தது.

7. மகாவலி அபிவிருத்திப் பிராந்தியத்தில் மின்சாரத் தொகுப்புத் திட்டம் ஒன்றினை நிறைவேற்றுவதற்கு 46 லட்சத்து 50 ஆயிரம் கனேடிய டொலர்களை நன்கொடையாக அளிப்பது தொடர்பாக இலங்கை, கனேடிய அரசாங்கங்களுக்கிடையில் கடிதப் பரிமாற்றம் இடம்பெற்றது.

8. 12,163 மில்லியன் (ஏறக்குறைய ரூ. 132.2 கோடி). ஜப்பானிய யென்களுக்கும் கூடுதலான இரு கடன்களுக்கான ஒப்பந்தத்தில் இலங்கை, ஜப்பானிய அரசாங்கங்கள் கைச்சாத்திட்டன. இவ் அளவிற்கும் கூடுதலான தொகை தொலைத் தொடர்புத் துறை விஸ்தரிப்பு திட்டத்திற்குரிய செயற்திட்டக் கடனாகும்; மீதி பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான பல்வேறு பண்டங்களையும் கொள்வனவு செய்வதற்குரிய பண்டக் கடனாகும்.

20. சீனியின் உலகச் சந்தை விலை வீழ்ச்சியின் விளைவாக ஒரு கி. கி. சீனியின் விலை 40 சதத்தினால் குறைக்கப்படுகிறது என உணவு ஆணையாளர் அறிவித்தார். இதன் விளைவாக ஒரு கி. கி. சீனியின் மொத்த விலை ரூபா 11.75 ஆக விருப்பதுடன் சில்லறை விலை ரூபா 12.65இலிருந்து 12.25 ஆகக் குறைக்கப்பட்டது.

22. பண்டங்கள் நிவாரண உதவியாக 291.45 மில்லியன் ஜப்பானிய யென்களை (ஏறக்குறைய ரூபா 3.1 கோடி) உதவியாக அளிப்பது தொடர்பாக இலங்கை, ஜப்பானிய அரசாங்கங்களுக்கிடையில் கடிதப் பரிமாற்றம் இடம்பெற்றது. ஜப்பானிய அரசாங்கத்தால் இலங்கை அரசாங்கத்திற்கு அளிக்கப்படும் பண்டங்கள் நிவாரண உதவி வரிசையில் இது ஆறாவதாகும். 1982 ஒக்டோபர் 1—1983 செப்டம்பர் 30 கால கட்டத்தில் செலுத்தப்பட்டுள்ள உயர் வட்டி விகிதாசாரங்களுக்கும் அக் காலத்தில் அளிக்கப்பட்ட கடன்கள் மீது விதிக்கப்பட்ட குறைந்த வட்டி விகிதாசாரத்திற்கும் இடையிலான வேறுபாட்டை இது பிரதிபலிக்கின்றது. இந்த உதவிப் பணமும் அதன் இரண்டையும் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான பல்வேறு பண்டங்களையும் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும்.

**மார்ச்**


11. சாதகமற்ற நிதி, பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் மத்திய வங்கி, தொடர்ச்சியான நிதிக் கொள்கைகளை அறிமுகம் செய்தது. குறிப்பாக பணவீக்க மாற்றங்களைப் பதிவு செய்யப்பட்ட நிதி விஸ்தரிப்பு 1984 ஜனவரியில் முடிவடைந்தது.


12. உலக சந்தையில் வீழ்ச்சியடைந்து வருகின்ற சீனி விலைகள் உள்ளூர் சீனிக் கைத்தொழிலைப் பாதிக்காதிருப்பதற்கு அரசாங்கம் ஒரு கி. கி. சீனியின் மீதான தீர்வையை ரூபா 3-50 ரூபா 4-50 ஆக அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளது.


ஒரு கி. கி. சீனியின் மொத்த விற்பனை விலையை 25 சதத்தினாலும் (ரூபா 11-50) வழங்கல் நிலைய விலையை 25 சதத்தினாலும் (ரூபா 11-00) உணவு ஆணையாளர் குறைத்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையின் பொருளாதாரம் - 1983

1983ம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரச் செயற்பாட்டை முன்னைய வருடங்களின் செயற்பாட்டுடன் ஒப்பிடுவது கடினமாகும். ஏனெனில், இது பல வழிகளில் பொருளாதாரத்துக்கு ஓர் அசாதாரண வருடமாக இருந்தது. அபிவிருத்தியடைந்த நாடுகளைப் பாதித்து, இலங்கையின் வர்த்தக மாற்று வீதங்களின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்திய பொருளாதாரப் பின்னடைவு படிப்படியாக மறைந்து வந்த அதே வேளையில், பாரதூரமான முக்கியத்துவமுள்ள ஒரு சில சம்பவங்கள் (உள்நாட்டில்) நடைபெற்றன. 1983-ம் வருட முதற் பகுதியில் அரசாங்கத்தின் புதிய பதவிக் காலத்துடனும், குட்டிப் பொதுத் தேர்தலோடும் அச்சம்பவங்கள் ஆரம்பமாயின. மேலும், ஆண்டின் ஆரம்பத்தில் வறட்சி நிலைமைகள் ஏற்பட்டதன் விளைவாக விவசாயத்துறையில் வளர்ச்சி விகிதம் குறைந்தது. எனினும், பொருளாதாரத்தை ஆழவும் குழப்பியது ஜூலை மாதக்கடைசி வாரத்தில் ஏற்பட்ட கலவரங்களாகும். அப்போது உப நகரப் பகுதிகளில் பல தொழிற்சாலைகளும், கடைகளும், வீடுகளும், பண்டசாலைகளும், வாகனங்களும் நாசமாக்கப்பட்டன. இதையடுத்து, குறுகிய வேலை நேரங்கள் மேற்கொள்ளப்பட்டன. வழமையான நடவடிக்கைகள் பொதுவாக நிலைகுலைந்தன. இந்நிலைமை மேலும் ஒருசில வாரங்கள் நீடித்தது. போக்குவரத்துத் துறையிலும் நடவடிக்கைகள் தற்காலிகமாக வீழ்ச்சியுற்றன; கட்டட நிர்மாண நடவடிக்கைகளும் பொதுவாக மந்தமடைந்தன. சேவைத்துறையும்—குறிப்பாக உல்லாசப் பயணத்துறை குறிப்பிடத்தக்கவாறு பாதிக்கப்பட்டது. இதேவேளையில், மற்றும் உப துறைகள் புறக்கணிக்கப்பட்டு பாதுகாப்பின் பேரிலும், கஷ்ட நிவாரண நடவடிக்கைகளின் மீதும் அரசாங்கச் செலவுகளை அதிகரிக்கவேண்டியிருந்தது. அதனால், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 4.9 சதவிகிதமாகக் குறைந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. இது 1977ம் ஆண்டுக்குப்பின் ஆகக்குறைந்த வளர்ச்சி விகிதமாகும். இந்தப் பிரச்சினைகளுடன் சேர்ந்து நிலைமையை மேலும் மோசமாக்கியவை. ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய ஸ்திரமற்ற சென்மதி நிலுவைகளும், முன்னெப்போதும் காணாத நாணய விரிவுமாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருடாந்த வளர்ச்சி விகிதம் 1978ம் ஆண்டில் ஆக உயர்ந்த புள்ளியான 8.2 சதவிகிதத்தை எட்டியது; ஆனால், அதனபின் படிப்படியாக வீழ்ச்சியுற்றது. எனினும், 1978ம் வருடம் முதல் 1983ம் வருடம் வரையுள்ள ஆறு வருடகாலத்தில் வளர்ச்சி விகிதம் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 6 சத. விகிதமாயிருந்தது. இக்காலத்தில் தொடர்ந்து ஏற்பட்ட பாதகமான உள்நாட்டுக் காரணிகளை முன்னிட்டும், சராசரி வளர்ச்சி விகிதம் 1977ம் ஆண்டுக்கு முந்திய வளர்ச்சி விகிதத்தை மட்டுமன்றி 1978ம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கம் ஆண்டொன்றுக்குக் குறித்த நடுத்தர காலவரை இலக்கான 5.5 சதவிகிதத்தையும் மிஞ்சிவிட்டதனாலும் இது குறிப்பிடத்தக்க விகிதம் எனக்கருதப்படுகிறது.

எனினும், இப்பிரதேசத்திலுள்ள நாடுகளிடையே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியைக் கவனிக்குமிடத்து, 1983ம் ஆண்டில் இலங்கையின் செயற்பாடு மற்றும் ஆசியநாடுகளில் சுமார் மூன்றிலிருந்து நாடுகளின் செயற்பாடுகளுக்குப் பின் தங்கிவிட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி அதன் அங்கத்துவ நாடுகளிடையேயிருந்து தெரிவு செய்த ஆசியப்பிரதேசத்திலுள்ள 15 நாடுகளில், இலங்கை 1983ம் ஆண்டில் ஏற்பட்ட உண்மையான வளர்ச்சி விகிதங்களின் ஒப்பீட்டின் பேரில் பத்தாவது நிலையில்வைக்கப்பட்டது.

**விவசாயம்**

1983ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி பற்றிய வங்கியின் துறைவாரியான பகுப்பாய்விலிருந்து, உண்மையான வளர்ச்சி விகிதமான 4.9 சதவிகிதம் பிரதானமாக விவசாயத்துறையில் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புகளாலேயே சாதிக்கப்பட்டதெனத் தெரிய வந்தது. விவசாயத்துறையில் வனவியலும், மீன்பிடித் தொழிலும் அடங்கியுள்ளன. இத் துறையில் 1983ம் ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சி விகிதமான 5.1 சத விகிதம் முந்திய வருடத்தில் பதிவுசெய்யப்பட்டதைவிட இருமடங்காக இருந்தது. இத் துறையில் ஏற்பட்ட உயர் வளர்ச்சிவிகிதத்துக்கு 1983ம் ஆண்டில் நெல் உற்பத்தியின் கன அளவில் ஏற்பட்ட 14.7 சதவிகித வளர்ச்சியே பெருமளவுக்குக் காரணமாகும். பெரும் போகத்தில் ஏறக்குறைய 8 கோடி 50இலட்சம் புசல் நெல் அறுவடை செய்யப்பட்டதுடன், அவ்வருடத்தின் மொத்த உற்பத்தி 11கோடி 80 இலட்சம் புசல்களை எட்டியது.

சீனி, பால், மீன்பிடித் தொழில் போன்ற விவசாயத் துறையிலுள்ள ஒப்பியல் ரீதியாகச் சிறிய பகுதிகளில் இவற்றைப் பொறுத்தவரை உற்பத்தியாளர்களுக்கு மான்யங்கள் வழங்கப்பட்டு கவர்ச்சியான சந்தைவிலைகள் அளிக்கப்பட்ட போதிலும், அவை 1983ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்யவில்லை. 1983ம் ஆண்டில் சீனி உற்பத்தி 21,508 மெட்ரிக் தொன்கள் எனமதிப்பிடப்பட்டது. 1982ம் வருடத்தில் நடைபெற்ற உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இது 6 சதவிகிதம் குறைவாகும். உள்நாட்டுக் கைத்தொழிலைப் பாதுகாப்பதற்கும், மேலதிக முதலீடுகளைத் தூண்டுவதற்குமான ஒரு நடவடிக்கையாக உற்பத்தியாளர்களுக்கு ஊக்கிகள் தொடர்ந்து வழங்கப்படுவதற்குகந்த முறையில் அமைந்த காப்புவரிக் கொள்கையொன்று இருந்து வந்ததும், கடந்த வருடம் உள்நாட்டு நுகர்வுத் தேவைகளில் 10 சதவிகிதத்துக்குமேல் உள்நாட்டுக் கைத்தொழிலால் உற்பத்தி செய்ய முடியவில்லை. 1983ம் வருடத்தில் எருமைப்பால் உட்பட 41 கோடி 90 இலட்சம் லீட்டர்பால் உற்பத்திசெய்ததாக மதிப்பிடப்பட்டது. இது முந்திய வருட உற்பத்திக்கு மேல் 4சதவிகிதம் அதிகமாகும். 1983 மார்ச் மாதத்தில் தேசிய பால் சபை பாலுக்காக உற்பத்தியாளர்களுக்குக் கொடுபடும் விலைகளை அதிகரித்த போதிலும் அவ்வருடத்தில் சபையால் சேகரிக்கப்பட்ட பாலின் அளவு 2 சதவிகிதம் குறைந்து 5 கோடி 40 இலட்சம் லீட்டராகி விட்டது. 1983ம் ஆண்டில் 2,18,500 மெட்ரிக் தொன் மீன் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. இது முந்திய வருட உற்பத்தி மேல் 2 சதவிகித அரும்பொட்டான அதிகரிப்பாக மாத்திரமே இருந்தது. 1983ம் ஆண்டில் கரையோர மீன் உற்பத்தி, ஐந்து வருட கடற்றொழில் பெருந்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதற்கு 16 சதவிகிதம் குறைவாக இருந்தது.

எனினும், உப உணவுப் பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், மற்றும் கால் நடைகளின் உற்பத்திப் பொருள்கள் அடங்கிய மற்றும் விவசாயத் துறைகள் 1983ம் வருடத்தில் அத்துறையின் கூட்டுமொத்த வளர்ச்சிக்குக் கணிசமான பங்களிப்புச் செய்தன,

1982ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டுவரை காலத்திலே பல்வேறு துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி விகிதங்கள் அட்டவணை 2ல் தரப்பட்டுள்ளன. தேயிலை, ரப்பர், தெங்கு ஆகிய விவசாய பக்குவப்படுத்தல் கைத்தொழில்களில் சேர்க்கப்பட்ட பெறுமானம் 1983ம் ஆண்டில் 4.6 சதவிகிதம் குறைந்தது. முந்திய வருடத்தில் இது 5.3 சதவிகிதம் குறைந்திருந்தது. தொழிற்சாலைக் கைத்தொழில்களில் சேர்க்கப்பட்டபெறுமானம் முந்திய வருடத்தில் ஏற்பட்ட அதிகரிப்பான 8.9 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில் 1983ம் ஆண்டில் 2. சதவிகிதம் மட்டுமே அதிகரித்தது. அரசாங்கத்துக்குச் சொந்தமான கைத்தொழில்களின் உற்பத்தியில் 15 சதவிகித வீழ்ச்சியும், தனியார்துறை கைத்தொழில்களின் உற்பத்தியில் 26 சதவிகித அதிகரிப்பும் ஏற்பட்டதன் நிகர விளைவாகும் இது. சிறுகைத் தொழில்களின் உபதுறையில், 1982ம் ஆண்டில் ஏற்பட்டவளர்ச்சி விகிதமான 10.1 சத விகிதத்துடன் ஒப்பிடுகையில் 1983ம் ஆண்டில் 4.5 சதவிகித வளர்ச்சி விகிதமே அவதானிக்கப்பட்டுள்ளது. பொதுவாகப் பொருள் உற்பத்தித்துறையைப் பொறுத்தவரை 1982ம் ஆண்டில் ஏற்பட்ட 4.8 சதவிகித விரிவுடன் ஒப்பிடுகையில் 1983ம் ஆண்டில் அரும்பொட்டாக 0.8 சதவிகித அதிகரிப்பே ஏற்பட்டது.

**நிர்மாணம்**

நிர்மாணத்துறையிலே 1983ம் ஆண்டில் 1 சதவிகித அரும்பொட்டான வளர்ச்சி மட்டுமே ஏற்பட்டுள்ளது. தனியார்துறையின் கட்டடநிர்மாண நடவடிக்கைகள் தொடர்ந்து மூன்றாவது வருடமாக 1983ம் ஆண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 1

## இலங்கையின் உற்பத்திக் குறிகாட்டிகள் 1974—1983

| ஆண்டு | 1970ம் வருட நிலையான காரணி அடக்கவிலைகளில் மொத்தஉள்நாட்டுஉற்பத்தி | | 1970ம் வருட நிலையான காரணி அடக்க விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி | | நிலையான விலைகளில் தலாநபர் மொத்தத் தேசிய உற்பத்தி | |
|---|---|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபா | வளர்ச்சி வீதத்தின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபா | வளர்ச்சி வீதத்தின் சதவீதம் | ரூபா | வளர்ச்சி வீதத்தின் சதவீதம் |
| 1974 | 14,585 | 3.2 | 14,449 | 3.2 | 1,088 | 1.8 |
| 1975 | 14,987 | 2.8 | 14,837 | 2.7 | 1,099 | 1.0 |
| 1976 | 15,431 | 3.0 | 15,258 | 2.8 | 1,112 | 1.2 |
| 1977 | 16,078 | 4.2 | 15,934 | 4.4 | 1,143 | 2.8 |
| 1978 | 17,401 | 8.2 | 17,329 | 8.8 | 1,221 | 6,8 |
| 1979 | 18,501 | 6.3 | 18,430 | 6.4 | 1,274 | 4.3 |
| 1980 | 19,575 | 5.8 | 19,456 | 5.6 | 1,320 | 3.6 |
| 1981 | 20,706 | 5.8 | 20,257 | 4.1 | 1,356 | 2.7 |
| 1982 | 21,756 | 5.1 | 21,232 | 4.8 | 1,398 | 3.1 |
| 1983 | 22,824 | 4.9 | 22,076 | 4.0 | 1,432 | 2.4 |

ஆதாரம்: 1982ம் வருடப் பொருளாதாரம் பற்றிய மத்திய வங்கி மீளாய்வும், 1983ம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையும்

குன்றிவிட்டதாகத் தோன்றுகிறது. இத்துறையில் சேர்க்கப்பட்ட பெறுமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் பிரதான காரணம், மாதுறு ஓயாவில் தலைவேலைகள் பூர்த்தியடைந்து, விக்டோரியா அணைக்கட்டு, ரந்தெனிகல திட்டங்களில் நிர்மாண வேலைகள் அதிகரித்ததுடன் துரித மகாவலித் திட்டத்தில் செலவுகள் பெருமளவு அதிகரித்ததேயாகும்.

மின்சாரம்—எரிவாயு — தண்ணீர் — சுகாதார சேவைகளில் கூட்டிய பெறுமதி 1983ம் ஆண்டில் 6.6 சதவிகிதம் அதிகரித்தது. 1983ம் ஆண்டில் மின்சார உற்பத்தி முந்திய ஆண்டைவிட ஏறக்குறைய 2.3 சதவிகிதம் மட்டுமே அதிகரித்தது. எனினும், எரிவாயுப் பொருள்களின் உற்பத்தி ஏறக்குறைய 20 சதவிகிதம் அதிகரித்தது.

மொத்த விற்பனை வியாபாரத்திலும் சில்லறை வியாபாரத்திலும் கூட்டிய பெறுமதி 1982ம் ஆண்டில் ஏற்பட்ட 6 சதவிகித வளர்ச்சிக்கெதிராக 1983ம் ஆண்டில் 5.3 சதவிகிதம் அதிகரித்தது. இங்கேகூட, இறக்குமதியை அடிப்படையாகக்கொண்ட வியாபாரத்திலிருந்து கூட்டிய பெறுமதியின் பங்களிப்பு முந்திய வருடத்தில் விட மிகக் குறைவாகவே அதிகரித்தது.

வங்கித் தொழில், காப்புறுதி, மெய்ச்சொத்து ஆகியவற்றின் துறை 1982ம் ஆண்டில் ஏற்பட்ட 11.9 சதவிகித அதிகரிப்புக்கெதிராக 1983ம் ஆண்டில் 21.4 சதவிகிதம் வளர்ச்சிபெற்றது. வசிப்பிட உரித்தில் கூட்டிய பெறுமதி 1982ம் ஆண்டில் ஏற்பட்ட 5.5 சதவிகித அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1983ம் ஆண்டில் 2.3 சதவிகிதம் அதிகரித்தது.

பொது நிர்வாகத்திலும பாதுகாப்பிலும் 1983ம் ஆண்டில, கூட்டிய பெறுமதியில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டது.

மற்றும் சேவைகள் துறையைப் பொறுத்தமட்டில், 1982ம் ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சி வீதமான 7 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில், அது 1983ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை அனுபவித்தது. உல்லாசப் பயண உபதுறையில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குப் பெரிதும் காரணமாகும். முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் 1983ம் ஆண்டில் வந்துசேர்ந்த உல்லாசப்பயணிகளின் மொத்தத் தொகை 17.2 சதவிகிதம் வீழ்ச்சியுற்றது,

1983ம் ஆண்டில் துறைவாரியான செயற்பாடுகளைப் பகுப்பாய்வுசெய்த மத்தியவங்கி, இலங்கைப் பொருளாதாரத்தின் உண்மையான உற்பத்தியளவுகள் அதன் உள்ளார்ந்த சக்திக்குக் குறைவாக உள்ளனவென்று முடிவுசெய்துள்ளது. அரசாங்கத்துக்குச் சொந்தமான பெருந்தோட்ட விவசாயத்தில், குறிப்பாகத் தேயிலையிலும், கூட்டு மொத்த உற்பத்தி ஏறக்குறைய 15 சதவிகிதம் வீழ்ச்சியுற்ற அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் இந்நிலைமை காணப்படுகிறது. இத்துறைகளில் பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், உண்மையிலேயே உயர்வான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி விகிதத்தைச் சாதிக்க, அது பொருளாதாரத்தின் உள்ளார்ந்த உற்பத்திச் சக்தியைப் பெருமளவு அதிகரிக்கும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கால்பங்குக்கு மேற்பட்டதற்கு விவசாயத்துறை இன்னும் பொறுப்பாயிருந்து வருகிறது. எனினும், கடந்த ஆறு வருடங்களில் ஏற்றுமதிகளில் அதன் பங்கு 72 சதவிகிதத்திலிருந்து 58சதவிகிதத்துக்கு வீழ்ச்சியடைந்துவிட்டது. இத்துறையில் மிகவும் பின்தங்கிவிட்ட பகுதி மரப் பயிர்களாகும். இத்துறையில் உற்பத்தியையும் வேலை வாய்ப்புகளையும் நிபுணர்களையும் விரிவாக்குவதற்கான உள்ளார்ந்த வளம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இது தொடர்பான பிரச்சினைப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட பல்வேறு அதிகாரிகள் கவனஞ் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

### பொருளுற்பத்தி

பொருளுற்பத்தித் துறையில், சேர்க்கப்பட்ட பெறுமதி 1978ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் 4.2சதவிகித சராசரி விகிதத்தில் வளர்ச்சிபெற்றுள்ளது. இங்குகூட கடந்த ஆறுவருடங்களில் கூட்டுமொத்த வளர்ச்சி சேர்க்கப்பட்ட பெறுமதியில் மூன்றிலொரு பங்காக அமைந்துள்ள தேயிலை, ரப்பர், தெங்கு சம்பந்தமான பக்குவப்படுத்தல் சம்பந்தமாகத் தோட்டங்களில் உற்பத்தி தேங்கியதன் விளைவாக மோசமாகப் பாதிக்கப்பட்டது.

1983ம் ஆண்டில் பொருளுற்பத்திக் கைத்தொழில் துறையில் உற்பத்தி 2சதவிதம் மட்டுமே அதிகரித்தது. 1982ம் ஆண்டில் ஏற்பட்ட 9 சதவிகித அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், உற்பத்தியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி அர்த்தபுஷ்டியுள்ளதாகும். கைத்தொழில் துறை அநேக கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலைமைகள் தோன்றியதே இதற்குப் பிரதான காரணம். கைத்தொழில் நாடுகளுக்கு நேர் எதிராக ஓர் ஒப்பியல் அனுகூலத்தை இலங்கை கொண்டுள்ள ஆடைகள், தோற்பொருள்கள் போன்ற கைத்தொழில்களின் வளர்ச்சி வெளிநாட்டுச் சந்தைகளில் சுதேச கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்கான காப்புவரிகளாலும் காப்புவரியல்லாத மற்றும் தடைகளாலும் தடுக்கப்பட்டுள்ளது.

1983ம் வருடம் ஜூலை மாதத்தில் நடைபெற்ற இனக் கலவரங்களும் கைத்தொழில் துறையில் உற்பத்தியைப் பாதித்தது. உற்பத்தி வீழ்ச்சியடைந்ததற்கு இன்னொரு காரணம், வறட்சியின் விளைவாக ஏற்பட்ட மின்சாரத் தட்டுப்பாடாகும்.

### வலு

வலுவழங்கல்கள் 1983ம் ஆண்டில் தொடர்ந்து ஒரு பிரச்சினையாகவே இருந்துவந்தது, பத்து வருட காலத்தில் முதல் முறையாக உலக எண்ணெய் விலைகள் இறங்கிய போதிலும், இந்த அனுகூலமான போக்கின் முழுநன்மைகளையும் அனுபவிக்க இலங்கையால் முடியவில்லை. ஏனென்றால் முன்னெப்போதும் ஏற்படாத வறட்சி நிலைமைகள் நீர், மின்சார உற்பத்தியைக் கட்டுப்படுத்திவிட்டன; ஆனால் மின் சக்தியை உற்பத்தி செய்வதற்காக இறக்குமதிசெய்யப்பட்ட எண்ணெயை பெருமளவில் உபயோகிக்கவேண்டியிருந்தது. நீர், மின்சார உற்பத்தி 24 சதவிகிதம் குறைந்த அதேசமயத்தில் அனல் மின்சக்தியின் உற்பத்தி 1982ம் ஆண்டின் மட்டங்களுக்கு மேல் 96 சதவிகிதம் அதிகரித்துவிட்டது.

### வர்த்தகம்

1983ம் ஆண்டு முதல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகச் செயற்பாடு ஓர் அபிவிருத்தியை காட்டத் தொடங்கியது. 1977ம் ஆண்டுக்குப்பின் முதல் முறையாக ஏற்றுமதிகள் 7 சதவீதம் அதிகரித்ததுடன் (அட்டவணை—5ஐப் பார்க்கவும்) இறக்குமதிப்பெறுமதிகளும் குறைந்துவிட்டன. (அட்டவணை 4 ஐப் பார்க்கவும்) எனினும் வர்த்தக நிலுவைப் பற்றுக்குறை 1983ம் ஆண்டிலும் தொடர்ந்து இருந்து வந்தது. சுங்கப்பகுதியின் புள்ளிவிபரங்களுக்கிணங்க 1983ம் ஆண்டில் இறக்குமதிகளின் பேரில் மொத்தச் செலவு 4,202 கோடி 10 இலட்சம் ரூபா (எஸ். டி. ஆர். 1,67 கோடி 10 இலட்சம்); ஏற்றுமதிகளிலிருந்து மொத்தச் சம்பாத்தியம் 2,518 கோடி 30 இலட்சம் ரூபா (எஸ். டி. ஆர். 100 கோடி 10 இலட்சம்). இதன் விளைவாக, 1,683 கோடி 80 இலட்சம் ரூபா (எஸ், டி. ஆர். 66 கோடி 90 இலட்சம்) வர்த்தகப்பற்றுக்குறை ஏற்பட்டது. இது முந்திய வருடத்தில் ஏற்பட்ட பற்றுக்குறையான 1,575 கோடி 10 இலட்சம் ரூபா (எஸ், டி. ஆர். 68 கோடி 60 இலட்சம்) வுக்குமேல் எஸ். டி, ஆர் பெறுமதியில் 2 சத விகிதமாகும்.

1983ம் ஆண்டில் ஏற்றுமதிகளிலும் இறக்குமதிகளிலும் ஏற்பட்டவிலை அசைவுகளின் விளைவாக நாட்டின் வர்த்தக மாற்று வீதங்கள் 16 சதவிகிதம் அபிவிருத்தியடைந்தன. இந்த அபிவிருத்தி அர்த்தபுஷ்டியுடைய ஒரு நிலைமையாகும். ஏனென்றால் நாட்டின்வர்த்தக மாற்றுவீதங்கள் 1977ம் ஆண்டுக்குப்பின் தொடர்ந்து மோசமடைந்துவந்தன.

### சென்மதி நிலுவை

வெளிநாட்டு வர்த்தகக் கட்டுக்கோப்பிலுள்ள உள்ளார்ந்த பலவீனங்களின் காரணமாகச் சென்மதி நிலுவைகள் விருத்தியடையக்கூடிய ஒரு நிலைமை நாட்டினைக்கு எட்டாமலேயே நழுவிவந்துள்ளது. 1977ம் ஆண்டுக்குப்பின் முதல் முறையாக 1983ம் ஆண்டில் இலங்கையின வர்த்தக மாற்று வீதங்கள் அபிவிருத்தியடைந்த போதிலும், சேவைகள் கணக்கின் மீதான பற்றுக்குறை அதிகரித்தது. சேவைகள் கணக்கில் இந்தப் பிரதிகூலமான அசைவு பிரதானமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணை 2

**நிலையான (1982) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியில் துறைவாரியான அமைவும் அதிகரிப்பும்**

| துறை | சேர்க்கப்பட்ட பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | | மொ. தே. உற்பத்தியில் சதவிகிதப் பங்கு | | முந்திய ஆண்டைவிட அதிகரிப்பு குறைவு (பத்து இலட்சம்ரூபா) |
|---|---|---|---|---|---|
| | 1982x | 1983x | 1982 | 1983 | 1983 |
| 1. விவசாயமும் வனவியலும் மீன்பிடித்தலும் | 24,964 | 26,237 | 27.7 | 27.9 | 1,273 |
| 1.1 விவசாயம் | 20,771 | 21,810 | 23.0 | 23.2 | 1,039 |
| 1.1.1 தேயிலை | 2,418 | 2,309 | 2.7 | 2.5 | —109 |
| 1.1.2 ரப்பர் | 770 | 833 | 0.9 | 0.9 | 63 |
| 1.1.3 தெங்கு | 3,263 | 2,995 | 3.6 | 3.2 | —268 |
| 1.1.4 நெல் | 5,484 | 6,252 | — | 6.6 | 768 |
| 1.1.5 மற்றவை | 8,836 | 9,421 | 9.8 | 10.0 | 585 |
| 1.2 வனவியல் | 1,710 | 1,816 | 1.9 | 1.9 | 106 |
| 1.3 மீன்பிடித் தொழில் | 2,483 | 2 611 | 2.7 | 2.8 | 128 |
| 2. சுரங்க அகழ்வும் கல் தோண்டுலும் | 2,238 | 2,413 | 2.5 | 2.6 | 175 |
| 3. பொருளுற்பத்தி செய்தல் | 13,601 | 13,700 | 15.1 | 14.6 | 109 |
| 3.1 ஏற்றுமதிக்கு முறைப்படுத்தல் | 2,846 | 2,715 | 3.1 | 2.9 | — 131 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 8,777 | 8,953 | 9.7 | 9.5 | 176 |
| 3.3 சிறுகைத்தொழிலும் மற்றும் கைத்தொழிலும் | 1.978 | 2.042 | 2.2 | 2.2 | 64 |
| 4. நிர்மாணம் | 7.959 | 8.039 | 8.8 | 8.6 | 80 |
| 5. மின்சாரம் - எரிவாயு - தண்ணீர் சுகாதார சேவைகள் | 1,089 | 161 | 1.2 | 1.2 | 72 |
| 6. போக்குவரத்தும் தகவல் தொடர்பும் | 8,536 | 8,920 | 9.4 | 9.5 | 384 |
| 7. மொத்த விற்பனை-சில்லறை வியாபாரம் | 16,059 | 16,910 | 17.8 | 18.0 | 851 |
| 7.1 இறக்குமதிகள் | 4,167 | 4,242 | 4 6 | 4.5 | 75 |
| 7.2 ஏற்றுமதிகள் | 2,861 | 2,870 | 3.2 | 3.1 | 9 |
| 7.3 உள்நாட்டுத்துறை | 9,031 | 9,798 | 10.0 | 10.4 | 767 |
| 8. வங்கித் தொழிலும் காப்புறுதியும் மெய்ச் சொத்தும் | 3,192 | 3,876 | 3.5 | 4.1 | 684 |
| 9. வசிப்பிடங்களின் உரித்து | 3,250 | 3.315 | 3.6 | 3.5 | 65 |
| 10 பொது நிர்வாகமும் பாதுகாப்பும் | 2,812 | 3,673 | 3.1 | 3.9 | 861 |
| 11. சேவைகள் (வேற்றிடத்தில் குறிப்பிடப் படவில்லை) | 8,698 | 8,672 | 9.6 | 9.2 | —26 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 92,398 | 96,926 | 102.3 | 103.1 | 4,528 |
| 13. வெளிநாட்டிலிருந்து நிகரக் காரணி வருமானம் | —2,034 | —2,889 | —2.3 | —3.1 | —855 |
| 14. மொத்த தேசிய உற்பத்தி | 90,364 | 94,037 | 100.0 | 100.0 | 3,673 |

X தற்காலிகமானது

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை — 1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுக்கடன்கள் பேரிலான வட்டிக்கொடுப்பனவு அதிகரித்தன் காரணமாகவே 1980ம் ஆண்டளவில் ஆரம்பமாயிற்று. 1983ம் ஆண்டில் உல்லாசப் பயணத்துறையிலிருந்து சம்பாத்தியங்கள் குறிப்பிடத்தக்கவாறு வீழ்ச்சியடைந்ததால் இந்த நிலைமைகடந்தவருடம்தீவிரமடைந்தது. சேவைக் கணக்கில் கொடுப்பனவுகளுக்கு மேல் மிஞ்சிய பெறுவனவுகள் 1979ம் ஆண்டில் 3-கோடி 70 இலட்சம் எஸ். டி. ஆர். ஆக இருந்தன; 1980ம் ஆண்டில் 4 கோடி எஸ் டி. ஆர். ஆக உச்ச நிலையை அடைந்தன. ஆனால், 1981ம் ஆண்டில் இந்த உபரி 1 கோடி எஸ். டி. ஆர். ஆக இறங்கிவிட்டது. 1982ம் ஆண்டளவில் 1 கோடி 60 இலட்சம் எஸ். டி. ஆர். பற்றாக்குறை ஏற்பட்டது. 1983ம் ஆண்டில் 5 கோடி 20 இலட்சம் எஸ். டி. ஆர். பற்றாக்குறை நிலவியது.

1983ம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து தனிப்பட்ட பண அனுப்பீடுகளில் அதிகரிப்பு விகிதமும் மந்தமடைந்தது, எனினும், 1983ம ஆண்டில் வெளிநாட்டுப் பண அனுப்பீடுகளின மொத்தப் பெறுமதி முந்திய ஆண்டை விட அதிகமாயிருந்தது. வெளிநாட்டுச் சம்பாத்தியங்களுக்கும் கொடுப்பனவுகளுக்கு யடையே நிலவிய சமச்சீரின்மை 1983ம் ஆண்டிலும் நீடித்தது. எஸ். டி. ஆர். அடிப்படையில், வர்த்தகப் பற்றுக்குறை 80 கோடி 80 இலட்சம் எஸ். டி. ஆர். ஆக இருந்தது. பொருள்கள் சேவைகளில் ஏற்பட்டமொத்தப் பற்றுக்குறை 86 கோடி எஸ். டி. ஆர். ஆக இருந்தது. 25 கோடி 50 இலட்சம் எஸ். டி. ஆரில் நடைபெற்ற தனிப்பட்ட பண இடமாற்றங்களால் நடப்புக்கணக்கு நிலுவையில் ஏற்பட்டிருந்த பற்றுக்குறை 60 கோடி 50 இலட்சம் எஸ். டி. ஆர். ஆகக் குறைந்துவிட்டதைக் கீழே உள்ள அட்டவணை — 4ல் காணலாம்.

உற்பத்திக் குறிகாட்டிகளில் (அட்டவணை —1) காணப்படும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம்யாதெ

## அட்டவணை — 3

## வர்த்தக நிலுவை 1978 — 1983

பத்த இலட்சம் ரூபா (எஸ். டி. ஆர். பத்து இலட்சம் அடைப்புக் குறிகளுக்குள்)

| ஆண்டு | ஏற்றுமதிகள் (அ) க. த. இ. | இறக்குமதிகள் (ஆ) வி. ஈ. கே. | வர்த்தக நிலுவை |
|---|---|---|---|
| 1978 | 13,206 | 14,687 | —1,481 |
| | (674) | (750) | (—76) |
| 1979 | 15,273 | 22,560 | —7,287 |
| | (759) | (1,121) | (—362) |
| 1980 (இ) | 7,273 | 33,637 | —16,364 |
| | (803) | (1,563) | (—760) |
| 1981 | 20,199 | 35,530 | —15,331 |
| | (891) | (1·567) | (—676) |
| 1982 | 21.124 | 36,876 | —15,751 |
| | (919) | (1,605) | (—686) |
| 1983 | 25,183 | 42.021 | —16,838 |
| | (1,001) | (1,671) | (—669) |

(அ) மறு ஏற்றுமதிகளின் பெறுமதியும் அடங்கும்

(ஆ) பொன் வெள்ளிக் கட்டியும் உலோக நாணயமும் நீங்கலாக

(இ) 1980ம் ஆண்டிலிருந்து மேலே திருத்தியமைக்கப்பட்டது.

மாற்று

1977 — 1 எஸ். டி. ஆர் = 10.42
1978 — 1 எஸ். டி. ஆர். = 19.58
1979 — 1 எஸ். டி. ஆர் = 20.12
1980 — 1 எஸ். டி. ஆர். = 21.52
1981 — 1 எஸ். டி. ஆர். = 22.67
1982 — 1 எஸ். டி. ஆர். = 22.98
1983 — 1 எஸ். டி. ஆர். = 23.76

க. த. க. — கப்பல் தளம் மட்டும் இலவசம்

வி. ஈ. கே. — விலையும் ஈடும் கேள்வும்

ஆதாரம்: சுங்கப் பகுதி, இலங்கை — இலங்கை மத்திய வங்கி

னில், 1983ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மொத்த தேசிய உற்பத்தி ஆகிய வற்றின் உண்மையான வளர்ச்சி விகிதங்களுக்கிடையேயுள்ள விரிவான ஏற்றத் தாழ்வாகும். வளர்ச்சி விகிதங்களிலுள்ள இட்டத்தட்ட .9 சதவீதப் புள்ளிகள் வித்தியாசம் காரணி வருமானத்தின் நிகர வெளிப் பாய்ச்சலின் பரிமாணத்துக்குக் கவனத்தை ஈர்த்துள்ளது. வெளிநாட்டு நிக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரக காரணி வருமானத்தின் வெளிப் பாய்ச்சலில் ஏற்பட்ட இந்த அதிகரிப்புக்கு, தனியார் வெளிநாட்டு மூலதனத்துக்குச் சேர்ந்த பங்கு இலாபத்தொகைகளும் இலாபங்களும் தாயகத்துக்கு அனுப்பப் பட்டதைவிட வெளிநாட்டுக் கடன் மூலதனத்தின் மீது செய்யப் பட்ட வட்டிக்கொடுப்பனவுகளே அதிகமாகக் காரணமாகும். வெளிநாட்டுக்கடன்களின் பேரில் செய்யப்பட்ட வட்டிக்கொடுப்பனவுகள் 1983ம் ஆண்டில் 1982ம் வருடத் தொகையைவிட 34 சதவிகிதம்வரை அதிகரித்தன. நெடுங்கால, நடுத்தரகால, குறுங்கால வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பாக நெடுங்கால, நடுத்தரகாலக் கடன்களின் அழிவு அடங்கிய கடனடைப்புக் கொடுப்பனவுகள் 1982ம் ஆண்டிலிருந்த தொகையான 529 கோடி 20 இலட்சம் ரூபா (23 கோடி 10 இலட்சம் எஸ். டி. ஆர்.) 1983ம் ஆண்டில் 709 கோடி 40 இலட்சம் ரூபா (28 கோடி 50 இலட்சம் எஸ். டி. ஆர்.)வுக்கு அதிகரித்தன. 1983ம் ஆண்டின் போது நிகரக் காரணி வருமானத்தின் அந்த அதிகரித்த வெளிப்பாய்வு, உண்மையான தலா நபர் வருமானத்தின் வளர்ச்சி விகிதம் வீழ்ச்சியடைவதற்கும் பெருமளவுக்குக் காரணமாயிருந்தது. 1982ம் ஆண்டில் 3.1 சதவிகிதமாயிருந்த இந்த வளர்ச்சிவிகிதம் 1983ம் ஆண்டில் 2.4 சதவிகிதத்துக்கு வீழ்ச்சியுற்றது.

வணிகப் பொருள் ஏற்றுமதிகள், சேவைகளிலிருந்து கிடைத்த சம்பாத்தியங்களின் ஒரு விகிதமாக, சர்வதேச நாணய நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உட்பட மொத்த கடனடைப்புக் கொடுப்பனவுகள் 1982ம் ஆண்டிலிருந்த 18.9 சதவிகிதத்திலிருந்து 1983ம் ஆண்டில் 21.6 சதவிகிதத்துக்கு அதிகரித்தன; இதே வேளை, சர்வதேச நாணய நிதியக் கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக இந்த விகிதம் இவ்விரு வருடங்களுக்குமிடையே 12.9 சதவிகிதத்திலிருந்து 16.0 சதவிகிதத்துக்கு அதிகரித்தது. 1983ம் ஆண்டில் வணிகப் பொருள் ஏற்றுமதிகள், சேவைகளிலிருந்து கிடைத்த சம்பாத்தியங்கள், வெளிநாட்டிலிருந்து தொழிலாளர்களின் பண அனுப்பீடுகள் ஆகிய

## அட்டவணை 4

### சென்மதி நிலுவைகள் 1978 — 1983 (எஸ். டி. ஆர். பத்து இலட்சம்)

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் * | 675 | 759 | 818 | 903 | 918 | 988 |
| இறக்குமதிகள் * | 819 | 1121 | 1576 | 1596 | 1808 | 1796 |
| வர்த்தக நிலுவை * | —144 | —362 | —752 | —693 | —890 | — 808 |
| சேவைகள் | 6 | 37 | 40 | 10 | —16 | — 52 |
| பெறுவனவுகள் | 99 | 149 | 214 | 261 | 303 | 317 |
| கொடுப்பனவுகள் | 93 | 112 | 174 | 251 | 319 | 369 |
| பொருள்களும் சேவைகளும் | —138 | —325 | — 718 | —683 | —906 | — 860 |
| தனிப்பட்ட பண இடமாற்றங்கள் | 17 | 37 | 105 | 172 | 240 | 255 |
| நடப்புக் கணக்கு நிலுவை | —121 | —288 | —613 | —511 | —666 | — 605 |
| நிதியளிப்பு | | | | | | |
| கொடைகள் | 46 | 111 | 106 | 136 | 147 | 160 |
| நேரடியான முதலீடு | 1 | 36 | 33 | 42 | 58 | 35 |
| மற்றும் தனிப்பட்ட நெடுங்கால முதலீடு (நிகரம்) | 7 | 7 | 33 | 66 | 182 | 69 |
| மத்திய அரசாங்க முதலீடு (நிகரம்) | 125 | 121 | 125 | 225 | 231 — | 292 |
| குறுங்கால (முதலீடு) | — | — | 115 | 8 | — | 32 |
| எஸ். டி. ஆர். ஒதுக்கீடு | — | 12 | 12 | 12 | — | — |
| வழுக்களும் விடுகைகளும் | 7 | 36 | 23 | —4 | 24 | 17 |
| மொத்த நிலுவை | 65 | 35 | —166 | — 26 | — 24 | — |
| நாணய அளவுகள் | —65 | — 35 | 166 | 26 | 24 | — |

ஆதாரம்: அரசாங்க முதலீடு 1984—88 நிதி—திட்டமிடல் அமைச்சு.

* சுங்கத் தரவுகள் சரிக்கட்டப்படவேண்டியதால், அட்டவணை—3ல் உள்ள புள்ளி விவரங்களிலிருந்து மாறுபடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றின் ஒரு சதவிகிதமாக, மொத்தக் கடனடைப்புக் கொடுப்பனவுகள் 17.9 சதவிகிதமாயிருந்தன. இது 1982ம் ஆண்டில் 15.5 சதவிகிதமாயிருந்தது. சலுகை அடிப்படையிலும், சலுகையற்ற அடிப்படையிலும் பெறப்பட்ட கடன்களின் அதிகரித்த கடன் அளவுகள் இக்காலத்தில் வட்டிக் கொடுப்பனவுகள் கணிசமாக அதிகரிப்பதற்கு நிலையாக அடிகோலியுள்ளன வென்பதும், அதன் விளைவாகப் பொதுப் படுகடன் மீதான வட்டியின் பங்கு 1978ம் ஆண்டிலிருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.2 சதவிகிதத்திலிருந்து 1983ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.4சதவிகிதத்துக்கு அதிகரித்தது. பெறுமதி அடிப்படையில் கூறுவதாயின், 1983ம் ஆண்டில் பொதுப்படுகடன் மீது செய்யப்பட்ட வட்டிக்கொடுப்பனவுகளில், உள்நாட்டுப் படுகடன்மீது செலுத்தப்பட்ட 531 கோடி 40 இலட்சம் ரூபா வட்டியும், வெளிநாட்டுப் படுகடன் மீது செலுத்தப்பட்ட 127 கோடி 90 இலட்சம் ரூபா வட்டியும் அடங்கும்; இவ்வாண்டின்போது ஏற்பட்ட சதவிகித அதிகரிப்புகள், உள்நாட்டுப் படுகடன் மீது 27 சதவிகிதமும் வெளிநாட்டுப் படுகடன் மீது 40 சத விகிதமுமாகும்.

1983ம் ஆண்டு முடிவில் தீர்க்கப்படாத மொத்த வெளிநாட்டுக் கடன் 4,602 கோடி 50 இலட்சம் ரூபாவாகும். முந்திய வருடத்து 19 சதவிகித அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1983ம் ஆண்டில் 33 சதவிகித அதிகரிப்பு பதிவாகியது. மற்றும் நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கம், 1982ம் ஆண்டில் தீர்க்கப்படாத கடன் பொறுப்பில் ஏற்படுத்திய 44 கோடி ரூபா அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1983ம் ஆண்டின் 525 கோடி 40 இலட்சம் ரூபா அதிகரிப்புக்கு அடிகோலியது.

நாடு அதன் சக்திக்கு மேற்பட்ட வாழ்க்கையை நடத்தி வருகிறதென்பதும், அதன் தேவைகளை நிறைவேற்றுவதற்குக் கனத்த அளவில் கடன்பட்டு வருகிறதென்பதும் தெளிவாகின. வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பாக முதலையும் வட்டியையும் கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட கைமாற்றுப் பணத்தொகைகள் உட்பட வெளிநாட்டு சொத்துக்கள் தான் கடன் பளு என்பதாகும். இது 1980ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 11.2 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதத்துக்கு அதிகரித்துவிட்டது. சென்மதி நிலுவைகளின் நடப்புக் கணக்கில் பெரும் பற்றாக்குறை தொடர்ந்து விடாப்பிடியாக இருந்து வருவதன் விளைவாகவெளிநாட்டுக்கடனகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி சமீபவருடங்களில் பெருங்கவலையை அளித்துவந்துள்ளது. அதிகரித்துவரும் வெளிநாட்டுக் கடன் பொறுப்புகள், குறிப்பாகக் குறுங்கால முதிர்வைக்கொண்ட கடன்களின் அதிகரிப்பு, சென்மதி நிலுவைகளையும் நாணயமாற்று வீதங்களையும் சமாளிப்பதைக் கடுமையாகத் தடைப்படுத்திவிட்டது. சென்மதி நிலுவைகளைச் சமாளிப்பதில் ஏற்பட்ட இந்தப் பலவீனம், இலங்கையின் தாராளமாக்கப்பட்ட வர்த்தக—கொடுப்பனவு முறை சார்ந்திருக்கும் அத்திவாரத்தைக் கூட பயமுறுத்திவிட்டது. இது தொடர்பாக மத்திய வங்கியின் இந்த அவதானிப்புகள் கவனத்துக்கு உரியன; "வதிவற்றோருடன்" வியாபாரம் நடத்துவதில் வதிவுள்ள தொழில் முயற்சிகளுக்கு வளைந்துகொடுக்கும் தன்மைகொடுக்கப்பட்டிருந்த போதிலும் வதிவற்றோருக்கு நிறைவேற்றவேண்டிய கடமைப் பொறுப்புகள் சென்மதி நிலுவை யதார்த்தங்களை மீறாமலிருப்பதை உறுதிப்படுத்த நிதிசார் கொடுக்கல் வாங்கல்களும் நாணயக் கொடுக்கல் வாங்கல்களும் கவனமாகவும் போதிய அளவுக்கும் கண்காணிக்கப்படுவது ஓர் அத்தியாவசியத் தேவையாகும்."

மத்திய வங்கி 1983ம் ஆண்டுக்கான அதன் வருடாந்த அறிக்கையில் பின்வருமாறு கூறும் போது, கடன்புறவரையிலும் அதற்குக் காரணமான காரணிகளிலும் ஏற்பட்டுள்ள சீர்கேட்டின் பாரதூரமான தன்மையை வெளிப்படுத்துகின்றது. "முந்திய வருடங்களில், படுகடன் விகிதம், பிரதானமாக கடல் கடந்த வங்கித் தொழில் நிலையங்களிலிருந்து எழும் கடன்களை மதிப்பிடுவதில் ஏற்பட்ட கஷ்டங்களின் காரணமாக, சில குறிப்பிட்ட வகைப் படுகடன்களை விலக்கிவிட்டது. இந்த விடுகைகள் பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷனின் தொழில் முயற்சிகளுக்கு வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்கள் வழங்கிய கடன்கள், சில குறிப்பிட்ட அரசாங்க கூட்டுத்தாபனங்களும் இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனமும் வெளிநாட்டில் பெற்ற கடன்கள் ஆகியன தொடர்பானவையாகும். உள்நாட்டுச் சந்தையில் கொடுகடன் பொதுவாக இறுக்கமாயிருந்ததாலும் அதற்கு அதிக பணச் செலவு உண்டானதாலும், வெளிநாட்டில் கடன் வாங்கும் தூண்டுதல் குறிப்பாகப் பலமுள்ளதாயிருந்தது. ஏனென்றால், பிரதான பணச் சந்தைகளில் வட்டி விகிதங்கள் இலங்கையிலுள்ளதைவிட மிகக் குறைவாயிருந்தன. 1979ம் ஆண்டிலிருந்த மொத்த வெளிநாட்டுப் படுகடனின் அற்ப விகிதமாக அமைந்திருந்த வங்கிக் கடன்களும் வணிகக் கொடுகடன்களும் 1983ம் ஆண்டளவில் 33 சதவிகிதத்துக்கு ஏறிவிட்டன. இந்த இருவருடங்களுக்கிடையே நெடுங்கால சலுகைக் கடனில் 105 கோடி 10 இலட்சம் எஸ். டி. ஆர். அதிகரித்து விட்டது. இதேவேளை வணிக வட்டாரங்களிலிருந்து அதிக பணச் செலவில் பெறப்பட்ட குறுங்கால முதிர்வுள்ள கொடுகடனில் 57 கோடி 70 இலட்சம் எஸ். டி. ஆர். அதிகரித்துவிட்டது. இதன் விளைவாக, படுகடன் புறவரையில் குறிப்பிடத்தக்க சீரழிந்த நிலை காணப்பட்டது. இதைவிட அதிக சஞ்சலமளித்த இன்னோர் அம்சம் யாதெனில், ஏற்றுமதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகிதம் சம்பந்தமான கடனைடப்பு 1983ம் ஆண்டளவில் சுமார் 22 சதவிகிதத்துக்கு அதிகரித்துவிட்டதாகும். தொழிலாளர்களின் பண அனுப்பீடுகள் ஏற்றுமதிகளுடன் ஒன்று சேர்க்கப்பட்டால், அந்தவிகிதம் 18 சதவிகிதத்துக்கு வீழ்ச்சியுறுகிறது. மறுபக்கத்தில், வர்த்தக மாற்று வீதங்களிலிருந்து கிடைத்த ஆதாயங்கள் விலக்கப்பட்டால், படுகடன் விகிதம் குறைந்தபட்சம் 24.4 சதவிகிதமாகவேனும் இருந்திருக்கும் அல்லது தொழிலாளர்களின் பண அனுப்பீடுகள் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களுடன் சேர்க்கப்படுகின்றனவா அல்லது சேர்க்கப்படவில்லையா என்பதைப் பொறுத்து, 19.8 சதவிகிதமாக இருந்திருக்கும். (இங்கு காணப்படும் படுகடனைடப்பு விகிதங்கள் உண்மை நிலைக்குச் சற்றுக் குறைத்துக் கூறப்பட்டனவாகவே இன்னும் கருதப்படுகின்றன. ஏனென்றால், பா. கொ. மொ. கமிஷனின் தொழில் முயற்சிகளுக்கு வெ. நா. வ. நிலையங்கள் கொடுத்த கடன்கள் யாவும் இனங்காணப்படவில்லை.")

## நாணய விரிவு

1983ம் ஆண்டில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்களில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பும் அதிகாரிகளுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கியது. அதன் விளைவாக, நாணயக் கொள்கை சம்பந்தமான நடவடிக்கைகள் இறுக்கப்பட்டன. குறுகிய பணவழங்கல் 1982ம் ஆண்டிலிருந்த 17 சதவிகிதத்துக்கெதிராக 1983ம் ஆண்டில் 25 சதவிகிதமாக அதிகரித்தது. அதாவது, 1983ம் ஆண்டு டிசம்பரிலிருந்த தொகையான 1,175 கோடி 98 இலட்சம் ரூபா 1983ம் ஆண்டு டிசம்பரில் 1,474 கோடி 79 இலட்சம் ரூபாவாக அதிகரித்துவிட்டது. ஆனால், இந்த அதிகரிப்பு, திடீரென உண்டான தேயிலை விலையேற்றம் அதிகரித்ததன் காரணமாகவும் வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறைகளின் திரண்ட பயனாலும் பொருளாதாரத்தில் புரண்ட மிதமிஞ்சிய ரொக்கப்பணத்தின் விளைவாக, 1983ம் ஆண்டின் கடைசிக் காற்பகுதியிலேயே பிரதானமாக ஏற்பட்டது.

ஜூலை மாதக் குழப்பங்கள் போன்ற சில எதிர்பாராத புறம்பான காரணங்களும், வெளிநாட்டு நாணய மாற்றுச் சந்தையில் நடைபெற்ற ஊகவணிக பேர முயற்சிகளும், ஏற்றுமதி வருமானத்தைத் தாயகத்துக்கு அனுப்புவதில் ஏற்பட்ட காலதாமதங்களும் 1983ம் ஆண்டில் நாணய நிர்வாகத்தை மேலும் சிக்கலாக்கின, கடந்த வருடப் பிற்பகுதியில் கொடுகடன்களில் ஏற்பட்ட விரிவின் விளைவாகவும் பொருளாதாரத்தில் பணவீக்க நெருக்குதல்கள் அதிகரித்தன. செலவழிப்பின் உயர் மட்டங்கள் சகிக்கக்கூடிய வரம்புகளுக்கு அப்பால் விலைகளைத் துரத்திக்கொண்டிருப்பது நீடித்ததால், கொடுகடன் கட்டுப்பாடுகளை மத்திய வங்கி அமுலுக்குக் கொண்டுவந்தது. இந்நிலைமையின் விளைவாக 1983 நவம்பர் 1ந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்படியாக வர்த்தக வங்கி முற்பணங்கள் மீது கொடுகடன் உச்சவரம்பு விதிக்கப்பட்டது. கொடுகடன் உச்சவரம்பு நவம்பர் மாத முடிவில் நீக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, கொடுகடன்களைக் கட்டுப்படுத்துவதற்காக பாரம்பரிய வகைகளிலான கொள்கைக் கருவிகள் பிரயோகிக்கப்பட்டன; வர்த்தக வங்கிகளால் தனியார்துறைக்கு அனுமதிக்கப்படும் மேலதிகப்பற்றுகளில் பயன்படுத்தப்படாத மிச்சங்கள் மீது ஒதுக்கு விகிதமொன்றைப் புகுத்துவதன் மூலமும், முற்பணங்கள் வழங்குவதற்கான தண்டனை விகிதத்தின் கீழ் சௌகரியம் கிடைப்பதைக் குறைப்பதன் மூலமும், வர்த்தக வங்கி முற்பணங்கள் மீதான வைப்புகளின் ஒதுக்குத்தேவை அதிகரிக்கப்பட்டது; இதே வேளை தற்காலிக ரொக்கப்பணத் தேவைகளுக்காக வங்கி விகிதத்தின் கீழ் வர்த்தக வங்கிகளுக்கு ஒதுக்கப்பட்ட "கோட்டாக்களை" மிஞ்சவேண்டாமென்று வர்த்தக வங்கிகள் பணிக்கப்பட்டன. எனினும், 1983ம் ஆண்டின் பிற்பகுதியில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட நாணயக் கொள்கை நடவடிக்கைகளுடன் நாணய விரிவு 22 சதவிகிதமட்டத்தில் பிடித்து நிறுத்தப்பட்டது. இது கொடுகடனின் துரித விரிவை மட்டுப்படுத்திவிட்டது.

பண நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு பொதுவாக மூன்று பிரதான சமயாசமயக் காரணிகளைப் பொறுத்திருக்கிறது. அதாவது, உள்நாட்டுக் கொடுகடன்கள். வங்கி முறையின் நிகர வெளிநாட்டுச் சொத்துக்கள்; "மற்றும் இனங்கள்". 1983ம் ஆண்டில் இலங்கையின் நாணய விரிவு பிரதானமாகத் தனியார் துறையில் முன்னெப்போதும் காணாத அளவில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும், அத்துடன் அவ்வருடத்தின் கடைசி இரண்டு மாதங்களில் நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் செங்குத்தாக அதிகரித்ததனாலும் உண்டாயிற்று.

இலங்கையில்பணநிரம்பலை உருவாக்குவதில் வங்கி முறையின் நிகர வெளிநாட்டுச் சொத்துக்கள் ஒரு முக்கியமான காரணியாக இருந்துவந்துள்ளன. நிகர வெளிநாட்டுச் சொத்துக்களில் ஓர் அதிகரிப்பு ஏற்படும்போது, பண நிரம்பல் விரிவடைகிறது. 1983ம் ஆண்டின் கடைசி இரண்டு மாதங்களிலும் 1984ம் வருட ஆரம்பத்திலும் நடந்தது இது தான். வங்கி முறையின் (நிகர) வெளிநாட்டுச் சொத்துக்கள், ஓராண்டுக்குமுன்பு அதே கால கட்டத்தில் 19 சதவிகிதம் வீழ்ச்சியுற்றதுடன் ஒப்பிடுகையில் சுமார் 34 சதவிகிதம் அதிகரித்தன,

உதாரணமாக, 1983ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மத்திய வங்கி வர்த்தக வங்கிகளிலிருந்து கொள்வனவு செய்த (கூயர் ஏற்றுமதி வருவாயிலிருந்து எழுந்த) வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதி கிட்டத்தட்ட 400 கோடி ரூபாவாகும். இதே வேளையில்

சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு நம்பகமான ஏற்பாட்டின் கீழ் எடுக்கப்பட்ட பணத்தொகைகளும், ஒரு ஜப்பானிய யென் கடனையும் ஓர் ஐரோப்பிய நாணயக் கடனின் ஒரு பகுதியையும் பயன்படுத்திய நடவடிக்கையும் மத்திய வங்கி வைத்திருந்த ரொக்கப் பணத்திலும் நிலுவைகளிலும் மேலும் 150 கோடி ரூபாவை உயர்த்தின. இக்காரணிகள்யாவும் இக்காலத்தில் நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களைப் பெருமளவு அதிகரிக்க உதவின. ஆனால், வெளிநாட்டுச் சம்பாத்தியங்கள் அதிகரிக்கும் போது, இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் உள்நாட்டுப் பகுதியைத் தீர்க்க மத்திய வங்கி வங்கிமுறை மூலமாக மேலதிக பணத்தை வெளியிட வேண்டியிருக்கிறது. இது பண நிரம்பலை அதிகரித்துவிடுகிறது.

எனினும், பண நிரம்பலின் அதிகரிப்பில் அதிக செல்வாக்குள்ள காரணி என்னவெனில், உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்படும் அதிகரிப்பாகும். இவ்விஷயத்தில, மத்திய வங்கி "விரும்பப்பட்ட' விகிதத்திலோ அல்லது மட்டத்திலோ பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பைத் தடுத்து நிறுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது. இத்தகைய வரையறுக்கிற கொள்கை நடவடிக்கைகளை மத்திய வங்கி எடுப்பதன் நோக்கம் ஓரளவு விலை ஸ்திரத்தைச் சாதிப்பதுமாகும். குறிப்பாக இலங்கையில், பணநிரம்பல் மிகப்பேரளவில் அதிகரித்த வருடங்களில் விலைக் குறியீட்டெண்ணிலும் செங்குத்தான உயர்வு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

ஒரு சுதந்திர சந்தைச் சூழ்நிலையில், நியாயமான விலை உறுதிப்பாடுள்ள நிலைமைகளில் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதற்கு ஆதரவான நடவடிக்கைகளில்லாமல் நாணயக் கொள்கை மட்டும் போதாதென்பது 1984ம் ஆண்டு ஆரம்பத்திலேயே தெளிவாகிவிட்டது. கிடைத்த விலை காட்டிகளைக் கொண்டு அளவிடப்பட்டவாறு,

**அட்டவணை 5 பண வழங்கலும் விலை மட்டமும்**

| வருட முடிவு | பணவழங்கல் பத்து லட்சம் ரூபா: குறுகிய பண வழங்கல் எம் 1 | பணவழங்கல் பத்து லட்சம் ரூபா: விரிவான பண வழங்கல் எம் 2 | கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1952 - 100 | மத்திய வங்கி மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1974 - 100 |
|---|---|---|---|---|
| 1978 | 5,936.4 | 10,892.1 | 227.8 | 156.7 |
| 1979 | 7,669.3 | 15,057.6 | 252.3 | 171.6 |
| 1980 | 9,428.2 | 19,8860.2 | 318.2 | 229.5 |
| 1981 | 10,024.4 | 24,446.8 | 397.7 | 289.7 |
| 1982 | 11,759.8 | 30,509.9 | 423.7 | 291.5 |
| 1983 | 14,747.9 | 37,256.9 | 517.8 | 418.4 |
| 1984 ஜனவரி | 14,964.3 | 38,277.2 | 523.7 | 454.4 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

பணவீக்கம், குறிப்பாக வருட முடிவில் துரிதமடைந்தது. 1982ம் ஆண்டில 10.8 சதவிகிதம் அதிகரித்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1983ம் ஆண்டில் 14 சதவிகித அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதே வேளையில், பணவீக்கவிகிதம் 1982ம் ஆண்டில் 10 சதவிகிதம் என்றும், 1983ம் ஆண்டில் 14 சத விகிதம் என்றும் 1984ம் ஆண்டின் முதற் சில மாதங்களில் 20 சத விகிதம் என்றும் உத்தியோகபூர்வமாக மதிப்பிடப்பட்டது.

### விலைகள்

1982ம் ஆண்டில் சாதிக்கப்பட்ட விலை உறுதிப்பாட்டின் ஒப்பியல் அளவு 1983ம் ஆண்டின் முதற் சில மாதங்களில் நீடித்ததென்றாலும், வருட மத்தியில் விலைகள் செங்குத்தாக ஏறத் தொடங்கிவிட்டன. ஏற்கெனவே அவதானிக்கப்பட்டது போல், இந்நிலைமையை உருவாக்கிய ஒரு முக்கியமான காரணி, 1983ம் ஆண்டின் பிற்பாதியில் தனியார் துறைக்கும் கூட்டுறவுத் துறைக்கும் கொடுகடன்கள் துரிதமாக விரிவடைந்ததாகும். ஜூலைமாதக் குழப்பங்களுக்குப்பின் புனர் வாழ்வுக்கான கொடுகடன்கள் வழங்க வேண்டிய விசேஷ தேவையைச் சமாளிப்பதற்காகவும், ஏற்றுமதிக்கான நிதிகளைக் காணும் அதிகரித்த தேவையை நிறைவேற்றுவதற்காகவும் வர்த்தக நிதியளிப்புக்காகவுமே கொடுகடன்கள் துரிதமாக விரிவடைந்தன. 1983ம் ஆண்டு டிசம்பர் மாத அளவில், புள்ளிக்குப் புள்ளி என்ற அடிப்படையில், கொழும்பு நுகர்வோரின் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் அட்டவணை 21 சதவிகிதம் அதிகரித்திருக்கக் காணப்பட்டது. 1982ம் ஆண்டிலிருந்த 10.8 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில், பொதுவாக 1983ம் ஆண்டில் விலை அதிகரிப்பின் சராசரி விகிதம் 14 சதவிகிதமாயிருந்தது வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் அட்டவணையில் ஏற்பட்ட அதிகரிப்புகளுக்குப் பொறுப்பான காரணிகளைப் பகுப்பாய்வு செய்த மத்திய வங்கி.

பிரதானமாக உணவுத் தொகுதி (இது அட்டவணையில் 67 சதவிகித கனத்தைக் கொண்டுள்ளது) யிலுள்ள இனங்களின் பேரில் ஏற்பட்ட அதிகரிப்புகளே இந்நிலைமையைத் தோற்றுவிப்பதற்குப் பொறுப்பாயிருந்தன வென்று சுட்டிக்காட்டியுள்ளது. இரு குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடத்தக்க இனங்களில் ஒன்று தேயிலை ஏற்றுமதி விலைகள் திடீரென ஏறியதன் விளைவாக உள்நாட்டு விலைகள் உயர்ந்தன. மற்றது தேங்காய் — தேங்காய் விலைகள் முன்னெப்போதும் காணாத மட்டங்களுக்கு உயர்ந்தன. இவை தவிர, கோதுமை மா, பாண் ஆகியவற்றின் விலைகளும் பஸ்கட்டணங்களும் மண்ணெண்ணெய் விலையும கணிசமான அளவில் மேல் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டன.

உலக நாணய மாற்று அசைவுகளின் விளைவாக ஏற்பட்ட நாணய மாற்று வீதத்தின் மதிப்பிறக்கமும ரூபாவின் வீழ்ச்சியடைந்துவந்த பெறுமதியும் ஓர் "உண்மையான பயனுறுதி வாய்ந்த வீதம்" ஒன்றை வைத்திருக்கவேண்டிய அவசியமும் விலை நிலைமையை உருவாக்கும் இன்னொரு முக்கியமான காரணியாக விளங்கின. ஆசிய அபிவிருத்தி வங்கி கூறியவாறு, இலங்கையின் நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட மாறுதல்கள் ஆசியப் பிரதேசத்திலுள்ள நாடுகளைடையே மிக உயர்வாயிருந்தன. உயர்பட்டப் பணவீக்கத்தைப் பதிவு செய்த இந்த ஆசிய நாடுகள் பலவற்றில் அமெரிக்க டொலர் சம்பந்தமாக அவைகளின் நாணயங்களில் ஏற்பட்ட மதிப்பிறக்கம், அவை அனுபவித்த பாரிய விலை அதிகரிப்புகளில் ஒரு முக்கியமான காரணியாக இருந்தது. 1983ம் ஆண்டில் பிரெஞ்சு நாணயமான ஃபிராங்கைத் தவிர மற்றெல்லாப் பிரதான நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபாவின் மதிப்பு இறங்கியது. அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கம் சுமார் 15 சதவிகிதமாயிருந்தது. ஆனால் 1977 நவம்பர் 16ந் திகதிக்குப் பின் இது அமெரிக்க டொலருக்கெதிராக 36 சதவிகிதத் திரண்ட மதிப்பிறக்கமாகியது. 1982ம் வருட முடிவில் 21.32 ரூபாவாயிருந்த அமெரிக்க டொலரின் ரூபாய் பெறுமதி 1983ம் வருட முடிவில் 25.00 ரூபாவுக்கு வீழ்ச்சியடைந்துவிட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி இப்போக்குகளைப் பற்றி 1983ம் ஆண்டுக்கான அதன் வருடாந்த அறிக்கையில் விமர்சிக்கும்போது கூறுவதாவது: "பொருளாதாரத்தின் போட்டித்திறனை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் 1983 மார்ச் மாதத்தில் ஏறக்குறைய 10 சதவிகிதமும், மீண்டும் ஜூலை மாதத்தில் ஏறக்குறைய 5 சதவிகிதமும் நாணயத்தின் மதிப்பைக் குறைத்தது; இதேவேளை இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் உள்நாட்டில் நிர்ணயிக்கப்பட்ட விலைகள் உலக விலைகளுக்கும் புதிய நாணயமாற்று வீதங்களுக்கும் ஏற்பச் சரிப்படுத்தப்பட்டன!".

1978ம் வருடத்திலிருந்து 1983ம் வருடம் வரையுள்ள ஆறு வருடகாலத்தில் நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட வருடாந்த அதிகரிப்பு விகிதம் ஏறக்குறைய 15.1 சதவிகிதமாயிருந்தது. இந்தச் செங்குத்தான அதிகரிப்புக்கான காரணங்களில் சில-பெற்றோலியம் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் அதிகரித்து வந்த சர்வதேச விலைகள், 1977ம் ஆண்டில் நாணய மாற்று வீதத்திலே செய்யப்பட்ட பாரிய திருத்தங்கள், அதையடுத்து, கடந்த ஆறு வருடங்களில் நாணயத்தின் மதிப்பு படிப்படியாக மேலும் குறைந்து வந்தமை, அடிப்படை நுகர்ப்பொருள்களினதும் சேவைகளினதும் நடைமுறைப்படுத்தப்பட்ட விலைகள் காலத்துக்குக்காலம் திருத்தியமைக்கப்பட்டமை ஆகியனவாம். இதற்கு உதவிய ஒரு முக்கிய காரணி இக்கால முழுதும் மிதமிஞ்சிய கேள்வி நிலைமைகள் இருந்து வந்ததாகும். இதற்குப் பிரதான காரணம அரசாங்க முதலீடுகள் கனத்த அளவில் செய்யப்பட்டதாகும்.

1983ம் ஆண்டில் உள்நாட்டு விலைகள் முந்திய வருடத்தில் விட உயர்வான விகிதத்தில் அதிகரித்தன. எனினும, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணும் ஊள்ளார்ந்த மொ. உ. உ. சுருக்கியும் எடுத்துக்காட்டிய விகிதங்கள் முந்திய ஐந்துவருட காலத்துக்குரிய சராசரியை விட சற்றுக் குறைவாயிருந்தன. மொத்த விற்பனை விலைச்சுட்டெண் காட்டிய செங்குத்தான அதிகரிப்பு பிரதானமாக முக்கிய ஏற்றுமதிப் பண்டங்களின் அனுகூலமான விலைப்பெயர்ச்சிகளையே பிரதிபலிக்கின்றது.

நுகர்ப்பொருள்களிடையே எரிபொருளும் வெளிச்சத் தொகுதியும் தான் விலை அதிகரிப்பில் ஆக உயர்ந்த விகிதத்தைப் பதிவு செய்தன. இது பிரதானமாக விறகினதும் மண்ணெண்ணெயினதும் அதிகரித்த விலைகளையே பிரதிபலிக்கின்றது. கோதுமை மா, பிரயாணிகள் போக்குவரத்துக் கட்டணங்கள் போன்ற நடைமுறைப் படுத்தப்பட்ட விலைகள் மேல் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டதன் காரணமாக உணவுப் பொருள்கள் நானாவித பொருள்களின் தொகுதிகளிலும் விலைகள் அதிகரித்தன. இலங்கையின் முக்கிய இறக்குமதிப் பொருள்கள் முந்திய வருடங்களுடன் ஒப்பிடுகையில் 1983ம் ஆண்டில் பொதுவாகக் குறைவான அதிகரிப்பு விகிதத்தையே பதிவு செய்தன. எனினும், இந்த இறக்குமதிகளின் ரூபா விலைகள் நாணய மதிப்பிறக்கத்தின் காரணமாகவும் பல இறக்குமதித் தீர்வை விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டதனாலும் அதிகரித்தன.

### வேதனங்கள்

விலைகள் துரிதமாக அதிகரித்ததனாலும் பெயரளவான வேதனங்கள் அதிகரிக்கும் வேகம் குறைந்ததனாலும் உண்மையான வேதன விகிதங்களின் அசைவுகள் வரையறுக்கப்பட்டன. சகல இனங்கள் சமபந்தமாகவும் கொழும்பு வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணில் 1982ம் ஆண்டிலிருந்த 416.1 புள்ளிகள் 1983ம் ஆண்டில் 474.2 புள்ளிகளுக்கு அதிகரித்தன; மத்திய வங்கியின் மொத்த விற்பனைவிலைச் சுட்டெண்ணில் 1982ம ஆண்டிலிருந்த 283.3 புள்ளிகள் 1983ம் ஆண்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில் 354.1 புள்ளிகளுக்கு உயர்ந்தது. இதேவேளை சம்பள நிர்ணய சபைகளின் கீழ்வரும் சகல தரங்களையும் சேர்ந்த தொழிலாளர்களினதும், அரசினர் பாடசாலை ஆசிரியர்களினதும் உண்மையான சம்பள விகிதங்கள் இக்காலத்தில் ஒரு வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

அரசாங்கத்துறையில் பண வேதனங்கள் இலேசாக அதிகரித்த அதேவேளையில் ஸ்தாபன ரீதியாக அமைந்த தனியார் துறையில் அவை 1982ம் ஆண்டிலிருந்த 16 சதவிகிதத்துக்கெதிராக 7 சதவிகிதமே அதிகரித்தன. எனினும், தாபன ரீதியாக அமையாத தனியார் துறையில் இந்த அதிகரிப்புகள் அதிகம் குறிப்பிடத்தக்கனவாயிருந்தன. மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி நெல்—றப்பர் உற்பத்தித் துறைகளில் பெயரளவான வேதனங்கள் 18—19 சதவிகிதம் அதிகரித்தன.

### வேலை வாய்ப்புகள்

அரசாங்கத்துறையிலும் அரசசார் துறையிலும் தாபனரீதியாக அமைந்த தனியார்துறையிலும் வேலைவாய்ப்புநிலைமை ஸ்திரமாக இருந்ததாகவே தோன்றியது. எனினும், எந்த மதிக்கக்கூடிய அதிகரிப்புகளும் ஏற்படவில்லை. எனினும், அரசாங்கச் செலவுகள் மீது குறிப்பாக மூலதனச் செலவுகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடும், முதலீட்டுத் திட்டங்களுக்குள் புதிய செய்திட்டங்களைச்சேர்க்காதிருக்கும்கொள்கையும் அரசாங்கத் துறையில் புதியவேலை வாய்ப்புகளைக் குறைக்கும் முக்கிய காரணிகளாயிருந்தன. அரசுசார்துறை (கூட்டுத்தாபனங்கல் முதலியன) "சிக்கன முறைகள், யதார்த்த நிலைமைகள், நிதிசார் ஒழுங்குமுறை ஆகிய கட்டுப்பாடுகளின் கீழ் பல சந்தர்ப்பங்களில் உண்மையான ஆட்குறைப்பை அனுபவித்தன. மற்றும் கூட்டுத்தாபனங்களில் அதிகரித்த வேலை வாய்ப்புகள் ஆட்குறைப்பை ஈடு செய்வதற்கு போதவேபோதாது. வெளிநாட்டு ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சிகளில் மட்டுமே—அதாவது பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷன், வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் கமிட்டி ஆகியவற்றின் தொழில் முயற்சிகளில் மாத்திரமே—சில புதிய வேலை வாய்ப்புகள் உண்டாக்கப்பட்டதாகத் தெரிந்தது" என்று மத்திய வங்கி அதன் வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

### மூலதன ஆக்கம்

தாராளமயமாக்கப்பட்டதன் பின்னர் இலங்கைப் பொருளாதாரம் அனுபவித்த நிலைமை பிரதிகூலமான சர்வதேச நிலைமைகளின் தோற்றத்தால் மோசமடைந்த போதிலும், அதன் அடிப்படைக் காரணம், கிடைக்

## அட்டவணை 6

### வருடாந்த சராசரி விலை அதிகரிப்புகள் 1978—1983 (ஆண்டொன்றுக்குச் சதவிகிதம்).

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|---|---|
| 1. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் | 12.1 | 10 8 | 26.1 | 18.0 | 1.08 | 14.0 |
| 2. மத்திய வங்கியின் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் | 9.1 | 19.0 | 37.8 | 23.7 | 11.0 | (க. இ.) |
| 3. மத்திய வங்கியின் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் | 15.8 | 9.5 | 33.7 | 170 | 10.0 | 25.0 |
| 4. மொ. உ. உ. சுருக்கி | 8.3 | 15.3 | 20.6 | 21.4 | 11:0 | 15.0 |

க. இ. — கணக்கு இல்லை

மொ. உ. உ. — மொத்த உள்நாட்டு உற்பத்தி

ஆதாரம்: அரசாங்க முதலீடுகள் 1984—1988 பக்கங்கள் 26—27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக் கூடியதாயிருந்த நிதிகளை வெகுவாக மிஞ்சி, பெருவாரியாக முதலீடு செய்யும் ஒரு வேலைத்திட்டத்தின் வாயிலாக அபிவிருத்தி வேகத்தை நிர்ப்பந்தமாக அதிகரிப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சியேயாகும். வெளிநாட்டுச் சொத்துக்களைப் பயன்படுத்த அவ்வளவாகச் சுதந்திரமில்லாத நிலையில், நிலையான மூலதனத்தை உள்நாட்டில் மொத்தமாக உருவாக்குவதற்கு நிதியளிப்பதற்காகச் சலுகையடிப்படையிலான உதவியையும் வணிகக் கடன்களையும் சார்ந்திருப்பது வெகுவாக அதிகரித்தது. 1983ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தின் வளர்ச்சி, 1982ம் ஆண்டில் ஏற்பட்ட 30 சதவிகித வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 16 சதவிகிதம் மட்டுமே அதிகரித்தது. இதற்கு அரசாங்கத்துறையில் புதிய முதலீட்டுத் திட்டங்கள் நிறுத்தப்பட்டதும், ஜூலை மாதத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்குப் பின் தனியார் துறையில் நிலவிய நிச்சயமற்ற நிலைமைகளும் ஓரளவுக்குக் காரணமாகும்.

1983ம் வருடத்தின்போது அரசாங்கம் எடுத்த அரசிறை நடவடிக்கைகளின் கூட்டுமொத்த சாதனை, முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் மட்டுமன்றி 1980ம் ஆண்டில் நிகழ்ந்த நிதி வருடத்துக்குப்பின் வரவுசெலவுத் திட்ட ரீதியாகச் சாதிக்கப்பட்டவற்றுடன் ஒப்பிடுகையிலும், பெரும் அபிவிருத்தியைக் காட்டியது. சமீப ஆண்டுகளில் நிலவிய ஏற்றத்தாழ்வான நிதிநிலையும் அதன் நிதியளிப்பு முறையும் விலைகள், சென்மதி நிலுவைகள், நாணய மாற்று வீதம் ஆகியன ஸ்திரமாயில்லாதிருந்ததற்கு ஒரு முக்கிய காரணமாயிருந்தன. இதற்கு மாறாக 1983ம் ஆண்டில் நிலவிய நிலைமை நிதி சார் ஒழுங்கு முறையை அமுல் நடத்துவதற்கான ஒரு ஒருமுகப்பட்ட முயற்சியைப் பிரதிபலித்தது. 1983ம் வருட "சிக்கன வாழ்வுக்கான வரவு செலவுத் திட்டம் உள்நாட்டுச் சேமிப்புக்களின் மட்டத்தை உயர்த்துவதில் அரசாங்கத்தின் சேமிப்பு முயற்சிக்கு விசேட கவனத்தை ஈர்த்தது. வரவுசெலவுத் திட்டம் அரசாங்கச் செலவினங்களில் கடும் குறைப்புகள் தவிர்க்க முடியாதனவென்று வற்புறுத்தியதுடன் மட்டுமன்றி அரசாங்கத்தின் வரிப்பணவருவாயின் ஆதாரத்தை அதிகரிக்கவேண்டிய தன் அவசியத்தையும் சுட்டிக்காட்டியது. 1983ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் வரிப்பண வருவாயை அதிகரிப்பதற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவற்றில் மொத்த வியாபார வரிவிகிதங்களை உயர்த்துதல் அதுவரை வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்த இறக்குமதிகள் மீது தீர்வைகளை விதித்தல் மத்திய வங்கியின் இலாபங்களில் ஒருபகுதியைத் திறைசேரிக்கு மற்றுதல் ஆகியனவும் அடங்கும். மேலும் வரிச் சலுகைகள் அபிவிருத்திக்காக முதலிடம் பெறவேண்டிய துறைகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டன. இவை அடிப்படையில் பாரம்பரியமற்ற ஏற்றுமதித் துறையையே உள்ளடக்கின. ஆதலால், 1983ம் ஆண்டில் அரசாங்கத்தால் நடப்புக் கணக்கில் ஓர் உபரியை ஏற்படுத்த முடிந்தது. மேலும் பண வீக்கத்தை உண்டாக்கவல்ல வங்கிக் கடனை நாடும் முயற்சிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முன்பு 4 சதவிகிதத்துக்கு மேலிருந்ததிலிருந்து ஒரே ஒரு சதவிகிதத்துக்கு வீழ்ச்சியடைந்துவிட்டன. அரசிறை நடவடிக்கைகளில் காணப்பட்ட இன்னொரு முக்கியமான அம்சம், வரிப்பண வருவாய் அதிகரித்ததாகும். இதுவே வரவு செலவுத் திட்டத்தின் இறுதிப் பயப்பை உருவாக்கிய முக்கிய காரணியாயிருந்தது.

## 1984ம் ஆண்டின் போக்குகள்

1984ம் வருட வரவு செலவுத் திட்டம் 1983ம் வருடத்திலிருந்து 1987ம் வருடம் வரையான நடுத்தர கால முதலீட்டுத் திட்டத்தின் பின்னணியில் உருவாக்கப்பட்டது. திருப்திகரமான வரவு செலவுத் திட்டப் பயப்பையும் சென்மதி நிலுவைகள் நிலையையும் ஏற்படுத்துவதே அதன் நோக்கம். முதலீட்டுத் திட்டத்தில் வரவுசெலவுத்திட்ட நிர்வாகம் சென்மதி நிலுவைகள் மீது நெருக்குதலைக் குறைப்பதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையாகுமெனக் கருதப்படுகிறது.

பெருந்தோட்டப் பயிர்களின் விலைகளில் அனுகூலமான அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளதால், அரசாங்கத்துக்குக் கிடைக்கக்கூடிய வரிப்பண வருவாய்பற்றி எதிர்பார்ப்புகளை மாற்றியமைப்பது சாத்தியமாகியுள்ளது. 1984ம் வருடத்தில் பெறுமதிப்படியான தேயிலை வரியிலிருந்து மேலதிகமாக ஏறக்குறைய 150 கோடி ரூபாவை வசூலிக்க முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி விலைகளின் தற்போதைய போக்குகளைக் கவனிக்குமிடத்து, இது அடையக்கூடிய இலக்காகவே தென்படுகிறது. ரப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வையைப் பொறுத்தவரை, 1984ம் ஆண்டில் ஏறக்குறைய 35 கோடி ரூபா வருவாய் அதிகரிப்பு ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இறக்குமதித் தீர்வைகள் முன்பு வரவுசெலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட தொகைக்கு மேல் வருவாயை அதிகரிக்குமென்றும் அதாவது 30 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட வருவாயைக் கொண்டுவருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் அரசாங்கம் செய்த ஒரு முடிவின்படி, அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் உரிய வருவாயிலிருந்து உதவு தொகைகளாக மேலும் 35 கோடி ரூபா வந்து சேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவையும் மற்றும் காரணிகளும் 1984ம் ஆண்டில் அரசாங்கத்தின் வருவாயை 230 கோடி ரூபாவுக்கு மேல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மொத்த நடப்புப் பெறுவனவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 22 சதவிகிதமாயிருக்குமென்று மதிப்பிடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. 1984ம் ஆண்டுக்கும் 1988ம் ஆண்டுக்குமிடையே மூல வளங்களைப் பயன்படுத்துவதில் ஒரு கட்டுக்கோப்பு ரீதியான உருமாற்றத்தைச் சாதிக்கலாமென அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அரசாங்க மூலதனச் செலவுகள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தனியார்துறை அபிவிருத்திக்கு நிதிகளை விடுவிக்குமென்று எதிர்பார்க்கப்படுவதால், தனியார்துறை முதலீடுகளின் ஒப்பியல் பங்கு அதிகரிக்குமென்று மதிப்பிடப்படுகிறது. 1984ம் ஆண்டிலிருந்து 1988ம் ஆண்டுவரையுள்ள காலத்தில் முதலீடு செய்யப்படுமென மதிப்பிடப்படும் மொத்தம் 20,290 கோடி ரூபாவில், அரசாங்கத்துறை முதலீட்டின் பங்கு 10,630 கோடி ரூபாவாகவும், தனியார்துறை முதலீட்டின் பங்கு 9,660 கோடி ரூபாவாகவுமிருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. எனினும், தனியார்துறையின் ஒப்பியல்பங்கு அதிகரிக்குமென்றும் 1987—1988ம் வருட அளவில் அரசாங்கத்துறை மூலதனச் செலவை இறுதியில் மிஞ்சிவிடுமென்றும் மதிப்பிடப்படுகிறது.

விரும்பப்படும் மொத்த முதலீட்டு மட்டங்களையும் கட்டுக்கோப்பையும் அடைவதற்காக, உள்நாட்டுச் சேமிப்புகள் கடந்தகாலத்தில்விட அதிக பங்காற்றுமென உறுதி கூறப்படுகிறது. அரசாங்கத்துறை தனியார்துறை ஆகிய இரு துறைகளும் இந் நோக்கத்துக்குத திட்டமாகப் பங்களிப்புச் செய்யுமென்று மதிப்பிடப்படுகிறது. உண்மையில், தனியார்துறை சேமிப்புகள் துரிதமாக வளர்ந்து 1984ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11 சத விகித மட்டத்தை அடையுமென மதிப்பிடப்படுவதுடன் 1988ம் ஆண்டில் 15·7 சத விகித மட்டத்தை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. நிகர வெளிநாட்டு நிதிகளின் உட்பாய்வு வீழ்ச்சியடையுமென்று மதிப்பிடப்படுகிறது. இந்தத் தளர்வைத தனியார்துறை ஈடுசெய்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பண நிரம்பலில் ஏற்பட்ட சுமார் 25சத விகித அதிகரிப்பு 1984 மே மாதம் வரை தொடர்ந்து இருந்து வந்தது. இதனால் கொடுகடன் விரிவை வரையறுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய வங்கி மீண்டும் எடுக்க வேண்டியிருந்தது. பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு விலைகள் மீதும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே, 1984 மே மாதத்தில் பண வீக்கம் இருபது சதவிகிதமாயிருந்து வந்தது. பண வீக்கம் அதிகரித்து வந்ததாலும், ரொக்கப் பண விகிதம் உயர்மட்டத்திலிருந்த போதிலும் வட்டி விகிதங்களைக் கீழிறக்க முடியாதிருந்ததாலும் மத்திய வங்கி நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நாணயக்கொள்கையில் மாற்றங்களைச் செய்வதலன்றி ஸ்திரமான விலைகளை ஏற்படுத்தி, பொருளாதார நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சியாகப் பணவீக்கம் வட்டி விகிதங்கள் ஆகிய இரண்டையும் அமர்த்திவைக்கும் உபாயத்தை மத்திய வங்கி தற்போது கையாண்டு வருகிறது. உயர் விலைகளால் நாட்டின் சென்மதி நிலுவைகள் மீது நெருக்குதல் அதிகரிக்குமென்ற அச்சங்களும் இருந்து வந்துள்ளன. வருட ஆரம்பத்தில் நடந்ததிலிருந்து அவதானிக்கப்பட்டவாறு, அதிகரித்து வரும் பணவீக்கத்துடன் சென்மதி நிலுவைகளின் சீர்குலைவும் சேர்ந்து நாணயமாற்று வீதங்களில் கனத்த ஹேஷ்ய பேரங்களை உண்டாக்கியது. பொருளாதாரத்தின்மீது இந்தப் போக்கின் பாதகமான விளைவை ஆகக் குறைந்த அளவுக்குக் குறைப்பதற்காகவே, கொடுகடனின் விரிவைக் கட்டுப்படுத்துவதென மத்தியவங்கி முடிவு செய்தது. வர்த்தக வங்கிகள் தனியார்துறைக்கு அவற்றின் கொடுகடன் விரிவை மே 11ந் திகதி அடைந்த கடன்கள், முற்பணங்களின் மட்டத்துக்குமேல் 5 சத விகிதத்துக்கு மட்டுமே வரையறுக்கும்படி உத்தரவிடப்பட்டன. வருடத்தின் ஆரம்பத்தில் கூட அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் சம்பந்தமாக வர்த்தக வங்கிகள் அவற்றின் மார்ச்மாத மட்டங்களுக்கு மேல் கொடுகடன்களை விரிவாக்கக் கூடாதென மத்திய வங்கி தடைவிதித்தது. இதில் மத்திய வங்கியின் நோக்கம் அத்தியாவசியமற்ற பொருள்கள் சம்பந்தமான இறக்குமதிகளுக்கு ஊக்கமளிக்காதிருக்கும் அதேவேளையில் தோட்டங்கள் உட்பட ஏற்றுமதிகளுக்கும் விவசாயத்துக்கும் நிதி வழங்குவதாகும். அரசாங்கம் மத்தியவங்கியின் வாயிலாகக் கொடுகடன் பாய்வுகளின் தரத்தை அபிவிருத்தி செய்து அதன் அபிவிருத்தி முதன்மைகளுக்கு இசைவாகக் கொண்டுவர முயன்று வந்துள்ளது.

இந்தக் கொடுகடன் கட்டுப்பாடுகளை அமுலுக்குக்கொண்டு வருவதில் மத்தியவங்கி அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்குச் சந்தை அதன் சொந்த நிதிகளை உபயோகித்தோ அல்லது பங்கு முதலிலும் முறிப் பத்திரங்களிலும் வியாபாரம் செய்யும் சந்தையிலிருந்து கடன் வாங்கியோ அல்லது நிதிக் கம்பெனிகளிலிருந்து கடன் வாங்கியோ தன்னைச் சரிப்படுத்திக் கொள்ளும் என்று நம்பியது; ஆனால், கடனாக வாங்கப்படும் இத்தகைய நிதிகளுக்கு அதிக பணச் செலவு ஏற்படுவதால் சிறிது காலத்துக்குப் பின்பு அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்து விடுமென்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், கொடுகடன் கட்டுப்பாடுகளிருக்கும் காலங்களில் இவ்வகையான நிதிகளுக்கான கோரிக்கை அதிகரித்துக்கொண்டேயிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அத்தியாவசியமற்ற சில இறக்குமதிகளுக்கு வங்கித் தொழில் நடத்தாத ஸ்தாபனங்கள் தொடர்ந்து மிக உயர்ந்த பணச் செலவில் நிதியளிப்புச் செய்து வருகின்றன. இச்செலவில் வட்டி அறவீடுகளும் முகாமைக் கட்டணங்களும் செலவில் 50 சத விகிதத்துக்கும் 70 சத விகிதத்துக்குமிடையே வேறுபடும் தரகுகளும் அடங்கும். அப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியிருந்தும் இத்தகைய நிதிகளுக்குக் கோரிக்கை இருந்து வருகிறது.

1983 ஜூலை மாதத்திலிருந்து பத்து மாதகாலத்தில் பணவீக்க நிர்ப்பந்தங்கள் அதிகரித்ததன் விளைவாகக் கிட்டத்தட்ட சகல துறைகளிலும் சம்பள உயர்வுக்கான நெருக்குதல்கள் தோன்றியுள்ளன. தோட்டத் தொழிலாளர்களும் அரசினர் ஆசிரியர்களும் மற்றும் அரசாங்கசேவைத் துறைகளும் தங்களுடைய கோரிக்கைகளைக் கட்டாயப்படுத்திப் பெற்றுள்ளன.

1984ம் ஆண்டின் முதற்சில மாதங்களில் பணவீக்க நிர்ப்பந்தங்கள் இரு காரணிகளால் தூண்டப்பட்டுள்ளன என்பதைக் காணலாம் — பண வழங்கலில் செங்குத்தான அதிகரிப்பும், வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணில் குறிப்பிடத்தக்க நிலை வகிக்கும் முக்கியமான உணவுப் பொருட்களின் அருமையும், தட்டுப்பாடுகளும்.

பயிர்த் தட்டுப்பாட்டையும் உணவுத் தட்டுப்பாட்டையும் உண்டாக்குவதில் காலநிலை மீண்டும் முக்கிய பங்கெடுத்துள்ளது. சமீப வருடங்களில் அது இடையறுத வறட்சி நிலைமைகளாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் 1984ம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் நிலைமை தலைகீழாக மாறி மித மிஞ்சிய மழையும் வெள்ளமுமாகி விட்டது. அதன் விளைவாக அரிசி, மரக்கறிகள், வெங்காயம், மிளகாய், மீன்போன்ற உணவுத் தொகுதியிலுள்ள ஜீவாதாரமான பொருள்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பொருள்களில் பலவற்றின் விலைகள் அதிக காலம்வரை முன்னெப்போதும் காணாத மட்டங்களில் இருந்துவந்தன. உணவு விலைகள் உயராமல் கட்டுப்படுத்தப்பட்டாலன்றி மற்றபடி தற்போதுள்ள பணவீக்கப் போக்குகளை 1984ம் ஆண்டில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது சுலபமாயிருக்காது. மற்றுங் காரணி பணவழங்கலும் மிதமிஞ்சிய ரொக்கப் பண விகிதமுமாகும். இதில் மத்திய வங்கி அதன் கவனத்தைத் திருப்பியுள்ளது.

நிதி முறையிலுள்ள ரொக்கப் பண நிலைமையை உருவாக்க மத்திய வங்கி பல்வேறு நடவடிக்கைகளை வகுத்துவந்துள்ளதுடன், பண நிரம்பலை அதன் தற்போதைய வளர்ச்சி விகிதமான 25 சத விகிதத்திலிருந்து 1984ம் ஆண்டு முடிவில் 15சத விகிதத்துக்கு இறக்கவும் முயன்று வந்தது. மத்திய வங்கி மிதமிஞ்சிய ரொக்கப் பணத்தின் ஒரு பகுதியை அப்பால் இழுத்துவிடும் முயற்சியில், வரையறுத்த அளவில் பகிரங்க சந்தை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளது; மேலும் ஒரு மேல் நடவடிக்கையாக அதன் சொந்தப் பிணைப் பத்திரங்களை ஏலத்தில் வெளியிட்டும் வருகிறது. எனினும் நிதிகளுக்கான கோரிக்கையைக் குறைக்க முயலும்போது எச்சரிக்கையாக நடந்துகொள்வது அவசியமாகும்; அது தங்களுடைய சொந்த நிதிகளை உபயோகிக்க வியாபார ஸ்தாபனங்களைக் கட்டாயப் படுத்தலாம். ஆனால், அது உற்பத்தியில் அல்லது வேலைவாய்ப்பில் வீழ்ச்சி ஏற்படுவதற்கும் அடிகோலலாம். மேலும், வெகு நீண்ட காலத்துக்குக் கொடுகடன்கள் மீது கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து வைத்திருந்தால், அதுபொருளாதாரத்தில் பெரும் மந்த நிலையை ஏற்படுத்திவிடக்கூடும். அதே சமயத்தில், பணவீக்கம் தொடர்ந்து இருந்துவரும் என்ற எதிர்பார்ப்புக்களுக்கு ஊக்கமளிக்காதவகையில் நாணயக்கொள்கையில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும். குறுகிய கால ஸ்திரப்படுத்தற் கொள்கைகளை நடுத்தர காலத்தில் பொருளாதாரக் கட்டுக்கோப்பில் சீராக்கங்கள் செய்வதுடன் ஒன்றிணைப்பதற்காக இப்பொழுது கிடைக்கக் கூடியதாருமிருக்கும் சாத்தியமான கொள்கைத் தெரிவுகளின் வரம்புகளை அரசாங்கம் கவனமாக மதிப்பாய்வு செய்யவேண்டும். நிதிகள் உற்பத்தித்துறைகளுக்குத் திசைதிருப்பப்படவேண்டும், ஆனால், அப்படிச் செய்வதில் அரசாங்க வரவு செலவுத்திட்டம் தனியார் துறையிலிருந்து பெருந்தொகையான நிதிகளையும் கைப்பற்றுதிருப்பதவசியமாகும். வரவுசெலவுத்திட்டத்தில் உபரியை உண்டாக்குவதன் மூலமும் மூலதனச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் இந்நிலையைத் தவிர்க்கலாம்.

சமீப வருடங்களில் வெளிநாட்டு வர்த்தக நிலை முற்றாகச் சீர்குலைந்துள்ளது. பிரதானமாகத் தனிப்பட்ட பண இடமாற்றங்களும் (வெளிநாட்டுப் பண அனுப்பீடுகள்) உத்தியோகபூர்வமான உதவியின் இடமாற்றங்களும் தான் சென்மதி நிலுவைகள் நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவியுள்ளன. சமீப வருடங்களில் முக்கியத்துவம் அடைந்துள்ள தனிப்பட்ட பண இடமாற்றங்கள் மத்திய கிழக்கு வேலைச் சந்தையில் வாய்ப்புகள் குன்றுவதன் விளைவாக, வரும் வருடங்களில் ஆண்டுதோறும் 4 சதவிகிதத்துக்குக் குறைவாகவே அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், 1988ம் ஆண்டளவில் வர்த்தக நிலுவையில் அபிவிருத்தி ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், வெளிநாட்டு உதவிக்கான எதிர்கால வாய்ப்புகள் கடந்த காலத்திலிருந்ததைவிட மிகக்குறைந்த அனுகூலமுள்ளனவாகவே இருக்கும். அத்துடன், முன்புபோல அதே அளவில் இலங்கை எதிர்காலத்தில் வெளிநாட்டு உதவிபெறுமா என்பது பற்றிச் சந்தேகங்கள் இருந்து வருகின்றன. எனவே, நாடு பொருளாதாரத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்ய அதன் உள்நாட்டு நிதிகளையும் சொந்த உள்நாட்டு முயற்சிகளையுமே அதிக அளவுக்கு நம்பியிருக்க வேண்டும்.

1978ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரையுள்ள காலம் உயர் முதலீட்டு மட்டங்களுக்குக் குறிப்பிடத்தக்கதாகும். இந்த உயர் முதலீடுகள் பெரும்பாலும் அரசாங்கக்கொள்கையினால் தூண்டப்பட்டவை. இக்காலத்தில் வெளிநாட்டு மூலதனப் பாய்விலும், அத்துடன் தேசியச் சேமிப்புகளிலும் கணிசமான அதிகரிப்பு காணப்பட்டது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு முதலீடுகள்

(33 ம் பக்கம் பார்க்க)

# அரசாங்க முதலீடு தொடர்பான முன்னுரிமை களும் தனியார் துறையின் எதிர்பார்ப்புக் களும்

- ரொனி டி மெல்

**(கௌரவ நிதியமைச்சர் திரு ரொனி டி மெல் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை)**

அரசாங்கம் தனது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை ஆரம்பிக்கவுள்ள இவ்வேளையில் கைத்தொழில், வர்த்தகத் தலைவர்கள் மத்தியில் எனக்குப் பேசக் கிடைத்தமை மிகப் பொருத்தமான ஒரு சந்தர்ப்பமாகும். நீண்ட கால விளைவுகளை அளிக்கக் கூடிய பல சீர்திருத்தங்களை 1977 இல் நான் அறிமுகப்படுத்தியதனை நீங்கள் அறிவீர்கள். இச் சீர்திருத்தங்கள், கட்டுப்பாடுகளை நீக்கிப் பொருளாதாரத்தை ஊக்குவித்ததுடன் பொருளாதார அபிவிருத்தியில் தனியார் துறையினர் பிரதான பங்கினையும் மேற்கொள்வதற்குத் தூண்டுதலை அளித்தது. இதன் விளைவாக 1977 - 1982 காலக் கட்டத்தில் மெய்ப் பொருளாதார வளர்ச்சி இரு மடங்காகியது. மொத்த உள்ளூர் உற்பத்தியின் சதவீத அடிப்படையில் நாம் எமது முதலீட்டையும் இரு மடங்காக்கினேம். வேலைப் பட்டாளத்தில் 26 சதவீதமாகவிருந்த வேலையற்றோரின் எண்ணிக்கை இக்காலக் கட்டத்தில் 13 சதவீதமாகக் குறைவடைந்தது. டொலர் அடிப்படையில் தலா வருமானம் 70 சதவீதம் அளவில் அதிகரித்தது. 1980 இல் 35 சதவீதமாகவிருந்த வீக்கம், 1981 இல் 18 சதவீதமாகவும் 1982 இல் 10 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. நாம் வீக்கத்தை 9 சதவீதமாகக் குறைத்ததாக மத்திய வங்கியும் தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிபரப் பணிப்பாளரும கூறுகின்ற போதிலும் நான் அதனை 10 சதவீதம் என்று கூற விரும்புகின்றேன். 1977 — 1982 காலக்கட்டத்தில் அடையப்பட்ட இச் சாதனைகள் எந்தவொரு நாடும் பெருமைப்படத் தக்கதாகும். இக்காலக் கட்டத்தில் இத்தகைய ஒரு சாதனை புரிந்தமை தொடர்பாக ஒரு சில நாடுகளே பெருமிதம் அடையலாம். ஏனெனில், 1932 இன் பின்னர் இக்காலப் பகுதியிலேயே மிக மோசமான பொருளாதாரப் பின்னாங்கல் இடம்பெற்றுள்ளது. இனக் கலவரத்தின் பின்னரும் கடுமையான வறட்சியின் பின்னரும் சென்ற வருடத்தில் இது சிறிது தளம்பியது. மீண்டுமொரு தடவை வீக்கம் 20 சதவீதத்தினுல் அதிகரித்ததுடன் வளர்ச்சி விகிதாசாரம் 4.9 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. எனினும் இதிலிருந்து நாம் பெற்ற நிவாரணம் எமது எதிர்பார்ப்புக்களை விடவும் கூடுதலானதாகும்.

**நெல் உற்பத்தி விவசாயிகள் வழிகாட்டுகின்றனர்.**

நெற் செய்கை இவை யாவற்றை விடவும் கூடிய அபிவிருத்தியைக் காட்டியது. 1977 இல் எமது அரிசித் தேவையில் 46 சதவீதத்தை இறக்குமதி செய்கின்ற நிலையிலிருந்து, - காலநிலை சாதகமாகவிருப்பின் - நாம் அரிசியை இறக்குமதிசெய்யாத நிலையை அடைந்துள்ளோம். எதனையும் சாதிக்கலாம் என்பதனை இது சிறப்பாகக் காட்டுகின்றது. மக்களின் உற்பத்திச் சத்தி, கட்டுப்பாட்டுக் கொள்கைகளால் தடைப்படா திருப்பின் நெற்செய்கையில் புரிந்த சாதனையை ஏனைய துறைகளிலும் சாதிக்கலாம். என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. நாடு தொடர்ச்சியான வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அடைய வேண்டுமானுல் பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு விரிவாக்கப்படல் வேண்டும். முயற்சியாளர்கள் கூடிய இயக்கத்தன்மை, வர்த்தக நுட்பம், முகாமைத்துவ திறன் என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். அவர்கள் தொலைநோக்குடைய அணுகு முறைகளைப் பின்பற்றுவதுடன் முதலீட்டுத் தீர்மானங்களின் காலக் கட்டத்தை அதிகரித்தலும் வேண்டும். நாம் அளித்த ஊக்குவிப்புக்களைத் தேசப் பற்றுடன் ஏற்று, நெல் விவசாயிகள் வழி காட்டியுள்ளனர். நீங்களும் இதனைப் பின்பற்றுவீர்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**ஏமாற்றம் அளிக்கின்ற தனியார் முதலீடு**

மூலதன உருவாக்கம் அல்லது முதலீடு தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றுக்குரிய ஒரு மூலமாகும். சென்ற ஆறு வருட காலச் சாதனைகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு பொது முதலீட்டு அபிவிருத்தியின் பாற்பட்டதாகும். தனியார் முதலீட்டில் ஓரளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போதிலும் அதன் பொதுவான திறன் ஏமாற்றம் அளிப்பதாகவே உள்ளது. குறைந்த முயற்சியுடன் கூடிய கதியில் இலாபம் அளிக்கின்ற வர்த்தக நட வடிக்கைகள் போன்ற இலகுவான தெரிவுகளைச் செய்வதே தனியாளர் துறையின் பிரதான போக்காக உள்ளது. வர்த்தக சமுதாயத்தின் நோக்கில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படாவிடில் எம்மால் சுய தங்கியிருப்புப் பொருளாதார வளர்ச்சியையும் உறுதியையும் உறுதிப்படுத்த இயலாது. பொருளாதாரத்தின் உற்பத்தித்துறையில் இயக்கதன்மை இருப்பின் மாத்திரமே தாராண்மைப் பொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றலாம். எமது சென்மதி நிலுவையைச் சரிக்கட்டுவதற்குக் கடன் பெற இயலாத நிலையை கடன் சேவை விகிதாசாரம் அடைந்துள்ளது. நாம் முன்னுரிமைத் துறைகளான ஏற்றுமதி, சிறந்த இறக்குமதிப் பதிலீடு என்பவற்றை அபிவிருத்தி செய்யாவிடில், சென்மதி நிலுவையில் ஏற்படுகின்ற சுருக்கம் என்மை மீண்டும் கட்டுப்பாடுகள், தேக்க நிலைக்கான ஊக்கம் போன்ற பழைய கொள்கைகளைப் பின்பற்றுவதற்குப் பலவந்தப்படுத்தும். இச் சூழ்நிலையில் இத் துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு தனியார் துறை பிரதான பங்கினைப் பெறுதல் வேண்டும்.

தேக்கமடைந்த ஒரு பொருளாதாரத்திற்குப் புத்துணர்ச்சி அளிப்பதற்கு ஆரம்பத்தில் விரிவான நிதிச் சலுகைகளையும் ஊக்குவிப்புக்களையும் அளித்தல் அவசியமாகும். நாம் அளிக்கின்ற வரிச் சலுகைகளிலும் ஏனைய ஊக்குவிப்புக்களிலும் வேறுபாடு காட்டுவதற்குரிய நேரம் வந்துள்ளது. மூல வளங்கள் பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளை அடைவதனை உறுதிப்படுத்தும் வகையில் எதிர் காலத்தில் இத்தகைய பயன்களை ஏற்றுமதித் துறைக்கும் சிறந்த இறக்குமதிப் பதிலீட்டுத் துறைக்கும் மாத்திரம் அளிப்பதற்கு நான் உத்தேசித்துள்ளேன்.

ஒப்பீட்டு ரீதியில் இலங்கை ஒரு வறிய நாடாகவிருந்த போதிலும் எம்மிடம் பயன்படுத்தப்படாத மூலவளங்கள் நிறைய உண்டு. எனது உரையின்போது நான் இத்தகைய சில துறைகளை உங்களுக்கு அடையாளம் காட்டுவேன். அபிவிருத்திக்குரிய பாரிய இயல் திறன்களைக் கொண்டுள்ள துறைகளில் முதலீட்டினை அதிகரிப்பதற்குரிய சூழலை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும். அளிக்கப்பட்ட இவ் வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதன் மூலம் தனியார் துறையினர் இந் நடவடிக்கைகளை ஆதரிக்க வேண்டும்.

அரசியல், பொருளாதார உறுதியின் பின்னணியில் மாத்திரமே தொடர்ச்சியான வளர்ச்சி இடம்பெறும் என்பது உண்மையாகும். எதிர்காலத்தில் அரசியல் உறுதியை ஏற்படுத்துவதற்குரிய எல்லா முயற்சிகளையும் எமது அரசாங்கம் எடுத்துவருகின்றது. எல்லாப் புறத்திலிருந்தும் தேவையான நல்லெண்ணம் கிடைக்குமானல் இனப் பிரச்சினைக்கு உறுதியான தீர்வு காண்பது சாத்தியமாகும்.

### நிதி நிலைமையை உறுதிப்படுத்தல்

நாடு அடைந்துள்ள குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றம் இலகுவானதாக இருக்கவில்லை என்பதனை நீங்கள் அறிவீர்கள். எமக்கு மிகத்தீவிரமான பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டது. கடந்த இருபது வருடங்களாக இலங்கை பழக்கப்பட்டிருந்த குறைந்த முதலீடு/குறைந்த வளர்ச்சி / உயர் வேலையின்மை நிலைமையிலிருந்து அதனை விடுவிக்க மேற்கொண்ட முயற்சிகள், குறிப்பாக மிகவும் பாதகமான வெளிவாரிச் சூழ்நிலைகளின் மத்தியில் எமது வரவுசெலவுத்திட்டம், சென்மதி நிலுவை என்பவற்றின் மீது அமுக்கத்தை ஏற்படுத்தின. எனினும் உள்நாட்டு, வெளிநாட்டு நிதி நிலைமையை உறுதிப்படுத்துவதற்கு நாம் பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இவ்வருடத்திற்குரிய வரவுசெலவுத்திட்டம் வீக்கம் இன்மையைக் கருத்தில் கொண்டிருக்கும். வீக்க அமுக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி நிதிக் கொள்கைகளை இறுக்கமாக்கியுள்ளது. இவ்வருட வரவுசெலவுத் திட்டம் சிறப்பாக சமநிலைப்படுத்தப்படும். எமது நிதி, நாணய மாற்றுக் கொள்கைகளின் விளைவாக 1984 இன் இறுதியில் சென்மதி நிலுவையில் குறிப்பிடத்தக்க மிகை ஏற்படுவதுடன் வீக்கமும் கட்டுப்படுத்தக் கூடியதாகவிருக்கும். உதவி வழங்குகின்ற நாடுகள், அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் மீது நம்பிக்கை தெரிவித்தல் ஊக்கமளிப்பதாகும்; அண்மையில் பாரிசில் நடைபெற்ற உதவிக் குழு மகாநாட்டில் சென்ற வருடத்தை விடவும் இவ்வருடம் மெய் ரீதியில் உதவி 18 சதவீதத்தினல் அதிகரிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார அடிப்படைகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஒழுங்காக உள்ளன. எனினும் முழுமையாகப் பெருமைப்படுவதற்கு எதுவும் இல்லை என நான் எச்சரிக்கின்றேன். இலங்கையின் தற்போதைய பேரினப் பொருளியலில் குறிகாட்டிகளின் அபிவிருத்திக்குரிய பிரதான காரணி நாம் அனுபவித்த சிறந்த தேயிலை விலைகளே என்பதில் சந்தேகமில்லை. ஆனல் பல கட்டமைப்புப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. பண்டவிலைச் சக்கரத்தின் விஷமத்தனத்தின் விளைவாக சென்ற காலங்களில் நாம் சில பாடங்களைக் கற்றேரும். ஆகையால் பொருளாதாரத்தில் இடைக் காலத்தில், தேவையான கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இயலக்கூடிய விதத்தில் எமது அதிகரித்த ஏற்றுமதி விலைகளின் மூலம் ஒதுக்குகளைக் கட்டியெழுப்பக்கூடிய கொள்கைகளைப் பின்பற்றுதல் மிகப் பிரதானமானதாகும். தற்காலிகமாகப் பெற்றுள்ள இவ்வாய்ப்பினை நாம் வீணக்கினல் பண்டச் செழிப்பு முடிவுற்றதன் பின்னர் நாம் மிக மோசமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும். எனவே நாம் இறுக்கமான நிதி ஒழுக்காறினைப் பின்பற்றுவதுடன்., தெளிவாக உருவாக்கப்பட்ட முன்னுரிமைகள் முறையின் அடிப்படையில் மூலவள ஒதுக்கீடு அமைவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

### அடிப்படை இலக்குகள்

நாட்டு மக்களின் சமூக பொருளாதார நிலைமைகளை மேலும் அபிவிருத்திசெய்வதற்குரிய திட்டத்தை உறுதியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. துரித பொருளாதார வளர்ச்சி, தொழில் உருவாக்கம், விலை உறுதிப்பாடு, மேலதிக வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு மாற்றம் என்பனவே அடிப்படை இலக்குகளாகும். எமது இடைக்கால நிகழ்ச்சித் திட்டம் பற்றி "போது முதலீடு 1984 - 88" எனும் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

அடுத்துவருகின்ற ஐந்து வருடங்களுக்குள் ரூபா 202 மில்லியனுக்கும் கூடுதலான தொகையை முதலீடு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுத்துறை முதலீடு ரூபா 106 மில்லியனாக இருப்பதுடன் தனியார் துறை முதலீடு ரூபா 96 மில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக்காலப் பகுதியில் 5.6 சதவீத வளர்ச்சி விகிதாசாரம் எதிர்பார்க்கப்படுகின்றது; இது இலங்கையால் அடையக்கூடிய ஒரு வளர்ச்சி விகிதாசாரம் என நான் எண்ணுகின்றேன். உதாரணமாக: இந்தியாவின் அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் 5 சதவீத வளர்ச்சி விகிதாசாரத்தைத் திட்டமிட்டுள்ளது. வரவுசெலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கில் உள்ள பற்றுக்குறையை நாம் மேலும் குறைககவுள்ளோம்: செனமதி நிலுவையைப் பெருமளவிறகுப பொறுக்கக் கூடியதாக அமைக்கவுள்ளோம். எமது பிரதான வர்த்தகப் பங்காளர்களின் வீக்க விகிதாசாரத்துடன் ஒப்பிடக்கூடிய அளவிற்கு எமது வீக்க விகிதாசாரத்தை தனி இலக்கமாகக் குறைக்கவுள்ளோம். இவ்விலக்குகளை அமுலபடுத்தக்கூடிய நிறுவன ரீதியான கட்டமைப்புக்களை உறுதிப்படுத்துவது தொடர்பாகப் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. முழுமையான செய்திட்ட வட்டத்தையும் உறுதிப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அண்மையில் அரசாங்கம் மிக முக்கியமான ஒரு தீர்மானததை எடுத்துள்ளது; இத்தீர்மானம் தனியார் துறையில உள்ள உங்களுக்கு மிக முக்கியமானதாகும். தனியார் துறையினரால் ஒரு செய்திட்டத்தைச் சிறப்பாக அமுலாக்க முடியுமானால், அத்திட்டத்தை அரசாங்கம் பொறுப்பேற்காது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தனியார் முயற்சிக்கு ஆதாரமாக விளங்கக்கூடிய அடிப்படை வசதிகளை அளிக்கின்ற ஒரு ஊடகமாகவே பொது முதலீடு நோக்கப்படவுள்ளது. பெரும்பாலான பெருந்தோட்டங்கள் அரசாங்க உடைமையாகவுள்ள பெருந்தோட்டத் துறையில் மாத்திரமே அரசாங்கம் நேரடி உற்பத்தி நடவடிக்கைகளில் முதலீடு செய்யும்.

பொது முதலீட்டு முன்னுரிமைகள்

எமது இடைக்கால நிகழ்ச்சித் திட்டத்தில் நாட்டின் மூலதனச் சொத்துக்களின் பரிபாலனம், புனரமைப்பு என்பன தொடர்பாக கூடுதலாக வலியுறுத்தப்படும். சென்ற சில வருடங்களாக எமது பெரும்பாலான மூலவளங்கள் மகாவலி போன்ற பாரிய புதிய செய்திட்டங்கள் பால் திசைதிருப்பப்பட்டன. இதன் விளைவாக பாவனையில் இருந்த மூலவளங்கள் புறக்கணிக்கப்பட்டன; இன்று இவை அவசரக் கவனத்தை வேண்டி நிற்கின்றன.

ஆகையால் அரசாங்கம், இத்தகைய செய்திட்டங்கள் தேவைப்படுகின்ற துறைகளில் மாத்திரமே புதிய பொதுவசதிச் செய்திட்டங்களை மேற்கொள்ளும். உதாரணமாக வலுத் துறையைக் குறிப்பிடலாம். பாதைகள், கட்டடங்கள், நீர்ப்பாசனம் போன்ற நடைமுறையிலுள்ள மூலதனச் சொததுக்களைப் புனரமைத்து, அபிவிருத்தி செயவது தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தப்படும். ஒரு பாரிய புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறிப்பாகப் பாதைகள் கூடிய நனமையைப் பெறவுள்ளன.

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இன்னொரு பிரதான பண்பு, பெருந்தோட்டக் கைத்தொழில்களில் இடம்பெறவுள்ள அதிகரித்த முதலீடாகும். இலங்கையின் அபிவிருத்திச் செய்முறையில் காணப்படுகின்ற வருந்தத்தக்க அம்சம் யாதெனில், எமது பெருந்தோட்டத் துறை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தமையாகும். இதனைச் சரிக்கட்டுவதற்கு அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது. பெருந்தோட்டத் துறைக்கு ஒரு விரிவான முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது; பெருந்தோட்டங்களைப் புனரமைப்பதற்கும் தோட்டத் தொழிற்சாலைகளை நவீனமாக்குவதற்கும் முதலீட்டுத் திட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவு மூலவளங்கள் ஒதுக்கப்படவுள்ளன. இதே போன்ற ஒரு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை நாம் தனியார் துறைக்கும் தயாரிக்கவுள்ளோம்.

தனியார் துறையினரின் உற்பத்தி இயல்திறன்.

பொது முதலீட்டுக்கான முன்னுரிமைகளை நான் சுருக்கமாகக் குறிப்பிட்டேன். பொருளாதாரத்தின் ஏனைய துறைகளில், தனியார் துறை முன்னணிப் பங்கினை வகிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்றுமதி, சிறந்த இறக்குமதிப் பதிலீடு என்பவற்றின் துரித விரிவாக்கத்திற்கு சிறந்த வாய்ப்பு உண்டு. எனினும் இறக்குமதிப் பதிலீட்டுக்கு அடையாளம் காணப்பட்டுள்ள துறைகள் போட்டி மிக்கனவாகும். நாம் எமது உள்ளூர்க் கைத்தொழில்களைப் பாதுகாகக வேண்டும் என அடிக்கடி வாதிடப்படுகின்றது. இத்தகைய பாதுகாபபு தொடர்பான இலங்கையின் சென்ற கால அனுபவம் சிறபபானதாக இல்லை இதன் கீழ் அதிகரித்த விலைகளில் தரம் குறைந்த பொருட்களை நுகர்வோர் கொளவனவு செய்ய வேண்டியிருந்தது; பாதுகாப்புத் தடைகளின் பின்னால் இருந்த ஒரு சில திறமையற்ற முயற்சியாளர்கள் இதன் மூலம் கூடிய இலாபம் அடைந்தனர்.



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No........
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடைந்த நாடுகளை விடவும் வளர்முக நாடுகளின் நுகர்வோர் இதன் மூலம் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர். வளர்ச்சியடைந்த நாடுகளில் சிறந்த நுகர்வோர் பாதுகாப்பு நிறுவனங்களும் இறுக்கமான தரக் கட்டுப்பாட்டு முறைகளும் அமுலில் இருப்பதே இதற்குக் காரணமாகும். மேலும் பாதுகாப்புத் தடைகள் திறனற்ற துறைகளைக் கவர்ச்சிகரமானதாக்குவதுடன் பிழையான மூலவள ஒதுக்கீட்டிற்கும் வழிவகுக்கின்றது. இதன் விளைவாக கூடுதலான மெய் இலாபத்தினை அடையக் கூடிய துறைகள் நிதிப் பற்றுக்குறையால் பாதிக்கப்படுகின்றன. இது பொருளாதாரத்தில் திறமையின்மையைத் தோற்றுவிக்கின்றது; இதன் விளைவாக வெளியீடு, வருமானம், வேலைவாய்ப்பு என்பன இழக்கப்படுகின்றன. எனவே நாட்டின் நலன் கருதி போட்டித் தன்மை மிக்க இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களை மாத்திரம் அபிவிருத்திசெய்வதன் மூலம் மூலவள ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு செய்கையில், ஸ்தாபகமான தன் பின்னர் போட்டித்தன்மை மிக்கதாக மாறக்கூடிய சில கைத்தொழில்களையும் பாதுகாக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். இத்தகைய பாதுகாப்பு படிமுறையானதாக இருத்தல் வேண்டும்; இவ்வாறு இருப்பின் இக்கைத்தொழில்கள் உறுதியடைந்ததன் பின்னர், போட்டியினால் ஏற்படுத்தப்பட்ட ஒழுக்காறு தொடர்ந்து அமுலில் இருக்கும். இது தொடர்பான இன்னொரு தந்திரோபாயம் யாதெனில், பொருட்களைக் குவிப்பதற்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.

விவசாயம், விலங்கு வேளாண்மை. மீன்பிடி, மூலவள அடிப்படையிலமைந்த கைத்தொழில் மயமாக்கம் ஆகிய துறைகளில் பெருமளவு வாய்ப்பு உண்டு. நாட்டில் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பிரதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; இதன்மூலம் சீனி இறக்குமதியில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த ஐந்து வருடங்களுக்குள் பால் உறபத்தியை அதிகரிப்பதற்கும் பாரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அபிவிருத்திக்குரிய இன்னொரு துறை சிறு ஏற்றுமதிப் பயிர்களாகும். கோப்பி, மிளகு, ஏலம், கராம்பு, மரமுந்திரி, அயனவலயப் பழங்கள் (பழ இரசமாகவும் பாகாகவும் பதனிடக்கூடியவை) என்பவற்றை சிறந்த ஏற்றுமதி வாய்ப்புள்ள பயிர்களாக எனது அமைச்சு விதந்துரைந்துள்ளது. சென்ற காலங்களில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் மீன்பிடித் துறை புறக்கணிக்கப்பட்டமை துரதிர்ஷ்டவசமானதாகும். அரசாங்கத்தின் மொத்த மூலதனச் செலவில் 1 சதவீதத்திற்கும் குறைந்த அளவே மீன்பிடித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எமது முன்னுரிமைகள் மறுசீரமைக்கப்பட்டு, துரித மீன்பிடி அபிவிருத்திக்கு தீர்க்கமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எமது ஆழ்-கடல் மீன்பிடி அபிவிருத்திக்கு மாத்திரமன்றி, உள்ளூர் மீன்பிடி அபிவிருத்திக்கும் சிறந்த வாய்ப்பு உண்டு. குறிப்பாக களப்புகள், உவர் நீரிடங்கள், சகதி நிலங்கள் என்பன இறால், கூனி, நண்டு போன்றவற்றை ஏற்றுமதிக்காகப் பண்ணை அடிப்படையில் முறையாக உற்பத்தி செய்யலாம்.

விவசாயம், மீன்பிடி என்பவற்றின் அபிவிருத்திக்கு மேலாக கைத்தொழில் பதனிடலின் விஸ்த்தரிப்பிற்கும் வாய்ப்பு உண்டு. எமது மரபு ரீதியான, மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் மீது கூடுதலான பெறுமதி சேர்க்கப்படல் வேண்டும். தேயிலையைப் பெட்டியிலடைத்தல், இறப்பர் பதனிடல் என்பவற்றில் அடைந்த அபிவிருத்தியை உறுதிப்படுத்திக் கட்டியெழுப்புதல் வேண்டும். உள்ளூர் உள்ளீடுகளைக் கூடுதலாக உற்பத்திசெய்வதன் மூலம் தயாரித்த ஆடை உற்பத்தித் துறையில் புற இணைப்புக்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும். கைத்தொழில் பதனிடலுக்குரிய ஏனைய மார்க்கங்களையும் முயற்சியுடன் மேற்கொள்ள வேண்டும்.

பல வருடங்களாகப் பின்பற்றப்பட்ட கொள்கைகளினதும் சித்தாந்தங்களினதும் பின்னர், கடந்த ஏழு வருடங்களாக நாம் காரிய சாத்தியமான கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றோம். ஆகையால் நாம் திறமையான இறக்குமதிப் பதிலீட்டுக்கும் ஏற்றுமதிகளுக்கும் இடையில் சமவலு மிக்க கருத்தினைக் கொண்டுள்ளோம். ஒரு சிறிய உள்ளூர்ச் சந்தையையும் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மூலவளங்களையும் கொண்டுள்ள இலங்கை போன்ற ஒரு பொருளாதாரத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரப் பன்முகமாக்கல் அவசியம் என்பதனை நீண்ட கால நோக்குடன் ஒருவர் நோக்கின் தெளிவாகும். எமது ஏற்றுமதித்துறை இயக்கத் தன்மை மிக்கதாக மாற வேண்டும். ஏற்றுமதித் துறையின் வளர்ச்சி விகிதாசாரத்தை இருமடங்காக அதிகரிக்கத்தக்க ஒரு ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் வரையப்பட்டுள்ளது. ஏற்றுமதித் திறன் மிக்க பல்வேறு துறைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்றுமதித் துறையில் முதலீடு செய்வதற்கு நிதி, நாணய ஊக்குவிப்புகளும் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை அமுலாக்குவதில் வர்த்தகப் பேரவை பிரதான பங்கினை வகித்தல் வேண்டும்.

## நிதி மூலவளங்களும் முதலீடும்

முன்னுரிமைத் துறைகளின் அபிவிருத்திக்கு வாய்ப்பான சூழலை அளிக்க அரசாங்கம் எதிர்பார்க்கின்றது; இதற்குத் தேவையான முறைமை முழுமையானதல்ல; நாம் இதனைத் தொடர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாக விருத்திசெய்ய விரும்புகின்றோம்; இது தொடர்பாக உங்களது பேரவையிலிருந்து வருகின்ற ஆக்கபூர்வமான கருத்துக்களை நாம் எப்பொழுதும் ஏற்றுக்கொள்வோம். புதிய முதலீடுகளுக்கான ஒரு பிரதான தடை உயர் வட்டி வீதமாகும். அரசாங்கத்தின் நாணய நடவடிக்கைகளின் ஊடாக இம்முறைமைக்குள் அறிமுகப்படுத்தப்பட்ட உறுதியற்ற நிலைமையை நான் சென்ற காலங்களில் பல தடவைகள் எதிர்த்துள்ளேன். உள்ளூர் மூல வளங்களின் பெரும் பகுதியை வரவு செலவுத் திட்டம் கவர்ந்து கொள்கின்றது. வரவுசெலவுத்திட்ட நிதிப்படுத்தலில் ஒரு பிரதான மூலமாகவுள்ள தேசிய சேமிப்பு வங்கி பொருளாதாரத்தில் வட்டி வீத மட்டத்தைத் தீர்மானிக்கக் கூடிய நிலையில் இருப்பதனால் வட்டி வீதம் உயர் மட்டத்தில் இருக்கின்றது. வரவு செலவுத் திட்டம் பற்றுக்குறை கட்டுப்படுத்தப்பட்டதன் பின்னர் கூடுதலான மூலவளங்கள் குறைந்த விலையில் தனியார் துறைக்குக் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன். வரவு செலவுத் திட்ட நட வடிக்கைகளில் இறுக்கமான நிதி ஒழுக்காறு கடைப்பிடிக்கப்படும் என்பதே இதன் தாத்பரியமாகும்.

முன்னுரிமைத் துறைகளின் முதலீட்டு மட்டத்தை நிதியங்களின் செலவுகள் மாத்திரம் பாதிப்பதில்லை; இத்தகைய முதலீடுகளுக்குரிய நிதி மூலவளங்களின் கிடைக்கக் கூடிய தன்மையும் இதனைப் பாதிக்கின்றன. இலங்கை போன்ற ஒரு வளர்முக நாட்டின் தேவைகள் தொடர்பாக வங்கிச் சமூகம் அக்கறை செலுத்தாமை வருந்தத்தக்கதாகும். முற்றிலும் வேறு பட்ட சமூக, பொருளாதாரச் சூழலில் உருவான மரபு ரீதியான வங்கிப் பழக்கங்கள், உலக வரலாற்றின் முற்றிலும் வேறுபட்ட ஒரு கட்டத்தில் தொடர்ந்தும் வங்கியியல் தொடர்பான சிந்தனையைப் பாதித்துவருகின்றது. ஆகையால், நிதி அதிகாரிகளின் கைகளைப் பலப்படுத்தும் வகையில் நான் அண்மையில் ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தினேன். புதிய வங்கிச் சட்டம் பொருளாதாரத்தில் உற்பத்தித் துறைகளின் பால் கூடுதலான கடன் பாய்ச்சலை ஏற்படுத்த வழிவகுக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன். கிராமிய அபிவிருத்தி வங்கிகள், "வெறுங் - கால்" வங்கிகளை அமைப்பதற்கான நடவடிக்கை என்பன நாட்டின் அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் இணைந்து செல்லக்கூடிய ஒரு வங்கி முறையைத் தோற்றுவிப்பதற்கு மேற் கொள்ளப்படுகின்ற முயற்சியாகும். அரசாங்கக் கொள்கைகளின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு வங்கிச் சமூகம் எதிர்காலத்தில் முன்னேற்றம் சார்ந்த கொள்கைகளைப் பின்பற்றும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

### தனியார் முயற்சி அபிவிருத்தி

நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் துறையின் அபிவிருத்தியை உறுதிப் படுத்துவதற்கும் நான் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். என்னால் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை வர்த்தகத் தலைவர்களையும் அதிகாரிகளையும் உள்ளடக்கியதும் எனது அமைச்சினால் அமுல்படுத்தப்படுவதுமான தனியார் முயற்சி ஊக்குவிப்புச் செய்திட்டம், தனியார் துறையின் அபிவிருத்திச் செய்முறையைத் துரிதப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டதாகும். இச் செய் திட்டத்திற்கு 4 மில்லியன் அமெரிக்க டொலர் அமெரிக்க உதவித் திட்டத்திடமிருந்து (USAID) என்னால் உதவியாகப் பெற முடிந்தது. இச் செய்திட்ட அமுலாக்கத்தின் ஒரு பிரதான அம்சம் இலங்கை வணிக அபிவிருத்தி நிலையமாகும்; இது தனியாரால் பட்டயப்படுத்தப்பட்டு, முகாமிக்கப்படுகின்ற ஒரு புதிய தாபனமாகும். இது நடைமுறையிலுள்ள வர்த்தக தாபனங்கள், அரசாங்க முகவர்கள், இலங்கையில் வணிக முயற்சிகளின் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள ஏனைய நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்து இயங்கும். இலங்கையில் தனியார் துறையை ஊக்குவிப்பதற்கு இந்நிறுவனம், தனியார், பொதுத்துறைகளில் உள்ள மூலவளங்களை அசைவுறச் செய்யும். இந்நிறுவனம், இந்நாட்டின் தனியார் துறை அபிவிருத்தியின் முன்னோடியாக மாத்திரம் செயற்படாது, தனியார் துறைக்கும் பொதுத் துறைக்கும் இடையே நிலவுகின்ற சந்தேகம், குரோதம் என்பவற்றை உடைவுறச் செய்வதற்கும் உதவும் என நான் நம்புகின்றேன். இச்சிறு வேறுபாடுகளை உடைத்தல் வேண்டும். இந்நாட்டைச் சுய வளர்ச்சி, அபிவிருத்திப் பாதையில் இடுவதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். இவ்வேளையில் எம்முன்னுள்ள பணியை நாம் அளவில் குறைத்து மதிப்பிட இயலாது. இலங்கை போன்ற சிறிய நாடுகள், கடுமையான சர்வதேச முறைமைக்குள் உயிர்வளரப் படித்தல் வேண்டும். இங்கு வேறு இலகுவான தெரிவுகள் இல்லை; ஆகையால் நாம் பொது இலக்குகளை அடைவதற்குக் கட்டாக உழைக்க வேண்டும்.

தீவு பூராகவும் உள்ள முயற்சியாளர் அபிவிருத்தியை அடையாளம் கண்டு, ஊக்கமளித்து, ஆதரவு அளிப்பதே இலங்கை வணிக அபிவிருத்தி நிலையத்தின் பிரதான இலக்காகும். சிறு நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் உள்ள முயற்சியாளர்கள், பொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதார அபிவிருத்தியில் கூடிய பங்கினை வகிப்பதற்கு வாய்ப்புகள் அளிக்கப்படும்.

தனியார் துறைக்கு உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டால் சிறந்த விளைவுகளைப் பெறலாம் என்பதற்கு நெல் உற்பத்தித் துறை சிறந்த உதாரணமாகும்.

முதலீட்டாளர்களுக்கு வர்த்தக வாய்ப்புக்கள், சந்தை நிலைமை என்பன பற்றிய சேவைகளை அளிப்பதன் மூலம் இந் நிகழ்ச்சித்திட்டம் குறை நிரப்பப்படும். பேரவையின் ஒத்துழைப்பு இன்றி இந் நிலையம் ஒரு ஆக்க பூர்வமான கருவியாகச் செயற்பட இயலாது. நாட்டின் தனியார் துறையின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற இம் முயற்சியை நீங்கள் எல்லோரும் ஆதரிப்பீர்கள் என எண்ணுகின்றேன்.

இலங்கைப் பங்காளர்களுடன் வெளிநாட்டுத் தனியார் முதலீட்டாளர்கள் இணைந்து செயல்படுவதில் இந்நிலையம் வெளிநாட்டு முதலீட்டு, மதியுரைக் குழு பாரிய கொழும்பு அபிவிருத்தி ஆணைக் குழு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பவற்றுடன் நெருக்கமாக இயங்கும். தொழிநுட்ப இடமாற்றம், வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பு என்பவற்றின் ஊடாக இலங்கை தனது அபிவிருத்தித் திறனைப் பூர்த்திசெய்ய உதவுகின்ற வெளிநாட்டு முதலீட்டினை அரசாங்கம் தொடர்ந்து ஊக்குவிக்கும்.

இலங்கையின் அபிவிருத்திச் செய்முறையில் தனியார் துறை உற்சாகமான பங்கினை வகிப்பதற்குரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. நன்மை அடைவோர் பொறுப்புடன் கருமமாற்ற வேண்டிய தேவையை தனியார் துறை சார்ந்த கொள்கைகள் வேண்டி நிற்கின்றன. ஏதாவது துஷ்பிரயோகம் இடம்பெற்ருல் முறைமை பலவீனமடையும். நீங்கள் தற்பொழுது உங்களது உடனடி நலன்களுக்கு அப்பால் நோக்க வேண்டும். நீங்கள் ஒரு தாராள அணுகுமுறையைக் கைக் கொள்ளாவிடில் தனியார் துறை சார்ந்த அபிவிருத்தித் தந்திரோபாயம் முழுவதும் பாதிக்கப்படும். தனியார் துறை சார்ந்த கொள்கைகளின் வெற்றியில் உங்களுக்குக் கூடிய பங்கு அளிக்கப்பட்டிருப்பதனுல் இம்முறைமையின் மேற்பார்வையை முழுமையாக அரசாங்கத்தின் பொறுப்பில் நீங்கள் விடவேண்டும் என நான் கருதவில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கப் பகுதி, ஏனைய அரசாங்க முகவர்கள் என்பவற்றின் நடவடிக்கைகளைச் சீராக்க நாம் நடவடிக்கை எடுத்துவருகின்ருேம். தனியார் துறையின் சுய ஒழுங்குவிதி அபிவிருத்தி முறைமைகளின் மூலம் இவை குறை நிரப்பப்படல் வேண்டும். இத்தகைய சுய ஒழுங்குவிதி முறையை வேறு நாடுகளில் காணலாம். உங்களது பேரவை இக்கருத்து தொடர்பாகத் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும். உண்மையில் இத்தகைய சுய ஒழுங்குவிதி முறை தனிப்பட்ட குரோதங்களுக்கு அப்பாற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

தனியார் துறையினதும் நாட்டினதும் நன்மை கருதி இவை அமுலாக்கப்பட வேண்டும். தனியார் துறை வளர்ச்சியடைந்து செழிக்கவேண்டுமாஞல் முதலீடு, உற்பத்தி, சிறந்த வணிகத் தத்துவங்கள் என்பன அவசியமாகும். நாடு பூராகவும் உள்ள சிறிய முதலீட்டார்களிடையே தன்னம்பிக்கை கட்டியெழுப்பப்படல் வேண்டும். நாட்டில் பணம் இருக்கின்றது. அமைப்பில் நம்பிக்கையின்மை காரணமாக இது வெளிவருவதில்லை. பினைகள் பேரவையுடன் கூடிய ஒரு சிறந்த இருப்புச் சந்தை இது தொடர்பாக உதவும். ஆஞல் குதிரைக்கு முன்னர் வண்டியைக் கட்டி விடாதீர்கள். அவ்வாறு செய்யின் இது பயனற்ற ஒரு முயற்சியாகலாம்.

நாம் தன்னம்பிக்கையுடனும் நேர்கணியமாகவும் எதிர்காலத்தை நோக்கவேண்டும். நாம் எல்லா வகையான எதிர்கணிய சிந்தனையையும் ஒழித்தல் வேண்டும். நான் இங்கு குறிப்பிட்ட சமூக, பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் இலங்கையில் உள்ள எல்லா மக்களதும் ஒத்துழைப்பினை வேண்டிநிற்கின்றது. எந்த ஒரு நிதி அமைச்சரும் அறிவீனமான இடர்களை ஏற்கக் கூடாது. எனினும் இலங்கையின் முயற்சியாளர்கள் மிகவும் இயக்கத்தன்மை மிக்கவர்களாக இருத்தல் முக்கியமாகும். உங்களது நோக்கங்கள் விரிவாக்கப்படல் வேண்டும். முன்ஞேடி உணர்வுக்கான ஒரு தேவை ஏற்பட்டுள்ளது. புதிய துறைகள் கண்டறியப்படுவதுடன், எல்லைகள் விரிவாக்கப்பட வேண்டும். பேராசிரியர் ஜோன் ருெபின்சனின் வார்த்தையில் கூறிஞல் "மிருக உணர்வுகள்" தூண்டப்படல் வேண்டும். உங்கள் முன்னுள்ள வாய்ப்புக்கள் தொடர்பாக புத்துணர்ச்சி ஏற்பட வேண்டும். தனியார் துறைக்கு ஊக்கமளிப்பதற்குரிய ஒரு சூழலை எந்த ஒரு அரசாங்கமும் முன்னர் அளிக்கவில்லை. வர்த்தக, டிகைத்தொழில் தலைவர்கள் என்ற வகையில் உங்கள் அனைவருக்கும் ஒரு விசேட பொறுப்பு உண்டு. இந்நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய அபிவிருத்தியைக் கொண்டுவரக் கூடிய வாய்ப்புக்களிலிருந்து நீங்கள் உச்ச பயனைப் பெறுவீர்கள் என எண்ணுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகையளிக்கப்பட்ட ஏற்றுமதி வலயங்கள்

## இந்தியாவின் அனுபவம்

**என். என். சச்சிதானந்த்**

**எலக்ரோனிக் பொருட்கள் மட்டுமே உற்பத்தி செய்வதற்கென மட்டுப்படுத்தப்பட்ட, இந்தியாவின், முதலாவது ஏற்றுமதி உற்பத்தி வலயம் 10 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு ஏற்றுமதியை ஊக்குவிப்பதிலோ அல்லது அந்நிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் அளவிலோ அதன் நடவடிக்கைகள் அமையவில்லை. திரு. என். என். சச்சிதானந்த் சென்னை "ஹிந்து" வில் எழுதிய கட்டுரையில் அதன் கடந்த பத்து வருடகால செயற்பாட்டை மதிப்பீடு செய்துள்ளார். பம்பாய், சாந்தாகுருஸ் எலக்ரோனிக் ஏற்றுமதி உற்பத்தி வலயத்தின் அனுபவங்கள் இந்தியாவில் உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள புதிய ஏற்றுமதி உற்பத்தி வலயங்களில் சிறந்த பலன்களைப் பெறுவதற்கு பல முக்கியமான விடயங்களை அளிக்க முடியுமென அவர் கூறுகிறார். இந்தியாவின் ஆறாண்டுத் திட்ட காலத்தின் போது இத்தகைய நான்கு வலயங்கள் உருவாக்கப்படவுள்ளன. கல்கத்தாவுக்கு அண்மையிலுள்ள போல்டா, சென்னைக்கண்மையில் உள்ள மீனம்பாக்கம், டில்லிக்கண்மையிலுள்ள நொய்டா, கொச்சின் ஆகிய இடங்களிலேயே இந்த வலயங்கள் உருவாக்கப்படவுள்ளன. இந்தக் கொள்கையைக் கைவிடக்கூடிய தன்மைகள் எதுவும் தெரியவில்லை என்ற காரணத்தால் ஆகக்குறைந்தது அரசாங்கமாவது இந்த சாந்தாக்குருஸ் எலக்ரோனிக் உற்பத்தி நிலையத்தின் அனுபவத்திலிருந்து படிப்பினைகளைப் பெற முடியும்; அத்துடன் புதிய வலயங்களில் செயல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அவர் கூறுகிறார்.**

சாந்தாகுருஸ் எலக்ரோனிக் உற்பத்தி நிலையம் (சீப்ஸ்) 1974ம் ஆண்டு பம்பாயில் நிறுவப்பட்டபோது அதனூடாக கீழ்கண்ட இலக்குகளை அடைவதற்கான எதிர்பார்ப்புகளை யூனியன் அரசாங்கம் கொண்டிருந்தது.

1. நாட்டிலிருந்து எலக்ரோனிக் பொருட்களின் ஏற்றுமதியை துரிதமாக விஸ்தரிக்கப்படுவதை ஊக்குவித்தல்.

2. நவீன உற்பத்தி மாதிரி நவீன உற்பத்தித் தொழில் நுட்பம் (இந்த வலயத்தில் முதலீடு செய்துள்ள சிறந்த அந்நியக் கம்பெனிகளால் கொண்டு வரப்பட்டவை) ஆகியவற்றை இந்திய தொழில் வல்லாா்க்குப் புலப்படுத்தல்; இவ்வாறு புதிய நுட்பங்களை அறிவதன் மூலம் இறுதியில் நாட்டின் மற்றைய பாகங்களிலும் தொழில் நுட்பவளர்ச்சி ஏற்படும். வலயத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களை வெவ்வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்வதன் மூலம் இதனை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

3. நாடெங்குமுள்ள எலக்ரோனிக் தொடர்பான தொழில் துறைகளில், குறிப்பாக வலயத்திலுள்ள தொழில் பிரிவுகளுக்கு உதவக்கூடிய வற்றின் தொழில் நுட்பமட்டத்தை உயர்த்துதல்.

4. கணிசமான அந்நியச் செலாவணியைச் சம்பாதித்தல்.

### ஊக்குவிப்புகள்

இந்த இலக்குகளை அடைவதற்காகவும், அந்நிய முதலீட்டாளர்களை இந்த வலயத்திற்குக் கவர்ந்திழுப்பதற்காகவும் அரசாங்கம் பல ஊக்குவிப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது. இந்த ஊக்குவிப்புகளும், வசதிகளும் இந்தியாவில் இருக்கக்கூடிய எந்தவொரு தொழில் நிறுவனமும் முகம் கொடுக்கும் தொல்லைகள், தடைகளை நீக்கியது மட்டுமல்ல வலயத்திலுள்ள கம்பனிகள் உலகெங்கு முள்ள மற்றைய உற்பத்தியாளர்களுடன் போட்டியிடக்கூடிய சிறந்த நிலையை உருவாக்கிக் கொடுத்தது. மூலதனப் பொருட்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களுக்கான இறக்குமதி லைசென்ஸ்தளர்த்தப்பட்டன. இறக்குமதியாகும் மூலதனப் பொருட்கள் உதிரிப்பாகங்கள் உபகரணங்கள் மூலப்பொருடகள், பொருட்களை அடைப்பதற்கான உபகரணங்கள் ஆகியவை சுங்கத்தீர்வையின்றி இலவசமாகக்கொண்டு வர அனுமதிக்கப்பட்டன. வலயத்துள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்படும் மத்திய உள்ளூர் உற்பத்திப் பொருட் தீர்வை மற்றும் வரிகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. உள்ளூர் வரிகள் குறைக்கப்பட்டன. இந்த வலயத்தில் முதலீடு செய்யப்பட்ட அந்நிய மூலதனத்தை எந்நேரத்திலும் தங்கள் நாட்டிற்குக்கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்நிய முதலீட்டாளர்கள் தாம் தேடிய இலாபத்தையும், இலாபப் பங்கினையும் வரிகளைச் செலுத்திய பின்னர் இலவசமாகத் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிற்கு அனுப்பவைக்க அனுமதிக்கப்பட்டனர். பயிற்சிக் காலத்தில் முதல் ஆறு மாதத்தின் போதும் ஊதியத்தில் ஒரு மானியம் அளிக்கப்பட்டது. வலயப்பிரிவுகளில் மின் வெட்டுகள் ஏற்படாதவாறு சட்டரீதியான உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. வலயத்தில் உள்ள சகல தொழில் நிறுவனங்களுக்கும் கைத்தொழில் பிணக்குச் சட்ட விதியின் கீழ் பொதுப்பாவனை அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. முதன்மை அடிப்படையில் தொலைபேசி வசதிகள் கொடுக்கப்பட்டிருந்தன. தமது தொழில் துறைகளையோ, அல்லது இவை போன்றவற்றையோ நிர்மாணிப்பதற்கு காணிகளைப் பெறவிரும்பாத தொழில் அதிபர்களுக்குக் குறைந்த வாடகையில் நிர்மாணிக்கப்பட்ட தரமான மாதிரித் தொழிற்சாலைகள் அளிக்கப்பட்டன.

தொழில் நிறுவனத்தை நிறுவதற்கென, சகல அனுமதிகளையும் பெறுவதானது இந்தியாவில் வழமையாக ஒரு பயங்கர அனுபவமாகும். இந்த அனுமதிகளைப் பெறுவதற்குக் கணிசமான அளவு ஓடி, ஆடி அலைந்து திரிவதோடு துயர் தரக் கூடிய தாமதத்தையும் சந்தித்தாகவேண்டும். சாந்தா குருஸ் எலக்ரோனிக் ஏற்றுமதி உற்பத்தி வலயச் சபைக்கு கூடியது 45 நாட்களுக்குள் அனைத்து அநுமதிகளுமே வழங்கப்பட்டன. சுங்கப் பகுதியிலிருந்து பொருட்களை எடுத்துச் செல்வதற்கும், சுங்கப் பகுதியில் பொருட்களைப் பொறுப்புக் கொடுப்பதற்குமான ஊக்கமான வசதிகள் வலயத்துக்குள்ளேயே செய்து கொடுக்கப்பட்டன. உள்ளுக்குள் கொண்டு வரப்படும் பொருட்களையும் வெளியே கொண்டு செல்லப்படும் பொருட்களையும் கூடியளவு உடனுக்குடன் கையாளக் கூடியவிதத்தில் விதிகள் இலகுபடுத்தப்பட்டன.

இவ்வாறு அளிக்கப்பட்ட "சொர்க்க" சூழ் நிலைகளுக்கு மத்தியிலும் கூட (வலயத்துக்கு வெளியே இருக்கக் கூடிய தொழில் அதிபர்களுக்கு அவ்வாறு தோன்றியிருக்கலாம்) எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று விலகியோடும் அந்த அந்நிய முதலீட்டாளர்களை "சீப்ஸ்" கவரத் தவறியது. தென் கொரியா, தைவான், சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள இதே போன்ற வலயங்களை ஒப்பிட்டுப் பார்த்தபின் 1981ம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து "சீப்ஸ்" பிரிவுகளுக்கு அவற்றின் இலாப வரிகளில் ஆரம்ப நடவடிக்கையாக ஐந்து வருடங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. இதனால் சில பெரும் அந்நிய கூட்டுத்தாபனங்கள் கூடியளவு இதுபற்றி விசாரிக்கத் தொடங்கின.

எதிர்பார்ப்புகளுக்கேற்ப "சீப்ஸ்" இயங்கியுள்ளதா? என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. ஏற்றுமதி வளைவு ஓர் ஊக்கமான போக்கைக் காட்டுகிறது. ஆரம்பத்தில் குறைவான வளர்ச்சி விகிதத்தைக் காட்டினாலும் கடந்த இரு வருடங்களில் ஒரு துரிதமான விளைவை இந்த வளைவு காட்டுகிறது. 1976—77க்கும் 1979—80க்குமிடையில் ஏற்றுமதி 300 கோடியிலிருந்து 1100 கோடியாக மெதுவாக உயர்ந்தது. அதன் பின்னர் வளர்ச்சி விகிதம் 70 சதவீதத்திலிருந்து 80 சதவீதம்வரை இருந்தது. 80—81 300 கோடி ரூபா; 82—83 5400 கோடி ரூபா; 83—84 7000 கோடி ரூபா; இதுவே எதிர்பார்க்கப்பட்ட இலக்காகும்.

எனினும், "சீப்ஸ்" தனது ஒன்பது வருடகால செயற்பாட்டின் விளைவாக நாட்டுக்கு 4,000 கோடி ரூபாவையே நிகர அந்நியச் செலாவணிச் சம்பாத்தியமாக அளித்துள்ளது. இது ஊக்கமிழக்கச் செய்யுமோர் அம்சமாகும். இக் காலப் பகுதியில 17,500 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. (1,400 கோடி ரூபா பெறுமதியான மூலதனப் பொருட்கள் உட்பட) முழு இறக்குமதிகளின் பெறுமதி 13,500 கோடி ரூபாவாகும். இப்போது மொத்த ஏற்றுமதிப் பெறுமதி வருடாந்தம் 8,000 கோடி ரூபா எனக் கணக்கிடப்பட்டால், "சீப்ஸ்" அளிக்கும் பங்களிப்பு, அத்தனை சலுகைகள் வசதிகளுக்கு மத்தியிலும் போதியதல்ல. இந்த வலயத்தின் அபிவிருத்தி, செயற்பாடு ஆகியவற்றிற்கு அரசாங்கம் ஏற்கனவே கிட்டத்தட்ட 1,000 கோடி ரூபாவைச் செலவழித்திருந்தது. இந்த 1,000 கோடி ரூபாவுக்கும் இது போதிய வருமானமேயல்ல.

"சீப்ஸ்" உயர்மட்ட இறக்குமதிகளை மேற்கொண்டதால் மற்றொரு தடைக் காரணியும் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. உள்ளூர் விநியோகங்கள் குறைந்தளவிலேயே பயன்படுத்தப்பட்டன. இது ஏனென்னில் "சீப்ஸ்" உயர் தொழில் நுட்பத் தரம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்தியாவில் இருக்க கூடிய குறைந்த ஊதியச் செலவைச் சாதகமாகப் பயன் படுத்தக் கூடிய வகையில் பிரதானமாக உபகரணங்களைப் பொருத்தும் வேலைகளுக்கு அந்நிய முதலீட்டாளர்கள் இந்த வலயத்தைப் பயன் படுத்தினர். கடற்பகுதி சார்ந்த நிலப்பரப்பில் எலக்ரோனிக் தொழிற்துறைகளின் தொழில் நுட்பமட்டத்தை விருத்தி செய்வதென்ற விரும்பத்தகுந்த இலக்கினை ஈடு செய்யாமல் "சீப்ஸ்" அப்பால் நின்று கொண்டது. மாதிரிகள், தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் சாத்தியம் சீப்சில் வேலை செய்யும் இந்தியத் தொழில் வல்லாளர்களுக்குக் கிடைக்கவில்லை. "சீப்ஸ்" பிரிவுகளில் கையாளப்படும்பொருத்துவதற்கான உற்பத்திப் பொருள் சம்பந்தமான தொழில் நுட்பங்கள், இந்தியச் சந்தையின் குறைந்த மட்டக் கேள்விக்கு மத்தியில் கடலையண்டிய நிலப்பரப்பில் வழமையாக மிகவும் பெரிய உற்பத்திமட்டங்களுக்கானதாகும்.

'சீப்ஸ்'ஸில் அமைந்திருக்கும் பிரிவுகளின் செயல் முறைகள் சமத்துவமற்றதாகவே இருந்துள்ளன. அங்கீகரிக்கப்பட்ட 75 பிரிவுகளில் 45 மட்டுமே தற்போது செயல்படுகின்றன. இயங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளில் 50 சதவீதமானவை அவற்றின் மூலத்திட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த ஏற்றுமதி அளவுக்கேற்ப தமது உத்தேச அளவுகளை நிலைநிறுத்தியுள்ளன. ஒவ்வொன்றும் வருடாந்தம் 50 இலட்சம் ரூபாவுக்கு மேல் ஏற்றுமதி செய்யும் 18 பிரிவுகள் உண்டு. ஏழு பிரிவுகள் வருடாந்தம் 25 இலட்சம் ரூபாவுக்கும் 50 இலட்சம் ரூபாவுக்குமிடையில் ஏற்றுமதி செய்கின்றன. ஒன்பது பிரிவுகள் வருடாந்தம் 25 இலட்ச ரூபாவுக்கு குறைவாக ஏற்றுமதி செய்கின்றன. ஏற்றுமதி செய்யாத 11 பிரிவுகளும் உண்டு. இந்தப் பதினொன்றில் நான்கு, வலயத்திலுள்ள மற்றைய தொழில் நிறுவனங்களுக்கு உபகொந்தராத்துச் செய்கின்றன. மிகுதி ஏழும் செயலற்று இருக்கின்றன.

ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட 75 பிரிவுகளில் 12 மூடப்பட்டுவிட்டன. கஸெட், ரேப் ரெகோடர்கள், கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள், எக்ஸ்றே பகுதிகள், வயர் சுற்றப்பட்ட பலகைகள், எண் கடிகாரங்கள் ஆகியவற்றை இவை உற்பத்தி செய்தன. சந்தைப்படுத்தும் நுட்பத்தில் போதிய அறிவின்மை, உற்பத்தி பாவனைப்படுத்தப்படாமை, சர்வதேச விலை மிகக் கீழ் நிலைக்கு வீழ்ச்சியடைந்தமை ஆகியன "சீப்ஸ்" பிரிவுகளின் மிகமோசமான செயற்பாட்டுக்கு முக்கிய காரணிகளென இது சம்பந்தமான ஆய்வொன்று கூறுகிறது.

இந்த ஆய்வின் விளைவாகவும், வலயப் பிரிவுகள் யூனியன் அரசைச் சந்தித்துப் பேசியதன் விளைவாகவும் வலயத்திலுள்ள தொழில் நிறுவனங்கள் தமது உற்பத்தியின் 25 சதவீதத்தைக்கட்டலையண்டிய பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்ய 1983ம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் யூனியன் அரசாங்கம் அனுமதியளித்தது. இத்தகைய ஏற்றுமதிக்கான அனுமதி கோரி விண்ணப்பித்த 12 பிரிவுகளில் பத்துக்கு ஏற்கனவே அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுவிட்டன. இருந்தின், அரைக் கடத்திகள், ஒருங்கிணைந்த சுற்றோட்டங்கள், பிரிண்டர்கள் ஆகியவை இவற்றின் உற்பத்தியில் அடங்கும். சர்வதேசக் கேள்வி வீழ்ச்சியினாலோ அல்லது விலை வீழ்ச்சியினாலோ நெருக்கடியிலிருக்கும் பிரிவுகளுக்கு இந்த உள்ளூர்ச் சந்தைவாய்ப்பு ஒரு உதவியென நம்பப்படுகிறது.

எனினும் "சீப்ஸ்" உற்பத்திப் பொருட்களை, இந்தியப் பாவனையாளன் எந்தளவுக்கு வாங்குவான் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். "சீப்ஸ்" உற்பத்திப் பொருளை எந்த நேரத்திலும் பெறக்கூடியதாக இருப்பதே இங்கு இந்தியப் பாவனையாளனுக்கு இருக்கக்கூடிய ஒரேயொரு சாதகமான அம்சம். மற்றெல்லா விடயங்களையும் பொறுத்தவரை "சீப்ஸ்"லிருந்து ஒரு பொருளைப் பெறுவதானது வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதைப் போன்றதே. "சீப்ஸ்" உற்பத்திப் பொருளைக் கொள்வனவு செய்ய இறக்குமதி லைசென்ஸ் வேண்டும். உள்ளூர் வரி, இறக்குமதி வரி (மேலதிக உள்ளூர் வரி என்ற பேரர்வையில் விதிக்கப்படுகிறது) ஆகியவை வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் ஒரு பொருளுக்கு விதிக்கப்படுவதை போன்றே "சீப்ஸ்" உற்பத்திப் பொருட்களுக்கும் விதிக்கப்படுகிறது.

## சிறந்த செயற்பாட்டுக்கான நடவடிக்கைகள்

"சீப்ஸ்"ஸின் அனுபவங்கள் ஊக்கமளிப்பவையாக இல்லையென்றபோதிலும் இந்தச் சலுகைக்களிக்கப்பட்ட ஏற்றுமதி உற்பத்தி வலயம் பற்றிய கருத்தை யூனியன் அரசாங்கம் வெளிப்படையாகவே மற்றப் பகுதிகளுக்கும் பரப்பியுள்ளது. ஆறாண்டுத் திட்டத்தின்போது இத்தகைய நான்கு வலயங்கள் மேலும் நிறுவப்படவுள்ளன. கல்கத்தாவுக்குச் சமீபமாக போல்டாவிலும், சென்னைக்குச் சமீபமாக மீனம்பாக்கத்திலும், டில்லிக்கு அண்மையிலுள்ள நொய்டாவிலும், கொச்சினிலும் இந்த வலயங்கள் நிறுவப்படவுள்ளன. இந்தக் கொள்கை கைவிடப்படமாட்டாது எனத் தோன்றுவதால் ஆகக் குறைந்தது அரசாங்கமாவது "சீப்ஸ்" அனுபவங்களிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுப் புதிய வலயங்களின் சிறந்த செயற்பாட்டுக்குக் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(1) தொழிலதிபர்களை மிகுந்த அவதானத்துடன் தெரிந்தெடுக்க வேண்டும். குறிப்பாக அவர்களது சர்வதேச பலம், சந்தை ஒழுங்குகள் ஆகியவற்றை அனுசரித்தே தொழிலதிபர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

(2) ஒவ்வொரு தொழில் நிறுவனத்துக்கும் ஒவ்வொரு தொழில்நுட்பத் தளம் வேண்டுமென்பது வற்புறுத்தப்பட வேண்டும். அப்போதுதான் இந்த வலயங்கள் உள்ளூர்த் தொழிற் சக்தியின் மலிவுத் தன்மையைச் சுரண்டும், வெறும் சொர்க்கமாக மாற மாட்டாது. சிங்கப்பூர் இதனைச் செய்ய முடியுமென்றால் அதனை விடக்கூடிய தொழில்நுட்பப் பலங்கொண்ட இந்தியா என் செய்ய முடியாதென்பதற்கு எந்தக் காரணமும் இல்லை.

(3) இந்த வலயங்களில் வேலை செய்யும் வெளிநாட்டவர்களின் சமூக வசதித் தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். வெளிநாட்டவர்க்கான சர்வதேசப் பாடசாலை, சுப்பர் மார்க்கட் ஆகிய வசதிகள் கொண்ட குடியிருப்புப் பகுதியொன்று ஒவ்வொரு வலயத்தைச் சுற்றியும் இருக்கவேண்டும். தேவைக்கேற்ப குடியிருப்புப் பிரிவுகளை வலயப் பிரிவுகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்கலாம்.

(4) ஒவ்வொரு வலயத்திலுள்ள தொழில் நிறுவனத்துக்கும் வலயத்திலுள்ள அதன் காரியாலய வளவுக்குள் டெலெக்ஸ், தொலைபேசி இணைப்புகள் இரு மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால், பிரதம உத்தியோகத்தரின் வாசத்தலத்துக்கு அத்தகைய எந்த முன்னுரிமையும் விஸ்தரிக்கப்படவில்லை.

இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்குமிடையே இருக்கும் நேர வித்தியாசத்தின் காரணத்தால் இங்குள்ள பிரதான நிர்வாகி தனது வெளிநாட்டுத் தலைமையகத்துடன் அடிக்கடி பின்னிரவிலேயே (அங்கு பகலாகஇருக்கும்) தொலைபேசி உரையாடலை நடத்தவேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவே இந்த வசதி அளிக்கப்படாமை பாரதூரமான பின்னடைவாகும். வலயத்திலுள்ள அலுவலகத்தில் ஒரேயொரு தொலைபேசி இணைப்பு மட்டும் இருக்குமேயானால் பிரதம நிர்வாகி வெளிநாட்டுத் தலைமையகத்துடன் இவ்வாறு உரையாட முடியாது.

(5) கடலையண்டிய பகுதியிலுள்ள உள்ளூர் உபதொழில்களின் அபிவிருத்திகளை ஊக்குவிப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வலயத்தொழில் நிறுவனத்தின் செயற்பாடு, இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களை வெறுமனே ஒருங்கிணைக்கும் ஒன்றாக மாறக்கூடாதென்பதற்காக பெறுமதிமிக்க அளவீடொன்று அந்த வகையில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(6) இனியும் பயன்படுத்த முடியாத இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்களை விற்பனை செய்வது 'சீப்ஸ்' பிரிவுகள் எதிர் நோக்கும் ஒரு பிரச்சினையாகும். இன்றுவரை இந்த உபகரணங்களை உள்நாட்டில் அதற்கான அடிப்படையில் குறைந்த மதிப்பீட்டில் அறவிடப்படும் சுங்கத் தீர்வையைச் செலுத்திய பின்னர் விற்பனை செய்ய அனுமதியளிக்கப்படுகிறது. ஆனால், இறக்குமதி செய்யப்பட்டபோது இருந்த விகிதத்திலேயே விற்க அனுமதிக்கப்படுகிறது.

உபகரணத்தின் குறிப்பிட்ட ஒரு கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட குறைந்த மதிப்பீட்டுக்கு, தற்போதைய விகிதத்தில் அதற்கான சுங்கத் தீர்வை ஆகியவற்றை செலுத்திய பின் வலயத்திலிருந்து பழைய அல்லது மேலதிக உபகரணத்தை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறது. சுங்க விலக்கு அறிவுறுத்தலை திருத்தியமைக்குமாறு சுங்க மற்றும் உள்ளூர் வரித்திணைக்களம் கேட்கப்பட்டிருந்தது. மற்றைய வலயங்கள் நிறுவப்படமுன்னர் இந்தக் கொள்கை மாற்றம் செய்யப்பட வேண்டும்.

7. ஆசியாவில் புதிதாக வளர்ச்சியடைந்த நாடுகளிடையே அந்நிய முதலீட்டாளர்களைத் தமது ஏற்றுமதி வலயங்களுக்குக் கவர்ந்திழுப்பதில் மாபெரும் போட்டியுள்ளது. இந்திய அரசாங்கம் பல ஊக்குவிப்புகளை அளித்துள்ள அதேவேளை மற்றைய நாடுகள் அளித்துள்ள ஊக்குவிப்புகள் பற்றி ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியுள்ளது. உதாரணத்திற்கு "சீப்ஸ்" தாமதமாக அளித்த ஐந்து வருட வரி விலக்குக் காலம் இலங்கை, தாய்வான், தென்கொரியா, சிங்கப்பூர் ஆகி நாடுகள் அளித்த சலுகைகளுக்கு ஈடுகொடுக்கும் முகமாகச் செய்யப்பட்டது. நிச்சயமாக முன்னர் கவரப்பட முடியாத சில பெரும் முதலீட்டாளர்களை இந்தச் சலுகை கவர்ந்தது. இதே வகையில் பங்குகளுக்கு விதிக்கப்படும் வரிகள், இலாபப்பணம், உரிமைக்காகக் கொடுக்கப்படும் பங்குப் பணம், அந்நிய உத்தியோகத்தர்களின் தொழில் நுட்பக் கூலி, சம்பளம் ஆகியன பற்றியும் அரசாங்கம் மீண்டும் கவனத்தை செலுத்தவேண்டும். எமது வலயங்களுடன் போட்டியிடும் மற்றைய நாட்டு வலயங்களுக்குச் சமமாகக் கவர்ச்சியை வைத்திருப்பதற்கு வரிகளை நாம் குறைக்கவேண்டும்; அல்லது நீக்கவேண்டும்.

8 போகும் போக்கில் பணம் சம்பாதிப்பதற்காக அளிக்கப்பட்ட வசதிகளையும் சலுகைகளையும் பயன்படுத்துவதில் தற்காலிக அக்கறை மட்டுமேகொண்ட ஒரே இரவில் வந்து திரும்பும் முதலீட்டாளர்களை, வலயத்தை நிரப்பும் ஆசையில் அதிகாரிகள் அனுமதிப்பார்கள். இது வலயத்திலுள்ள தொழில்துறைகள் முடங்குவதற்கும் அதிகளவில் அற்றுப் போவதற்கும் வழிவகுக்கலாம். உதாரணத்திற்கு வருடாந்தம் 375 இலட்சம் கசெட்டுகளை மொத்தமாக வீடியோ ரேப்பதிவு செய்யக் கூடிய எட்டு பிரிவுகள் "சீப்ஸ்" சில் உள்ளன. "வீடியோ"வில் பதிவு செய்வதற்கான புதிய திரைப்படங்கள் மேலும் இல்லாததால் இந்த வீடியோ ரேப் பதிவு செய்யும் பிரிவுகள் இப்போது வேலைகள் எதுவுமின்றி உள்ளன. தொழில் நுட்ப நடவடிக்கைகள் எதுவுமேயில்லாத இத்தகைய தொழில் துறைகள் தவிர்க்கப்படவேண்டும்.

9. தொழிற்சாலைகளைச் சுயமாகவே நிர்மாணிப்பதற்கென காலியான காணித்துண்டுகளையும, நிர்மாணிக்கப்பட்ட வெளிகளையும் தற்போது உருவாக்கி வரும் வலயங்கள் குத்தகைக்கு வழங்கும். நிர்மாணிக்கப்பட்ட காணியில் உற்பத்தியை உடனடியாகவேஆரம்பிக்க முடியுமாதலால் தொழிலதிபர்கள் அதனையே விரும்புகிறார்கள். இதுவே "சீப்ஸ்"ஸின் அனுபவம். "சீப்ஸ்" தனது நிலப்பரப்பில் அளித்த 54 காணித் துண்டுகளில் ஏழு நிறுவனங்கள் மட்டுமே தொழிற்சாலைகளை நிர்மாணித்து உற்பத்தியை ஆரம்பித்தன. மறுபக்கத்தில் நிர்மாணிக்கப்பட்ட வெளிக்கான கோரிக்கைகள் மிக அதிகமாக இருந்தன. இதனால் ஆரம்பத்திலேயே அங்கீகாரம்பெற்று நிர்மாணிக்கப்பட்ட நிலப்பரப்புகளை "சீப்ஸ்" மூன்று மடங்காக்க வேண்டியேற்பட்டது அத்துடன் கணிசமான அளவுக்கு விஸ்தரிப்பது பற்றி இப்போது திட்டமிட்டு வருகின்றனர். புதிய வலயங்களின் அதிகாரிகள் தமது திட்டங்களை மேற்கொள்ளும்போது இந்த விடயத்தை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

(33 ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாநகரில் போக்குவரத்து நெருக்கடியும் தனியார் வாகனங்களும்

**பி. சி. எச். ரணசிங்கா**

கொழும்பு பல்கலைக்கழக புவியியல் பீடச் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி (திருமதி) பி. சி. எச். ரணசிங்க 1983ம் ஆண்டு மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நடத்திய போக்குவரத்து நெருக்கடி பற்றிய ஆய்வொன்றின் வெளிப்பாடே இந்த அறிக்கை. இந்த ஆய்வு முற்றிலும் ஒரு கல்வி நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் கிடைத்த தரவுகளை ஆராய்ந்த போது சில முடிவுகள் பரந்த அளவில் பொதுமக்களுக்கு நன்மையளிக்க கூடியதெனக் காணப்பட்டது. நகர வீதிகளில் தனியார் வாகனங்களைக் கட்டுப்படுத்தி, அதேவேளை சராசரிப் பயணிக்குச் சிறந்த பொதுப் போக்குவரத்துச் சேவை அளிக்கப்பட்டால் பல நன்மைகள் கிட்டுமென்ற பிரதான முடிவுக்குத் திருமதி ரணசிங்கா வந்துள்ளார். அந்த நன்மைகளில் சிக்கனத்தையும் அடங்கும். நகர வீதி அமைப்பை பரிபாலிப்பதற்குக் குறைந்த செலவே அதிகாரிகளுக்கு ஏற்படும்; மேலும், விஸ்தரிப்பதற்கான தேவைகளெதுவுமின்றி இப்போதைய மட்டத்திலேயே வீதிகளின் பரிமாணங்களை வைத்திருக்க முடியும்; எரிபொருள் நுகர்வு, வீதி முதலீடு ஆகியவற்றைக் குறைக்கமுடியும். வீதிப் பாதுகாப்பு, வேகக்கட்டுப்பாடு, சாரதித்துவத்தகுதி ஆகியவற்றை அமுல்படுத்துவதில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென மற்றொரு முக்கிய சிபார்சும் முன்வைக்கப்பட்டுள்ளது.

1983 மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நான் மேற்கொண்ட போக்குவரத்து ஆய்வொன்றின் வெளிப்பாடே இக் கட்டுரை. ஒரு கல்வி நடவடிக்கையாகவே இந்த ஆய்வு முற்றுமுழுதாக மேற்கொள்ளப்பட்டது. தரவுகளை ஆராய்ந்தபோது சில முடிவுகள் மக்களுக்கு நலன் பயக்கக்கூடியவை என்பதை உணர்ந்தேன். கொழும்பு நகரின் நுழைவாயில்களென நான் கருதிய பதினொரு இடங்களில் போக்குவரத்து எண்ணிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. கொழும்புக்குள் வந்த வாகனங்களும் கொழும்பைவிட்டு வெளியே சென்ற வாகனங்களும் எண்ணப்பட்டன. வாகனங்களின் தன்மையைக் கொண்டு எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்டது. சாதாரண வேலை நாட்களில் காலை ஆறு மணி முதல் மாலை 7-00 மணிவரை இந்த எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த வாகனங்களின் சிக்கலான தன்மை, குறிப்பாக அவதானிப்புகளைக் கடினமாக்கியது.

சாதாரண வேலை நாட்களில் காலை ஆறுமணி தொடக்கம் மாலை ஏழு மணிவரை நகரின் பதினொரு நுழைவாயில் களூடாகவும் உள்ளே வந்த, வெளியே சென்ற வாகனங்களை அட்டவணை விளக்குகின்றது. அட்டவணை ஒன்றின்படி. நகருக்குள் 68,815 பயணிகள் வாகனங்கள் வருகின்றன. 68,169 வாகனங்கள் நகரை விட்டு வெளியேறுகின்றன. நகரின் போக்குவரத்தைப் பொறுத்தவரை அரசாங்கதுறைப் பிரயாண வாகனங்கள் சிறிய விகிதாசாரத்திலேயே உள்ளன என்பதை இந்த எண்ணிக்கை காட்டுகின்றது. அதாவது, நகருக்குள் வரும் அரசாங்க பயணிகள் வண்டி 19 சதவீதமாகும். நகரை விட்டு வெளியே செல்லும் அரச பயணிகள் வண்டி 16சதவீதமாகும். நகருக்குள் வரும் தனியார் பயணிகள் வண்டிகள் 26 சதவீதமாகவும் நகரைவிட்டு வெளியே செல்லும் தனியார் பயணிகள் வண்டிகள் 22 சதவீதமாகவும் உள்ளன. உள்ளேவரும் தனியார் வாகனங்கள் 55 சதவீதமாகவும் வெளியே செல்லும் தனியார் வாகனங்கள் 62 சதவீதமாகவும் உள்ளன.

**தனியார் வாகனமொன்றின் சாதகங்கள்**

சொந்தமாகக் காரொன்றை வைத்திருப்பதில் இருக்கக்கூடிய சாதகங்களை நாமனைவருமே அறிவோம். குறிப்பாக அரசாங்க அல்லது வெகுஜனப் போக்குவரத்து குறைவாகவும் நம்பத்தகுந்ததாகவும் அல்லாதபோது சொந்தமாகக் காரொன்று இருக்க வேண்டுமென நாமனைவருமே விரும்புகிறோம். ஒரு மோட்டார் வாகனம் அதன் உரிமையாளருக்கு மட்டுப்படுத்தப்படாத சுதந்திரத்தையளிக்கிறது. தான் விரும்பியபடி விரும்பும்போது பயணம் செய்யலாம்; தரையில் செல்லும் ஏனைய பெரும்பாலான வாகனங்களையொத்த வேகத்திலோ அல்லது அதனைவிடக்கூடிய வேகத்திலோ செல்லமுடியும்; விரும்பும் எந்தப் பாதையாலும் செல்ல முடியும்; தான் விரும்பும்போது வாகனங்களை நிற்பாட்டவும் முடியும். சிலர் மோட்டார்வாகனத்தை பெரியதொரு கைப்பைக்கோ அல்லது ஒருவரின் வீட்டை விஸ்தரிப்பதற்கோ உவமையாகச் சொல்கிறார்கள். வர்த்தகரைப்போன்ற வேலை கூடிய ஒருவருக்கு மோட்டார்வாகனம் மிகவும் அவசியமானதாகும். ஆனால், ஒரு மோட்டார் வாகனமோட்டி பரிபூரண சுதந்திரம் கொண்டவரல்ல என்ற

மறைமுக உண்மையும் இக் கருத்தில் உண்டு. அவர் வேறு டலரில் தங்கி நிற்கவேண்டியவராக உள்ளார். சேவைகளின் பரிமாணம்; எரிபொருள், உதிரிப் பாகங்கள் போன்ற தொழில்துறை உற்பத்திப் பொருட்கள், வீதிப் பரப்பு ஆகியவற்றிலும் கூட அவர் தங்கிநிற்கவேண்டியவராயுள்ளார். அத்துடன் இயந்திரத் தொழில்நுட்ப வேலைகளுக்கு அவர் வேறு யாரிலாவது தங்கிநிற்க வேண்டியுள்ளது. இவ்வாறு தனியார் வாகன உரிமையாளரின் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டது.

## விபரீதமான நிலை

பஸ்ஸிலோ ரயிலிலோ மிகவும் வசதிகளற்ற தன்மைக்கு மத்தியில் பயணம் செய்யும் சராசரிப் பிரயாணி, நேரத்துடன் தன் வேலைத்தலத்துக்குச் செல்ல வேண்டுமென்பதற்காக மிகவும் நேரகாலத்துடனேயே வீட்டைவிட்டுப் புறப்படுகிறான். நாளின் ஏனைய நேரங்களிலும் இந்த நபர் கடினமாக வேலை செய்யவேண்டிய நிலையிலேயே உள்ளார். மாலை இவர் வீட்டுக்குச் செல்லும்போது சில வேளைகளில் இவரது பிள்ளைகள் நித்திரையாக இருப்பார்கள். ஆனால், மறுபுறத்தில் அந்தரப்படாமல் ஆறுதலாக வேலைக்கு வரும் கார் உரிமையாளருக்கு வெகுஜனப் போக்குவரத்தைப் பயன்படுத்தி அதனால் வேலைக்குத் தாமதமாக வரும் தன் ஏழைச் சகோதரனைத் தண்டிக்கும் உரிமை கூட உண்டு. காரில் பயணம் செய்யும் ஒருவருக்கு வீட்டிற்கு முன்னதாகவே போய்ச் சேரும் அதிர்ஷ்டமுண்டு. அத்துடன் மாலை வேளைகளில் ஓய்வாகப் பொழுதுபோக்கவோ நண்பர்கள், உறவினர்களிடம் விஜயம் செய்யவோ சுதந்திரமுண்டு. இவ்வாறு யாருடைய முதுகில் யார் பயணம் செய்வதென்ற பிரச்சினை எழுகிறது. மோட்டார் வாகனங்களில் பயணம் செய்யும் கொள்கை வகுப்பாளர்கள், பஸ்கள், ரயில்கள் ஆகியவற்றைப் போக்குவரத்துக்கென அளிப்பதற்கான தீர்மானங்களை எடுக்கும்போது திளைந்த உறவுகளையேனும் ஊக்குவிக்கப்படுகின்றன. பல்வேறு இயற்கைத் தொல்லைகளுக்கு ஆளாகக்கூடிய வகையில் பஸ் தரிப்பிடங்களிலும் ரயில் நிலையங்களிலும் தமது "பெறுமதிமிக்க" நேரத்தைக் கொள்கை வகுப்பாளர்கள் வீணாக்க மாட்டார்கள்.

### அட்டவணை 1

**காலை 6.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை நகருக்கு உள்ளே வந்த வாகனங்களும் வெளியே சென்றவையும்**

| | இ. போ. ச. | | தனியார் பஸ் | | மோட்டார் வாகனம்* | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | |
| உள்ளே வந்தவை | 12,904 | 19.0 | 17,980 | 26.0 | 37,931 | 55.0 | 68,815 |
| வெளியே சென்றவை | 10,883 | 16.0 | 15,208 | 22.0 | 42,078 | 62.0 | 68,169 |

* சகல அரசாங்க, தனியார்துறை வாகனங்களும் டாக்ஸிகளும் (4 சக்கரங்கள்)

## செலவு நெருக்கடி

மோட்டார் வாகனங்களைப்பாவிப்பதென்பது பல செலவுகளுக்கு வழிவகுக்கும். மோட்டார் வாகனங்களை வாங்குவதற்கு, இறக்குவதற்கு, பரிபாலிப்பதற்குச் செலவுகள் ஏற்படும். அத்துடன் சமூக நீதியின்மை, சூழல் அசுத்தம் ஆகியவற்றுக்கான செலவுகளும் ஏற்படும். இன்று சொந்தமாகக் காரொன்று வைத்திருப்பவர், தொழிலாளியொருவர் தனது முழுக் குடும்பத்துக்குமென மாதாந்தம் பெறும் வேதனத்தைவிடக் கூடுதலாகச் செலவழிக்க வேண்டியேற்படுகிறது.

நாட்டின் பெற்றோல் செலவை நாம் பார்ப்போமேயானால், ஒரேயடியாகத் தனியாக வாகனமொன்றைப் பாவிப்பதின் பொருளாதார அம்சங்களைப் புரிந்து கொள்ள முடியும். 1978ம் ஆண்டு பெற்றோலுக்கென 24 இலட்சம் ரூபா செலவழிக்கப்பட்டது. இன்று நாட்டு வருமானத்தில் 24 சதவீதம் எண்ணெய் இறக்குமதிக்குச் செலவு செய்யப்படுகிறது. இவற்றில் அரைவாசிப் பங்கினைத் தனியார் மோட்டார் வாகனங்கள் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

குறைவாகவுள்ள வளங்களுக்கான செலவுகள் இந்த விகிதாசாரத்தின் அளவுக்கு உண்டு என நம்புவது நியாயமற்றதல்ல. எனவே அந்நியச் செலாவணியையோ அல்லது வேறெந்த வளங்களையோ சேமிப்பதற்காகப் போக்குவரத்துக்கு ஊக்கமளிக்கப்படக் கூடாதென்றால், வெகுஜனப் போக்குவரத்தின் மீதல்ல கார்ப் பயணத்தின்மீதே முதலில் ஊக்கமிழக்கச் செய்யும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இலங்கையில் பஸ் ஓட்டி அல்லது ரயிலோட்டியைவிட தனியார் காரோட்டுபவருக்கு அண்ணளவாகப் பத்து மடங்கு எரிபொருள் அதிகமாகத் தேவைப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அத்துடன் பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்வதைவிட காரில் பயணம் செய்வது ஆறு அல்லது எட்டு மடங்கு செலவு அதிகமானது.

இலங்கையில் பல்வேறுவிதமான வாகனங்களின் எரிபொருள் பாவனைபற்றிய சரியான விபரங்களைப் பெறுவது கஷ்டமானது. இந்த நோக்குக்கென எரிபொருள் விற்பனைக் குறிப்புகள் இங்கு வைக்கப்படுவதில்லை. எனவே தான் சரியான விபரங்களைப் பெறுவது கஷ்டமானது. பல்வேறு விதமான வாகனங்களின் எரிபொருள் பாவனைபற்றிய சரியான பொருளாதார மதிப்பீட்டைச் செய்வது இதனால் இலேசானதல்ல. எனினும், கலனொன்றுக்கு ஓடும் மைல்களில் அதிக பயணிகளை ஏற்றிச்செல்லக் கூடியதாக வெகுஜனப் போக்குவரத்து இருப்பதால் அதில் எரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பொருள் சிக்கனமுண்டு. போக்குவரத்துக்குப் பயன்படுத்தக் கூடிய ஏனைய எரிபொருட்களுண்டு என்பது உண்மைதான். மெதனல் வாயு அல்லது பற்றரி அல்லது ஐதரசனைக் கொண்டு கூட காரினைச் செலுத்த முடியுமென்று சொல்லலாம், ஆனால், இவைபற்றிய நடைமுறைகள் இன்னமும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவையாக உள்ளன.

## குறைந்த பாரமேற்றும் அம்சம்

அட்டவணை 1ஐ நாம் பார்ப்போமானால் ஒரு நாள் வாகனப் போக்குவரத்தில் மோட்டார் கார்களே கூடிய விகிதாசாரத்தைக் கொண்டிருப்பதைக் காணமுடியும். இந்த மூன்றுவித வாகனங்களும் ஏற்றிச் செல்லும் பயணிகளின் விகிதாசாரத்தை நாம் மதிப்பீடு செய்வதானால், அதாவது இ. போ. ச. பஸ் சராசரி 50 பயணிகளையும் தனியார் பயணிகள் பஸ் 25 பயணிகளையும் மோட்டார் வாகனமொன்றுக்கு முழுக் கொள்வனவையும் ஏற்று அது 4 பயணிகளை ஏற்றிச் செல்லுமென மதிப்பிட்டால் கீழ்க்கண்ட எண்ணிக்கையை நாம் பெறலாம்.

இத்தகைய வித வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்ட பிரயாணிகளின் மதிப்பீடு எண்ணிக்கையையும் வீதத்தையும் அட்டவணை 2 காட்டுகிறது. இங்கு ஒரு நாளில் நகருக்குள் வந்த மொத்தப் போக்குவரத்தில் மோட்டார்கார்கள் மொத்த வாகன எண்ணிக்கையில் 55:12 சதவீதமானவை. எனினும், அவை 12.17 சதவீத பயணிகளையே ஏற்றியுள்ளன. இதே வேளை நகருக்கு வெளியே சென்ற போக்குவரத்து வாகனங்களில் 61.72 சதவீதமானவை கார்களாகும். ஆனால், அவை மொத்தப் பயணிகளில் 15.4 சதவீதப் பயணிகளையே ஏற்றியுள்ளன. இ. போ. ச. வாகனங்களின் பங்கு விகிதாசாரம் மிகவும் குறைவு , என்றபோதிலும் நகருக்கும் நகரிலிருந்து வெளியேயும் பெருமளவு வீத மக்களைக் கொண்டு செல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு இவையே பொறுப்பாகவுள்ளன. காலையிலும் மாலையிலும் போக்குவரத்து நெருக்கடி மிக்க நேரங்களில் பிரயாணிகளின் மதிப்பீட்டு எண்ணிக்கையையும் விகிதாசாரத்தையும் அட்டவணை 3 எடுத்துக் காட்டுகிறது.

இங்கு நான காலையில் போக்குவரத்து நெருக்கடிமிக்க நேரமான 7-00 மணியிலிருந்து 9-00 மணி வரையும் மாலை 5-00 மணியிலிருந்து 7-00 மணி வரையும் எடுத்துள்ளேன். இங்கு போக்குவரத்து நெருக்கடியான நேரத்தில் இ. போ. ச. பஸ் சராசரியாக 78 பயணிகளையும் தனியார் பயணிகள் வாகனம் 32 பயணிகளையும் மோட்டார் கார் 4 பயணிகளையும் ஏற்றிச் செல்வதாக நான் மதிப்பிட்டுள்ளேன். தனியார் பஸ்கள், மோட்டார் கார்கள் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது போக்குவரத்து நெருக்கடி மிக்க நேரங்களில் மிகக் கூடிய பயணிகளை இ. போ. ச. பஸ்கள் ஏற்றிச் செல்கின்றன. மோட்டார் கார்கள் மிகக் குறைந்த பயணிகளை ஏற்றிச் செல்கின்றன என்பதை இது காட்டுகிறது.

### வீதி நெருக்கடி

நிதி, திட்டமிடல் அமைச்சினால் பிரசுரிக்கப்பட்ட "இலங்கையில் போக்குவரத்துப் புள்ளிவிபரங்கள 1974—81" என்ற நூலினைப் பார்வையிடுபவர்கள், கடந்த நான்கு அல்லது ஐந்து வருடங்களில் இ. போ. ச. பஸ்கள் மேலும் சேர்த்துக்கொள்ளப்பட்டமையினால் விசேஷமெதுவும் இல்லையென்றபோதிலும் தனியார் பயணிகள் பஸ்கள், மோட்டார் கார்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையைக் காண முடியும். கடந்த ஐந்தாண்டுகளில் குறைந்தளவு பயணிகளை ஏற்றக்கூடிய வாகனங்கள் இலங்கையின் வீதிகளில் குறிப்பாகக் கொழும்பு நகர வீதிகளில் ஓடவிடப்பட்டன என்பதை இது குறிக்கிறது. நகர வீதிகள், இலங்கையிலுள்ள ஏனைய வீதி அமைப்பைவிட அநேகமாக அக

அட்டவணை — 2

காலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை வாகனங்களில் பயணிகள் மதிப்பீடு

| | இ. போ. ச. எண்ணிக்கை | % | தனியார் எண்ணிக்கை | % | மோட்டார் வாகனம் எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|---|
| உள்ளே வந்தவை | 645,200 | 51.76 | 449,500 | 36.06 | 151,724 | 12.17 |
| வெளியே சென்றவை | 544,100 | 49.79 | 380,200 | 34.70 | 168,312 | 15.40 |

லமானவை. எனினும், அவை இப்போது பெரும் போக்குவரத்து நடைபெறும் வீதிகளாகவுள்ளன. போக்குவரத்து நெருக்கடி மிக்க நேரங்களில் மட்டுமல்ல நாளின் பெரும்பாலான நேரங்களிலும் இந்த வீதிகளில் போக்குவரத்துகள் மிக அதிகமாகவுள்ளன. ஆரம்பத்தில் அதிக போக்குவரத்து நிகழாது என்ற நோக்கில் உருவாக்கப்பட்ட வீதிகளில் அதிகமானவை இப்போது அகலமாக்கப்பட்டு வருகின்றன. ஆனால், நகர வீதிகளை அகலமாக்குவதில் மேலும் மேலும் நிதி முதலிடக் கூடிய பொருளாதார நிலையில் நாமிருக்கிறோமாவெனச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

### சூழல் அசுத்தம்

நகர வீதிகளில் முன்னரைவிட இப்போது அதிக மோட்டார் கார்கள் ஓடுகின்றன என்பது போக்குவரத்து ஆய்விலிருந்தும் பிரசுரிக்கப்பட்ட தரவுகளிலிருந்தும் தெளிவாக விளங்குகிறது. போக்குவரத்து நெரிசலுக்கு இந்தக் கார்கள் காரணமென்பது மட்டுமல்ல; ஏனைய வாகனங்களைப் போல் அதே தாமதத்துக்கும் இவை இலக்காகின்றன; நகர முடியாமல் சிக்கியும் விடுகின்றன. குறைந்த வேகத்தையும் ஒரு வாகனம் கிலோமீட்டருக்கு கூடியளவு அசுத்தத்தை வெளிப்படுத்துகிறது என்பதையுமே இது காட்டுகிறது. அநேக இடங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் ஆங்காங்கேயுள்ள அயல்களில் அசுத்தப் பொருட்களின் செறிவுக் குறைவினை இது ஏற்படுத்தும். எமது போக்குவரத்து, தொழில்துறை ஆகியவற்றால் வெளியேற்றப்படும் உற்பத்திகளை இயற்கையே கையாள்கிறதென்ற நம்பிக்கை இருக்கின்றபோதிலும், அதிகளவு கழிவுப் பொருட்கள் வெளியாகும்போதும் போக்குவரத்து, தொழில்துறை ஆகியவற்றின் அசுத்தப் பொருட்கள் கட்டுப்பாடற்ற முறையில் சூழலைச் சேரும்போதும் தீங்கு ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் உருவாவது தவிர்க்கமுடியாதவை.

காஸோலின் என்ஜின்களைக் கொண்ட வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் வாயுகள் 150-200 வித்தியாச சேர்வைகளைக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது; இவற்றில் சிலவே தீங்கானவையெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கார்பன் ஒக்ஸைட், ஹைட்ரோ கார்பன், நைட்ரஜனின் ஒக்ஸைட்டுகள், ஈயத்தைக் கொண்டிருக்கும் சேர்வைகள் ஆகியவற்றின் உற்பத்திகளே மிகவும் கவனத்தை ஈர்த்துள்ளன. உள்ளெரி என்ஜினின் வழமையான, இடைஞ்சலற்ற இயக்கம் இருக்கும் போதே கூடிய சக்தியைப் பெறுவதற்காக ஆட்டோமொபைல் காசோலினுக்கு ஈயம் வழமையாகச் சேர்க்கப்படுவதுண்டு. எனினும், பரந்தளவிலும் துரிதமாகவும் வீதிப் போக்குவரத்து அதிகப்படுவதால் குறிப்பிடத்தக்களவு ஈயம் காற்றில் விடப்படுகிறதென்பதே இதன் அர்த்தமாகும். இலங்கையிலுள்ள நகர மக்களுக்கு ஈயத்தினால் பாதிப்பு ஏற்பட்டதென்பதை நிரூபிக்கும் சாத்தியம் இன்னும் கிட்டவில்லை. ஆனால் நீண்ட காலத்துக்குப் பின்னர் அல்லது மற்றைய பதார்த்தங்களுடன் சேர்வதால் ஏற்படும் விளைவுகள் மூலம் பாதிப்புகளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை — 3

**காலை 6.00 மணியிலிருந்து 9.00 மணிவரையும் மாலை 5.00 மணியிலிருந்து 7.00 மணிவரையுமான போக்குவரத்து நெருக்கடிமிக்க நேரத்தில் பயணிகளின் மதிப்பீடு**

| | இ. போ. ச. எண்ணிக்கை | % | தனியார் பஸ் எண்ணிக்கை | % | மோட்டார் கார் எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|---|
| உள்ளே வந்தவை | 236,625 | 60.98 | 123,584 | 31.85 | 27,768 | 7.15 |
| வெளியே சென்றவை | 174,300 | 55.93 | 96,000 | 30.80 | 41,308 | 13.25 |

சந்திக்கவேண்டிய ஆபத்துண்டு. இந்தப் போக்கு நேரத்துடன் கட்டுப்படுத்தப்படாவிட்டால், வாகனங்களிலிருந்து வாயுகளினால் ஏற்படும் பிரச்சினை மிகவும் மோசமாகலாமென நம்டலாம். வருடத்துக்கு வருடம் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நகர எல்லைக்குள் வந்து போகின்ற வாகனங்களை விட நாளின் பெரும்பகுதியும் நகர எல்லைக்குள்ளுள்ள வீதிகளில் ஓடித்திரியும் வாகனங்களும் கணிசமாக உள்ளன. எனவே கொழும்பு நகருக்குள் வாயு அசுத்தப்படுத்தலின் சுமை அதிகரிக்கலாமென எதிர்பார்க்கலாம்.

ஓசை, சமீப காலங்களில் மேலும் மேலும் கவனத்தை யீர்த்த ஒரு சமூகப் பிரச்சினையாகும். ஓசை இல்லாதிருத்தல், நல்ல சூழலுக்கான கோரிக்கையின் ஒரு முக்கிய அங்கமாகும், எனினும், சமூகத்தைப் பாதிக்கக்கூடிய ஆரோக்கியப் பிரச்சினையாகவும் மருத்துவப் பிரச்சினையாகவும் ஓசை வளர்ச்சியடைய முடியும். நகரில் ஓசை (சத்தம்) எழுவதற்கான பிரதான காரணிகளிலொன்று மோட்டார் வாகனமாகும். போக்குவரத்து ஓசை ஏற்கனவே மோசமாகி இருப்பதோடு மேலும் எரிச்சலையும் தொந்தரவையும் ஏற்படுத்துகிறது. வாகனங்களின் தனிப்பட்ட ஓசை மட்டத்தில் மட்டும் இது தங்கியிருக்கவில்லை. வாகன எண்ணிக்கை ஸ்திரமாக அதிகரித்து வருவதிலும் குறிப்பாக நகரில் பொருந்தாத தொழில் நுட்ப முறையில் அவை பாவிக்கப்படுவதும் இதற்குக் காரணங்களாகும்.

#### நிறுத்தும் வசதிகள்

போக்குவரத்து அமைப்பின் அங்கமே வாகனங்களை நிறுத்தும் வசதிகளாகும். போக்குவரத்து நெருக்கடிமிக்க நேரங்களில் மட்டுமல்ல, வேலை நாள் முழுவதும் நகர மத்தியில் குறிப்பாக நிறுத்தும் வசதிகளுக்கான கோரிக்கைகள் அதிகமாகவிருக்கின்றன. கொழும்பு பெருந் திட்டத்தின்படி 2001ம் ஆண்டில் நகர மத்தியில், 20,000 ஊழியர்களின் கார்களும் விஜயம் செய்யும் 10.000 பேரின் கார்களும் இருக்கும். இத்திட்டத்தின்படி தரைமட்டத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு 75 ஹெக்டர் நிலம் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இப்போது பொறுப்பற்ற, தர்க்க ரீதியற்ற, அக்கறையற்ற வாகன நிறுத்தும் நடவடிக்கைகளினால் குறிப்பாக பிரதான வீதிகளில் இத்தகைய நடவடிக்கைகளினால் போக்குவரத்து நெரிசல் பெறுமதியான நேரத்தை வீதியில் வீணாக்கல், தேவையின்றி எரிபொருள் செலவாதல், வீதியில் செல்வொருக்கு தொந்தரவையும் இலேசத்தையும் கொடுத்தல் போன்ற பிரச்சினைகள் மேலும் மோசமாகின்றன, இந்தப் பிரச்சினைகளை ஒரேயடியாக அழித்துவிடமுடியாது என்றபோதிலும் அவற்றை இரு முறைகளில் குறைக்கலாம். ஒன்று தனியான கார் நிறுத்துமிடங்கள் தேவை; மற்றது நகர வீதிகளில் கார்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவேண்டும்.

#### பாதசாரிகள்

பாதசாரிகள் வீதியைப் பயன்படுத்தும் உரிமையைப் பூரணமாகவே அசட்டை செய்துவிடமுடியாது. குறிப்பாகப் போக்குவரத்து நெருக்கடிமிக்க நேரங்களில் நகரமத்தியில் பெருமளவில் பாதசாரிகள் செல்வர். வாகனங்கள் செல்லும் பாதையில் பாதசாரிகள் நடமாட்டத்தைப் பூரணமாகவே ஒழிக்கவேண்டும். வீதியமைப்பில் தகுந்த இடங்களில் பாதசாரிகள் குறுக்குப் பாதை இருக்கவேண்டும். ஒவ்வொரு வீதியின் பக்கங்களிலும பக்க நடைபாதைகள் இருக்கவேண்டும். இப்பக்க நடைபாதைகள் அங்காடி வியாபாரத்துக்கோ கார்கள் நிறுத்துவதற்கோ பயன்படுத்தக் கூடாது.

#### விபத்துகள்

இப்போது நிகழும் விபத்துகளின் எண்ணிக்கை போக்குவரத்துத் திட்டமிடலாளர்கள் கவனிக்கவேண்டியதொரு முக்கிய அம்சமாகும். இன்று வீதி விபத்துகள் பாரிய அளவில் அதிகரித்துள்ளன. போக்குவரத்துச்செறிவு அதிகமாகவுள்ள கொழும்பு நகரப் பதியிலேயே கூடியளவு எண்ணிக்கையிலான விபத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளன வென்பதைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. 1980ம் ஆண்டு பொலிஸ் பிரிவுகளால் பதிவு செய்யப்பட்ட விபத்துகளின் மொத்த எண்ணிகையில் 25.27 சதவீதம் கொழும்பு பொலிஸ் பிரிவிலேயே நடைபெற்றுள்ளன. விபத்துகள், பொருளாதார செலவினை மட்டுமல்ல சமூகச் செலவினையும் ஏற்படுத்துகின்றன். வீதிகளில் மோட்டார் வாகனங்களைக் கட்டுப்படுத்தினால் விபத்துக்களை அடிமட்டத்துக்குக் குறைக்க முடியும்.

#### நகரில் மோட்டார் கார்கள் மீது கட்டுப்பாடு

ரயில் அல்லது பஸ் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தியடக்க விரும்பும் எந்த அரசாங்கமும் அதனைச் செய்யலாம். ஆனால் கார்ப் பயணத்தை அவ்வளவு இலகுவாகக் கட்டுப்படுத்திவிடமுடியாது. கார்கள் இறக்குமதி செய்யப்பட்டு தனிநபர்களுக்கோ அல்லது அரசாங்க, தனியார் துறைகளுக்கோ அவற்றின் உரிமை பெறப்பட்டுவிட்டால் இந்தக் கார் உரிமையாளர்கள் எந்நேரமும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்களைப் பாவிக்கும் உரிமையுடையவர்களாகிறார்கள். கார்ப் பாவனையின் மீது கடும் கட்டுப்பாடுவிதிப்பது கார்ப் பயணத்தினையும், பெற்றோல் பாவனையையும் குறிப்பிடத்தக்களவு குறைக்க முடியும். பெற்றோல் விலையில் குறிப்பிடத்தக்க உயர்வு, கூடிய வாகன நிறுத்தல் கட்டணம், வீதிப் பாவனைக்குக் கட்டணம் அல்லது பட்டணப் பகுதிகளில் கார்ப் பாவனை மீது தொடர்ச்சியான பல கட்டுப்பாடுகள் ஆகியன இந்த நடவடிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய சில விடயங்களாகும்.

போக்குவரத்து நெரிசல், காற்று அசுத்தமாகல், தனியார் கார்களால் உண்டாகும் ஓசை ஆகியவற்றை உலகெங்குமுள்ள பல நகரங்களினால் கட்டுப்படுத்த முடியாமல்போனபோது இவற்றுடன் எரிசக்தி நெருக்கடியும் சேர்ந்துகொண்டபோது சில காலங்களாகப் பல ஸ்தாபனங்கள் கார்ப் பாவனையில் கட்டுப்பாட்டினைக் குறிப்பாக நகர வீதிகளில் இக் கட்டுப்பாடு வேண்டுமெனச் சிபார்சு செய்தன. "அமெரிக்கர்களுக்கான பிரச்சினைக்குரிய தெரிவு" சம்பந்தமான நெல்சன் ரொக்பெல்லர் கமிஷன், பொதுப் போக்குவரத்துக்கான சர்வதேச யூனியன், பிரிட்டிஷ் நிர்மாண வியலாளர்களின் றோயல் இன்ஸ்ரிரியூட் ஆகியவை இக்கட்டுப்பாடுகள்பற்றிச் சிபார்சு செய்தன. தனியார் மோட்டார் வாகனங்களின் பாவனையைக் கட்டுப்படுத்த உலகெங்குமுள்ள பல நகரங்கள் உறுதியான முடிவுகளையெடுக்கின்றன. போக்குவரத்துச் சமிக்ஞையுள்ள இடங்களில் பஸ்களுக்கு முன்னுரிமை, கார்களுக்கு ஒருவழிப் பாதையும் பஸ்களுக்கு இருவழிப் பாதையும், நகருக்கு வரும் கார்களுக்குக் கட்டணம் அறவிடல், பாதசாரிகளுக்கு மட்டுமேயான நகர மத்தி, பொதுப் போக்குவரத்துக்கான நகர மத்தி ஆகியவை சில நேரடியான, மறைமுகமான கட்டுப்பாடுகளாகும். மோட்டார் கார்ப் பாவனையைக் கட்டுப்படுத்துவதில் "ஒபெக்" எண்ணெய் விலை உயர்வு உதவியதால் சில நாடுகள் இந்த விலை உயர்வை மறைமுக ஆசீர்வாதமென வரவேற்க முனைகின்றன.

சராசரிப் பயணிக்குச் சிறந்த சேவையை அளிக்கும் அதேவேளை நகர வீதிகளில் தனியாருக்குச் சொந்தமான கார்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தினால் நகர வீதியமைப்பை பரிபாலிப்பதற்குக் குறைந்த செலவே அதிகாரிகளுக்கு ஏற்படும். அத்துடன் வீதிகளின் பரிமாணத்தைமேலும் விஸ்தரிக்காமல் இன்றைய நிலையிலேயே வைத்திருக்கமுடியும். சிறந்த பொதுப் போக்குவரத்துச் சேவையை அளிப்பதன் மூலம் தனியார் கார்ப் பாவனையாளர்களில் ஒரு பதினைரையாவது பஸ்களிலோ ரயில்களிலோ பயணம் செய்யுமாறு ஊக்குவித்தல் அது பெற்றோல் நுகர்வு, வீதி முதலீடு ஆகியவற்றைச் சிறிதளவு குறைக்கும். இதே வேளை வீதிப் பாதுகாப்பு, வேக மட்டம், சாரதித் தகுதி ஆகியவை தொடர்பாகப் பல கடும் நடவடிக்கைகளையெடுக்க வேண்டும்.

பொருளாதாரத்தில் பல பாதகமான அம்சங்களும் கிளம்பியுள்ளன. நிதி- திட்டமிடல் அமைச்சர் திரு. றொனி டி மெல் இவ்வருடம் அரசாங்க அதிபர்களுக்கு நிகழ்த்திய உரையொன்றில் கூறியதன் சுருக்கம் இது "நாம் மிகக் கணிசமான ஆதாயங்களை ஈட்டியிருக்கும் அதே சமயத்தில் பிரமாண்டமான பொருளாதாரப் பிரச்சினைகள் இன்னும் இருந்து வருகின்றன. நாம் இன்னும் எதிர்நோக்கும் நிதி பொருளாதாரப் பிரச்சினைகளின் பேராபத்தான தன்மையையும், அவற்றை நாம் வெல்வதாயின் அரசாங்கம் எடுக்கவேண்டிய பல கடினமான., வேதனை நிறைந்த முடிவுகளையும்மூடிமறைக்க நான் ஒருபோதும் முயன்றதில்லை"

(17 ம் பக்கத்தொடர்ச்சி)

முந்தின ஏழுவருட காலத்தில் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 16சத விகிதமாயிருந்த சராசரி இக்காலத்தின்போது மொ. உ. உ. யில் 27 சதவிகித சராசரிக்கு உயர உதவியது.

அரசாங்கச் செலவுகள் தொடர்ந்து விரிவடைந்து வந்தமையும் தனியார்துறையில், அதிகரித்த நடவடிக்கைகளும், நாம் ஏற்கெனவே எடுத்துக் காட்டியதுபோல, நாணய முறையில் ஒருபொது விஸ்தரிப்பு ஏற்படுவதற்கு அடிகோலியது.

இது 1983ம் ஆண்டின் கடைசி மாதங்களில் தோன்றிய நிலைமைகளால் மேலும் மோசமடைந்தது. உற்பத்தி—முதலீட்டு மட்டங்கள் அதிகரித்த அதே வேளையில்,

(27 ம் பக்கத்தொடர்ச்சி)

இறுதி ஆராய்வில் இலங்கை, தென்கொரியாபோன்ற சிறிய நாடுகளும் நகர நாடுகளான ஹொங்கோங், சிங்கப்பூர் போன்றவையும் தத்தமது சுதந்திர வர்த்தக வலயங்களூடாக ஏற்றுமதிக்கான அபிவிருத்தியை ஈட்டுவதற்கு நியாயபூர்வமான எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்க முடியும். ஆனால் இந்தியாவைப்போன்ற பெரிய நாட்டைப் பொறுத்தவரை அதற்கிருக்கும் அபரிமிதமான உள்ளூர்ச் சந்தையையும் கொண்டு நோக்கும்போது அபிவிருத்தியின் வளர்ச்சியால் வரும் ஏற்றுமதியே சரியான உபாயமாகும். இதற்கு சுதந்திர வர்த்தக வலயம் போன்ற சுறுசிய நடவடிக்கைகள் பெருமளவு பயன்தரக்கூடியவையல்ல. தொழில்துறைகள் பலம்பெற்று, ஆதரவுகளைதவுமின்றிச் சர்வதேச ரீதியாகப் போட்டியிடக்கூடிய அளவுக்கு வர்த்தக, தொழில்துறைக் கொள்கைகள் தாராளமயப் படுத்தப்பட்டால் மட்டுமே ஏற்றுமதியில் உண்மையான வீச்சு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஷனல் கிரபிக் மெகசின் லிமிட்டட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org